# தமிழரசு

16-11-1979 50 காசு.

சமூக நலச் சிறப்பிதழ்





இராமநாதபுரம் மாவட்டம், எமனேஸ்வரம் பகுதியில் நெசவாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கக் கட்டடம் (18—10—79) திறந்து வைக்கப்பட்டது.



இளையாங்குடி அரசினர் மருத்துவமனைக்கு (18—10—79) அடிக்கல் நாட்டப்பட்டது.

# தென்மாவட்டங்களில் முதல்வர்




இராமநாதபுரம் மாவட்டம் எம். ரெட்டியபட்டி அருகில் புதிய வழித் தடங்கள் (19—10—79) துவக்கி வைக்கப்பட்டன.



இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடி கிராமத்தில் விவசாயிகளுக்கு (19.10.79) தென்னங் கன்றுகள் வழங்கப்பட்டன.





மதுரை மாவட்டம் நத்தம், பெரியகுளம் பகுதியில் குடிநீர்த் திட்டம் (21—10—79) துவக்கி வைக்கப்பட்டது.

# 1979-80 ஆம் ஆண்டு

# முதல் துணை மதிப்பீடு - முக்கிய திட்டங்கள்

தமிழரசு மலர்: 10 இதழ்: 10 16-11-1979

தமிழ்நாட்டில் சிறு உழவர் மேம்பாட்டு நிறுவன வளர்ச்சி வட்டாரங்கள் 267-லும், பிற வளர்ச்சி வட்டாரங்களில் 31-லும் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான 2.76 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரியில், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டத்தின்கீழ் பால் மாவுத் தொழிற்சாலை ஒன்று 1.75 கோடி ரூபாய்ச் செலவில் நிறுவப்படும். உபரி நிலங்களையும், பயிரிடத்தக்க தரிசு நிலங்களையும் ஒப்படை செய்யும் பணியை விரைவுபடுத்தும் பொருட்டு, தனிப் பணியாளர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கென ஆண்டொன்றுக்கு 23.77 இலட்சம் ரூபாய் செலவு ஆகும். இந்த ஆண்டில் 25 முறைப்படுத்தப்பட்ட அங்காடிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்று, 25 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.



மாண்புமிகு நிதியமைச்சர்
**திரு கி. மனோகரன்**

சென்னையிலுள்ள தண்டையார்ப்பேட்டையிலும் அண்ணா நகரிலும் அமைந்திருக்கின்ற 100 படுக்கைகள் கொண்ட மாநகர எல்லைப் பகுதி மருத்துவ மனைகளைத் தொடங்கவும், சென்னை எழும்பூரிலுள்ள அரசினர் கண் மருத்துவ மனையில் 146 படுக்கைகள்கொண்ட வார்டு ஒன்றைத் தொடங்கவும், அரசினர் பொது மருத்துவ மனையில் சில சிறப்புத் துறைகளைத் தொடர்ந்து நடத்தவும் 41.67 இலட்சம் ரூபாய் செலவிடுவதற்கு அரசு ஏற்பளிப்பு வழங்கியுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 40 நகரங்களில், தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம், காப்புறுதி செய்து கொண்டவர்களின் குடும்பத்தினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதற்காக ஆண்டொன்றுக்கு 22.75இலட்சம் ரூபாய் செலவிடப்படும். இவ்வாண்டில் 152 மேல்நிலைப் பள்ளிகள் கூடுதலாகத் தொடங்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப 2,000 பட்டதாரி ஆசிரியர் பதவிகளையும், 750 மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் பதவிகளையும் ஏற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. மேலும் அரிசன வகுப்பினர், பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள், மேல்நிலைப் பள்ளிக் கல்வி பயில்வதற்குப் படிப்புதவித் தொகைகள் வழங்கவும் அரசு அனுமதித்துள்ளது. இத் திட்டத்திற்கு 1.07கோடி ரூபாய் செலவாகும்.

கடந்த மாதத்தில் ஈரோட்டில் பெரியார் மாவட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. புதிதாக அமைக்கப் பெற்றுள்ள இந்த மாவட்டத்தில், பல்வேறு அலுவலகங்களை நிறுவுவதற்காக, 22.64 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு துணை மதிப்பீடுகளில் கேட்க்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் மதுரை மாநகரில் உலகத் தமிழ் மாநாடு நடைபெறவிருக்கிறது. இதனைச் சிறப்பாக நடத்தும் பொருட்டு, மதுரை மாநகரை மேம்படுத்துவதற்காகப் பல நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. இதற்கென இம் மதிப்பீடுகளில், 1.43 கோடி ரூபாய் செலவுக்கு அவையின் ஒப்புதல் கேட்கப்பட்டுள்ளது.

சாலைகளை மேம்படுத்தவும், தனியார் சாலைகள் மேம்பாட்டு நிதி ஒன்றை ஏற்படுத்தவும், சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதற்காக 2.5 கோடி ரூபாய் இம் மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. பல்வேறு போக்குவரத்து நிறுவனங்களுடைய நிதி நிலைமையை வலுப்படுத்துவதற்காக 3.06 கோடி ரூபாய் வழங்க அரசு அனுமதித்துள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதிக் கூட்டுறவுச் சங்கம், கிராமப் பகுதிகளில் வீடு கட்டும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இத்துணை மதிப்பீடுகளில், அச்சங்கத்திற்கு 2 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்க அரசு வகை செய்துள்ளது.

அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் ஆகியோருக்கு மற்றொரு தவணை அகவிலைப்படி வழங்குதல் குறித்து அரசு அண்மையில் அறிவித்துள்ளது. காவல் துறைப் பணியாளர்களுக்கும் தீயணைப்புப், பணித் துறை பணியாளர்களுக்கும் இடையூறுப் படி ( Risk Allowance ) வழங்கப்பட்டுள்ளது. கிராமப் பகுதிகளில் பணிபுரிகின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டு, கிராமப் பணி ஊக்கப் படி வழங்கும் புதிய திட்டமொன்று தற்போது முதன் முதலாகக் கொண்டு வரப்பட்டுள்ளது.

கிராம அதிகாரிகளுக்கும் பணியாளர்களுக்கும் அளிக்கப்படும் மதிப்பூதியத்தொகை கூடுதலாக்கப்படுகிறது

[மாண்புமிகு நிதி அமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1979-80-ஆம்ஆண்டின் முதலாவது துணை மதிப்பீடுகளை முன் வைத்து 27-10-79 அன்று ஆற்றிய உரையிலிருந்து]

# நலிவுற்றோர் துயர்துடைக்கும் அரசு

**மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்**
**செல்வி பி.டி. சரசுவதி**

கடந்த இரண்டாண்டுக் காலமாகத் தமிழகத்தில் சமுதாயநலனில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதை மக்கள் மகிழ்ச்சியோடு கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள். சமூகநலத்துறை என்று கூறும்பொழுது அது ஏழை எளியவர்களையும், திக்கற்றவர்களையும், ஆதரவற்றவர்களையும், வாழ்க்கையின் அடித்தளத்தில் தத்தளித்துக் கொண்டிருப்பவர்களையும், விதவைச் சகோதரிகளையும், உடல் ஊனமுற்றவர்களையும், அநாதைக் குழந்தைகளையும், மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், சந்தர்ப்பவசத்தால் தவறிழைத்த இளங்குற்றவாளிகளையும் பராமரிக்கின்ற மிகப்பெரிய பொறுப்பேற்றிருக்கின்ற துறையாகும். இந்த இரண்டாண்டுக் காலத்தில் இந்தத் துறையில் தீவிரமான திட்டங்கள் பல தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவர் அவர்களைப் பொறுத்த அளவில் தாய்க்குலத்தின்மீது அவர் காட்டுகின்ற பாசத்தின் அறிகுறியாகவும், குழந்தைகள்மீது அவர் வைத்துள்ள அன்பின் அறிகுறியாகவும், வயதானவர்கள்மீது கொண்ட அக்கறையின் காரணமாகவும் பல்வேறு திட்டங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துக் கொண்டு வருகிறார்.

### குழந்தைகள் நலம்

இந்த ஆண்டு அனைத்துநாட்டுக் குழந்தைகள் ஆண்டு என்பதனை ஒட்டி சமூகநலத் துறை மிகச் சிறப்பான திட்டங்களைத் தீட்டி இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ''குழந்தைகள் நல வாரியம்' அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டினை எப்படிக் கொண்டாட வேண்டுமென்பதற்காகச் சென்ற ஆண்டே திட்டங்களைத் தீட்டி உள்ளது.



அதன்படி இந்த ஆண்டு ஜனவரி முதல்தேதி அன்று தமிழகம் எங்கும் உள்ள அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு முத்திரை பொறிக்கப்பட்ட போர்வைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

தமிழகம் பூராவும் குழந்தைகள் கண்காட்சிகள் , குழந்தைகளுக்கான சிறப்பு விளையாட்டுப் போட்டிகள் ஆகியவை நடத்தப்பட்டு வெற்றி பெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், எட்டாவது வகுப்புவரை படிக்கின்ற உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உதவித்தொகை அளிக்க சமூக நலத் துறை முன்வந்துள்ளது. அவர்கள் இலவசமாகப் பள்ளிக்குப் பயணம் செய்ய பஸ் பாஸ்கள் கொடுக்கவும் சமூக நலத் துறை விழைந்துள்ளது.

மேலும், ஆயிரம் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை அவயவங்களும் காது கேட்கும் கருவிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

### ஆதரவற்றோர் இல்லங்கள்

தமிழக அரசின் வரலாற்றிலேயே சமூக நலத்துறையால் ஆதரவற்ற குழந்தைகளுக்கென அநாதை இல்லங்கள் ஏற்படுத்தப்படவில்லை. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆசியோடு

சென்னை, மதுரை, சேலம், குமரி மாவட்டங்களில் அநாதை இல்லங்கள் ஏற்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இது தவிர மனநிலை வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கென வும் ஒரு நிலையத்தைச் சமூக நலத்துறை நடத்த உள்ளது.

**குழந்தைகள் காப்பகங்கள்**

தமிழகம் எங்கும் சமூகநலத் துறையின் கீழ் 4,100 குழந்தைகள் காப்பகங்கள் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 50 அரிசனக் குழந்தைகள் காப்பகங்களும், 30 மலை வாழ்மக்கள் குழந்தைகள் காப்பகங்களும் உட்பட 200 குழந்தைகள் காப்பகங்கள் புதிதாக ஆரம்பிக்கப் படுகின்றன.

அமெரிக்க 'கேர்' நிறுவன உதவியுடன் இந்தக் காப்பகங்கள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகட்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் பாலூட்டும் தாய்மார்களுக்கும், சத்துணவு வழங்குகின்றன. சென்னை, மதுரை, தர்மபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ப்புத் திட்டமும், சென்னை மாநகரில் உலக வங்கி நிதியுடன் தாய்சேய் நலத் திட்டமும், செவ்வனே செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட குழந்தைகள்நலத் திட்டத்திற்காகச் சமூக நலத் துறை ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய் செலவு செய்து வருகிறது.

**சிறப்புச் சத்துணவுத் திட்டம்:**

தமிழக அரசின் வரலாற்றிலேயே முதன்முறையாக இளம் சிறார்களுக்குச் சத்துணவு அளிக்கின்ற மிகப்பெரிய திட்டமொன்று உலகவங்கி நிதியோடு சுமார் 51 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட இருக்கிறது.

1980ஆம் ஆண்டு தொடங்கப் படவிருக்கின்ற இத்திட்டத்தின் மூலமாகத் தமிழகத்தில் 6மாவட்டங்களில் 6 மாதம் முதல் 3 வயதுக்குட்பட்ட 11 இலட்சம் குழந்தைகளுக்கும் 27 இலட்சம் பாலூட்டுகின்ற தாய்மார்களுக்கும், கர்ப்பிணிப்பெண்களுக்கும் சத்துணவு வழங்கப்படவிருக்கின்றது. 13,500 குழந்தைகள் காப்பகங்கள் துவக்கப்பட இருக்கின்றன. இத்திட்டத்தின் பயனாக 20 ஆயிரம் பெண்களுக்கும், ஆயிரம் ஆண்களுக்கும் வேலை வாய்ப்பு ஏற்படும்.

**மகளிர் வேலை வாய்ப்பு**

நாடு சுதந்திரம் பெற்று ஏறக்குறைய 32 ஆண்டுகள் ஆகியும் கிராமப்புறப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தவேண்டும்என்று இதுவரை எந்த அரசும் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவரின் தலைமையிலான இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்புதான் கிராமப்புறப் பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றவெனப் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புறப் பெண்கள் வீட்டிலிருந்தபடியே வேலைவாய்ப்பைப் பெறத்தக்கதாகச் சுமார் 25 இலட்சம் ரூபாய் சமூக நலத் துறைக்கென ஒதுக்கியிருக்கிறார்கள்.

இத்திட்டத்தின்கீழ் கூட்டுறவு



முறையில் தீப்பெட்டித்தொழில் நிலையங்கள் அமைத்தல், சாக்கட்டி தயாரித்தல், மெழுகுவர்த்தி தயாரித்தல், கவர் தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், பாய் முடைதல், புத்தகம் கட்டுதல் ஆகிய தொழிற் கூடங்கள் பல மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் முழுமையாகச் செயல்படும்பொழுது தமிழகம் முழுவதும் எட்டு மாவட்டங்களில் அறுநூறு தொழில் மையங்கள் ஏற்படுத்தப்பட்டு ஏறக்குறைய 20 ஆயிரம் பெண்கள் பயனடைவார்கள்.

மதுரை மாவட்டத்தில் உள்ள



திருமங்கலம் தொகுதியில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆரம்பித்துவைத்த இத் திட்டம் செயல்படத்துவங்கி இன்றைய தினம் பெண்கள் வீட்டிலிருந்தபடியே வேலை வாய்ப்பினைப் பெற்று ஊதியம் பெறுகிறார்கள்.

மதுரை நகரிலும், சென்னை வியாசர்பாடியிலும் புத்தகம் கட்டுதல், கவர் தயாரித்தல் ஆகிய தொழிற்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு நூற்றுக்கணக்கான பெண்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். இதைத் தவிர வீட்டிலிருந்தபடியே பெண்கள் இட்டிலிக்கடை, பலகாரக் கடை, பூ வியாபாரம், பழ வியாபாரம், விபூதி குங்குமம் தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் ஆகிய சிறுதொழில்கள் நடத்தத் தேவையான மூலதனத்தைத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து நீண்ட காலக் கடனாகச் சமூக நலத்துறை பெற்றுத்தருகிறது.

சென்னை நகரில் மட்டும் சுமார் 2,500 ஏழைச் சகோதரிகளுக்கு இம்மாதிரியான கடன் தொகை பெற்றுத்தரப்பட்டுள்ளது. மதுரை நகரிலும் நூற்றுக் கணக்கான சகோதரிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர்.

**உடல் ஊனமுற்றோர் நலம்**

உடல் ஊனமுற்றோர் நலம், காக்கச் சமூக நலத்துறை அமைச்சரின் தலைமையில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாரியத்தின் வாயிலாக உடல் ஊனமுற்றவர்கள் பயிற்சி நிலையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். சுய வேலை வாய்ப்புப் பெறுகிறார்கள். செயற்கை அவயவங்கள் வாங்குவதற்கும் ஊன்றுகோல்கள், முச்சக்கர வண்டிகள் ஆகியவை வாங்குவதற்கும் நிதி உதவி பெறுகிறார்கள்.

**உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பு**

உடல் ஊனமுற்றோர் வேலை வாய்ப்பிற்கெனத் தமிழக அரசின் சரித்திரத்தில் முதன்முறையாக ஆயிரம் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பெட்டிக் கடைகள் வைத்து நடத்த சுமார் நான்காயிரம் ரூபாய் கடன் உதவி அளிக்கப்படுகிறது. இதில் ரூபாய் ஐநூறு, சமூக நலத்துறை அளிக்கும் மானியம் ஆகும்.





மேலும் உடல் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் வேலை வாய்ப்பினை அளிக்கவும் இரண்டு புதிய தொழிற்சாலைகள் சேலம், மதுரை மாவட்டங்களில் துவங்கப்படவிருக்கின்றன. ஏற்கெனவே சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் உள்ள தொழிற்சாலை விரிவுபடுத்தப்படும். இந்தத் தொழிற்கூடங்களில் முச்சக்கர வண்டிகள் பெட்டிக்கடைகள் சிறிய நுண்கருவிகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படும். இந்த அரசு பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுக் காலத்தில் உடல் ஊனமுற்றவர்களின் வேலை வாய்ப்பிற்கென எடுத்துக்கொண்ட தனி அக்கறையின் காரணமாக அரசு அச்சகம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் ஆகிய நிறுவனங்களில் அதிக அளவில் உடல் ஊனமுற்றவர்களை வேலைக்கு அமர்த்தி அதற்காக மத்திய அரசின் பரிசுகளைப் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வயோதிகர் நலம்

17 ஆண்டுக் காலமாகத் தமிழகத்தில் முதியோர்களுக்கென உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை எந்த அரசும் இவர்களின் நலனில் அக்கறை கொண்டு இத்தொகையை உயர்த்தவேண்டும் என்று எண்ணியதில்லை. கருணை உள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் இந்த ஆண்டுதான் முதியோர் உதவித்தொகையை ரூபாய் இருபதில் இருந்து, ரூபாய் இருபத்தைந்தாக உயர்த்தி இருக்கின்றார். மேலும் அவர்களது மானம் காக்க ஆண்டுக்கு இருமுறை அதாவது பொங்கல் திருநாளிலும், சுதந்திர நாளன்றும் புத்தாடைகள் வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்த ஆண்டு சுதந்திர நாளன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இத் திட்டத்தினைத் துவக்கி வைத்து முதியோர்களுக்குப் புத்தாடைகள் வழங்கிய போது அந்த வயது முதிர்ந்தவர்கள் இந்த அரசினையும் புரட்சித் தலைவர் அவர்களையும் நெஞ்சார வாழ்த்திய காட்சி மறக்க முடியாத ஒன்றாகும்.



தமிழக அரசின் வரலாற்றில் முதன்முறையாக விதவைகள் வழிகாட்டி அமைப்பு நிலையங்கள் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை ஆகிய நான்கு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. விதவைச் சகோதரிகளின் கணவன்மார்கள் விட்டுச் சென்ற ஓய்வூதியம் மற்றும் ஈட்டுத்தொகை ஆகியவைகளைப் பெற்றுத்தருவதையும் அவர்களது குழந்தைகளுக்குப் படிப்பு வசதி போன்றவைகளைச் செய்து தருவதையும் இந்நிலையங்கள் தீவிரமாகச் செயல்படுத்தி வருகின்றன. ஆண்டொன்றுக்கு ரூபாய் 3,000க்கும் குறைவான வருமானம் உள்ள விதவைச் சகோதரிகளின் குழந்தைகட்கு இந்த நிலையம் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் இலவசமாக வழங்கி வருகின்றது. மேலும், இந்த அரசு விதவைச் சகோதரிகளின் உதவித்தொகை பெறுவதற்கான வயது வரம்பை 45ல் இருந்து 40 ஆகக் குறைத்துள்ளது. இதனால் சுமார் ஐயாயிரம் விதவைச் சகோதரிகள் கூடுதலாகப் பயனடைகிறார்கள்.

இந்த அரசின் நோக்கமெல்லாம், வாழ்க்கையின் அடித்தளத்தில் இருப்பவர்களின் வறுமையைப் போக்கி, அவர்களின் அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்து, கிராமப்புறங்களில் உள்ள மகளிர்க்கு வேலை வாய்ப்பினை உருவாக்கி, ஊட்டமில்லாது வாடுகின்ற குழந்தைகட்குச் சத்துணவு அளித்து, உடல் ஊனமுற்றவர்களுக்கு இன்னும் அதிகமான முறையிலே வேலைவாய்ப்பினை உருவாக்கி, விதவைச் சகோதரிகள் துயர் துடைத்து வாழவைக்கவேண்டும் என்பது தான்.

தமிழக அரசின் இன்றைய திட்டங்கள் முழுமையாகப் பயனளிக்கும்பொழுது, தமிழக மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய சகாப்தம் உருவாகும் என்பதில் ஐயமில்லை.

# அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் குழந்தைகள் நலம்

ஏ. எஸ். அஹ்லுவாலியா ஐ.ஏ.எஸ்.,
ஆணையர் மற்றும் செயலர், சமூக நலத்துறை.



மனித குலத்தின் வளர்ச்சி, குழந்தைகள் நல்ல முறையில் பேணி வளர்ப்பதைப் பெரிதும் சார்ந்ததாகும். பொருளாதார வளர்ச்சி வேறு, சமுதாய வளர்ச்சி வேறு. பொருளாதார வளர்ச்சிக்குச் சமுதாய வளர்ச்சி மிக முக்கியமானதாகும். எத்திட்டமும் சிறிது காலம் காத்திருக்கலாம். ஆனால், குழந்தைகள் நலம் பேணும் எத்திட்டமும் காலந்தாழ்த்த இயலாது. இப்பின்னணியில்தான் குழந்தைகள் நலத் திட்டங்களைக் காணவேண்டும்.

உடலாலும், உள்ளத்தாலும் குழந்தைகள் வயது வந்தவர்களைவிட மெலிந்தவர்கள். எனவே, அவர்களின் நலத் திட்டங்களுக்கு நிதியும் மற்ற உதவிகளும் மிக அதிக அளவில்தேவை. ஊட்டச்சத்துக் குறை, குழந்தைகளுக்கு நிரந்தரமான, சரிசெய்ய இயலாத, மூளை வளர்ச்சிக் குறைவை ஏற்படுத்துகிறது. வறுமை, இவர்களது சத்துக் குறைவான நிலையினை மேலும் அதிகப்படுத்துகின்றது.

ஆசிய நாடுகளிலேயே இந்தியா தான், முதன் முதலில் ''யூனிசெப்'' பின் சிபாரிசினை ஏற்றுக் குழந்தைகளுக்கான ஒரு தேசியக் கொள்கையினை வகுத்தது. 1973ல், குழந்தைகள் பிறப்பதற்கு முன்பும், குழந்தைகள் பிறந்த பின்பும் தேவையான வசதிகளை மாநில அரசுகள் நல்கவேண்டுமென மத்திய அரசு தீர்மானித்தது. 1974ல் முழுமையான தேசிய கொள்கை வரையறுக்கப்பட்டு ''தேசிய குழந்தைகள் வாரியம்'' ஏற்படுத்தப்பட்டது.

இக்கொள்கைகளுக் கிணங்க, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் தொண்டு மையங்கள் ஊட்டச்சத்துக் குறைவான குழந்தைகளுக்கான தொண்டு செய்து வருகின்றன. ஆனால், இத்திட்டங்கள் இப் பிரச்சினையில் ஒரு சிறு பகுதியினையே தீர்க்க முடிந்தது. இப்பிரச்சினையினைச் சமாளிக்க பெரியதொரு முயற்சி தேவை. எனவே, இவ்வரசு இப் பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டை ஓர் ஆரம்பமாக எடுத்துக் கொள்கிறது.

இச்சத்துணவுக் குறைவினைப் போக்கி, குழந்தைகளின் வாழ்வு வளம் பெற, இவ்வரசு, உலக வங்கியின் நிதி உதவியுடன் ஒரு ஊட்டச்சத்து வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த உள்ளது. இத்திட்டம் 6 மாதம் முதல் 5 ஆண்டுகள் வரை உள்ள குழந்தைகளையும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்களையும் பேணிக் காத்து அவர்களுக்கு வேண்டிய ஊட்டச்சத்தினை அளிக்கும். இத்திட்டத்தில் சத்துணவு வழங்கல், மருத்துவ வசதி வழங்குதல் மற்றும் சத்துணவுக் கல்வி அளித்தல் ஆகியவை உள்ளடக்கம். முதலமைச்சர் குழந்தைகள் நிதிக்காக ரூ. 1 கோடி திரட்ட எடுக்கப்பட்டிருக்கும் இவ்வரசின் முடிவு இம்மாநிலத்தில் குழந்தைகள் நலத் திட்டங்களின் செம்மையினைக் காண்பிக்கும்.

இம்மாநிலத்திலுள்ள 2.35 இலட்சம் உடல் ஊனமுற்றோரில் 75 ஆயிரம் பேர், 16 வயதிற்குட்பட்டவர்கள். இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டிலிருந்து 3 அல்லது 5 ஆண்டுகளில், இந்த உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை உறுப்புக்கள், காது கேட்கும் கருவிகள் மற்றும் தேவையான இதர கருவிகள் வழங்கப்படும். மேலும் உடல் ஊனமுற்ற, 8வது வரையில் படிக்கும் குழந்தைகளுக்குப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்கென ரூ. 25 அளிக்கும் திட்டமும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. கண் பார்வை இழந்தோர், சென்னை நகர் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்யும் வசதி ஏற்கெனவே உள்ளது. அதேபோல் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் இலவசப் பேருந்து வசதி அல்லது ரூ 10 முதல் ரூ.15 வரை ரொக்கமாக வழங்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. இக்குழந்தைகளின் நலனுக்கென நிதி திரட்ட, சிறப்புப் பரிசுத் திட்டம் ஒன்றும் பரிசீலனையில் உள்ளது.

வருகிற நிதியாண்டில் அனாதைக் குழந்தைகள் அனைவருக்கும் தேவைப்பட்ட எல்லா வசதிகளையும் இவ்வரசு செய்யும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது சமுதாய ரீதியாக ஊனமுற்றோர் குழந்தைகளுக்கு வழங்கும் சலுகைகள் அனைத்தும்-விதவைத் திருமணத்தால் பிறந்த குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படும் திட்டம் ஏற்கப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

பொதுவாக, வளரும் நாடுகளில் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவு போன்றவைகளுக்கு வானொலி மற்றும் பத்திரிகைகள் முக்கியத்துவம் அளிப்பதில்லை என்ற கருத்து நிலவுகின்றது. இவ்வரசு, ஊட்டச்சத்துக் குறைவு, உடல் நலம் பேணல் போன்றவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் செய்திகளை வானொலி மற்றும் பத்திரிகைகள் மூலம் மக்களுக்கு அறிவிக்கும் திட்டம் மன நிறைவினை அளிக்கின்றது.

இத்திட்டத்தினை இந்த அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டிலேயே செயல்படுத்துவது மிகவும் உசிதமாகும்.

மேற்கூறிய அரசின் திட்டங்களும் அவற்றைச் செவ்வனே செயல்படுத்த இவ்வரசு எடுத்துக் கொள்ளும் அக்கறையும், இம்மாநிலத்தின் குழந்தைகளின் நலன் எதிர்காலத்தில் நன்கு காக்கப்படுவதைத் தெளிவாகக் காட்டுகின்றது. நாமும் இக்குழந்தைகளின் நலம் பேண இச்சந்தர்ப்பத்தில் துணை புரிவோம் என்று உறுதியெடுத்துக் கொள்வோமாக!




# சமூக நல வாரியமும் சமுதாய வளர்ச்சியும்

இந்தியத் துணைக்கண்டம், அரசியல், ஆன்மீகம், கலாச்சாரம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தனக்கென்ற ஆழ்ந்த பாரம் பரியத்தைக்கொண்டது. வளர்ந்து வரும் நாடு என்ற நிலையில் தற்போது அது இருப்பினும் வளர்ந்து விட்ட பல நிலைகளைப் பல துறைகளிலும் கண்டது. இருப்பினும் பொருளாதார மற்ற அரசியல் காரணங்களினால் நாம் எட்ட வேண்டிய வளர்ச்சி இன்னும் அதிகமாகவே உள்ளது.

**தமிழ்நாடு சமூக நல வாரியம் :**

*1961*-லிருந்து தமிழ்நாடு சமூக நல வாரியம், மாநில அரசின் சமூக நலத்துறையுடன் இணைக்கப்பட்ட தனித்தன்மையுடன் மற்ற மாநில வாரியங்களிலிருந்து மாறுபட்டு இயங்கி வருகிறது. இதனால் அரசுத்துறையும், வாரியமும் ஒரே நோக்குடன் மாறுபாடின்றித் திட்டங்களைச் செயலாற்றவும், நிறுவனங்களுக்கு உதவவும் முடிகிறது.

*1978*-ல், வாரியம் மாற்றியமைக்கப்பட்டபோது தமிழக அரசு, சமூக நல வாரியத்தில் கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சியினருக்கும் உறுப்பினராகும் வாய்ப்பு அளித்து, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடியாக சமூக நலம் என்பது அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது, சமுதாயத்தின் எல்லா அங்கங்களும் ஒரே மனத்துடன் ஈடுபட வேண்டுவது என்பதைச் செயல்படுத்திக் காட்டியுள்ளது. இது மட்டுமின்றி வாரியத்தின் வேறு பல செயல்திட்டங்களிலும், மற்ற மாநிலங்களை ஒட்டி நோக்குங்கால், அதிகத் திட்டங்களைச் செவ்வனே நிறைவேற்றி முதன்மையாக நிற்கிறது என்பது வாரியத்தின் வெள்ளிவிழா ஆண்டில் குறிப்பிடத்தக்க ஒன்று.

**வருடாந்தரத் திட்டக்கால உதவித் தொகை:—**

இத்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளில் (*50* சதவீதம்) பாதித்தொகை மானியமாக வழங்கப்படுகிறது. மீதித் தொகையை நிறுவனமே ஈடுகட்ட வேண்டும். இது, பயன் பெறும் சமுதாயத்தின் ஈடுபாட்டை வளர்ப்பதற்காக அவர்களின் பங்கும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ், பாலர் பள்ளிகள், ஆதரவற்ற குழந்தைகளுக்கு இல்லங்கள், கிராமப்புற மருத்துவ மனைகள் போன்ற பல பணிகளுக்கு, இதுகாறும் ரூ. *3.89* இலட்சம் *303* நிறுவனங்களுக்கு வருடாந்தர மானியமாகவும், *81* நிறுவனங்களுக்கு ரூ. *4.60* இலட்சம் திட்டக்கால உதவித்தொகையாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.



**திருமதி சிந்து நந்தகோபால்**
**தலைவர்,**
**தமிழ்நாடு சமூக நல வாரியம்.**

**மகளிர் நல இயக்கங்கள் :**

கிராமப்புறங்களில் மகளிர் மன்ற அமைப்புகள் மூலம் அவர்களுக்கான குழந்தைகள் காப்பகம், தொழிற்பயிற்சி, சுகாதார நலம், சத்துணவு போன்ற நலப் பணிகளை வளரச் செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ், செலவுத் திட்டத்தின் (*75* சதவீதம்) முக்கால் பங்கு மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது சுமார் *15* நிறுவனங்கள் *38* கிராமங்களில் *1.25* இலட்ச ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**குழந்தைகள் காப்பகம் :**

பெண் தொழிலாளர்கள் நோயுற்ற தாய்மார்கள், இவர்களின் குழந்தைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 5 வயது வரையுள்ள குழந்தைகள் பகல் முழுவதும் பாதுகாக்கப்பட்டு சத்துணவு, உடல்நலம் முதலியவை பேணப்படுகின்றனர். தற்போது *120* காப்பகங்கள் இத்திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இதற்கு ஆகும் செலவில் *90* சதவீதத்தை சமூக நல வாரியம் அளித்து வருகிறது. சுமார் *3000* குழந்தைகளுக்கு *6.85* இலட்ச ரூபாய்



"இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும் நல்ல முறையில் வளர்க்கப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு. ஏனெனில் குழந்தைகள் இந்த நாட்டின் செல்வம். இச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது."

அளவில் இத்திட்டம் மிக்க வரவேற்போடு குழந்தைகள் ஆண்டில் நடைபெற்று வருகிறது.

நகர்ப்புறங்களில் பணிபுரியும் பெண்களுக்கெனப் பாதுகாப்பான விடுதிகள் தேவையாக உள்ள படியால், இத்தகைய விடுதிகளைக் கட்டுவதற்கும் சமூக நலத்துறையும் மத்திய அரசும் சமூக நல வாரியமும், உதவி செய்து வருகின்றன. குறைந்த செலவில் ஆரோக்கியமான உணவு, உறையுள், பாதுகாப்பு பெண்களுக்கு இதன் மூலம் கிடைக்கின்றன. தற்போது ஏழு விடுதிகள் இத்தகைய உதவி பெற்று வருகின்றன. 1978-79 ஆம் ஆண்டு ரூபாய் 29,080- தொகை அளிக்கப்பட்டுள்ளது.

எத்தனை தான் சமூகப்பணிகள் நடைபெற்றாலும் அது பாதிப்பிற்குப் பின் நடைபெற்றால் அது புண்ணுக்குப் புனுகு தடவும் வேலை போன்றதாகும். எனவே, அவை பாதிப்பை தடுக்கும் முகத்தான் அமைய வேண்டும். அதற்கு மக்களின் அடிப்படைப் பொருளாதாரம் உயர வேண்டும். இதற்கு அரசின் பல துறைகளும் பல வழிகளில் முயன்று வருவதைப்போல, சமூக நல வாரியமும், குறிப்பாக, பெண்களின் பொருளாதார முன்னேற்றம் வேண்டி இயங்கிவருகிறது. இதற்கென உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**கறவை மாட்டுத் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ் பெண்கள் தங்கள் குடும்பத்திற்கு அதிகப்படியான வருவாய் ஈட்டுவதற்கு வகை செய்யப்படுகிறது. 5 பசுக்கள் கொண்ட ஒரு அலகு வீதம் 5 பெண்களுக்கு ரூ. 14,000- கடனாகவும், மானியமாகவும் வழங்கப்படுகிறது. தற்பொழுது 324 அலகுகள் (யூனிட்) ரூ. 45.67 இலட்சத்திற்கு வழங்கப்பட்டு 1932 பெண்கள் பயன்பெற்று வருகிறார்கள். இதேபோல் ஒரு அலகுக்கு 5 கைத்தறிகள் மூலம் 9 அலகுகளுக்கு கைத்தறிக்கான கடனுதவியும் 10 தையல் இயந்திரம் வீதம் 15 அலகுகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கறவைமாடு, தையல் இயந்திரம் கைத்தறித் திட்டங்களின் கீழ் ரூ. 8 லட்ச ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதே திட்டத்தின் கீழ் தையல் இயந்திரங்களும் கடனாக வழங்கப்படுகின்றன. 10 பெண்களுக்கு 1 அலகு வீதம் ஒவ்வொன்றிற்கும் ரூ. 10,000 - கடன் வழங்கப்படுகிறது. ஏழைப் பெண்களுக்கு வேலை வாய்ப்பும், பொருளாதார ரீதியாக இலாபகரமாக நடக்கக்கூடிய எத்தகைய சமூக நலத்திட்டங்களுக்கும் வாரியம் உதவித்தொகை வழங்க தயாராக உள்ளது. உதாரணமாக அச்சுக்கூடங்கள், சிற்றுண்டி விடுதிகள் உபதொழில் கூடங்கள் போன்ற வணிக ரீதியான திட்டங்களுக்கும் உதவி செய்து வருகின்றது. தற்பொழுது இத்தகைய சிறுதொழில் திட்டங்களின் கீழ் 26 கூடங்கள் அமைக்கப்பட்டு ரூ.9,43,333 அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ் நாடு சமூக நல வாரியம் நவம்பர் 14-ல் குழந்தைகள் தினத்தை சென்னையில் சிறப்பாகக்கொண்டாடி வருகிறது. அவ்வமயம் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஓவியப்போட்டி, மாறுவேடப்போட்டி, பாடல்போட்டி போன்றவை நடத்தப்பட்டு, பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டாகவும் சமூக நல வாரியத்தின் வெள்ளிவிழா ஆண்டாகவும் உள்ள நடப்பு ஆண்டில் வாரியம் தனது பணிகளில் புதிய பரிமாணங்களைக் காணவிருக்கிறது என்பதையும், இதில் தமிழக அரசு மற்றும் தனியார் சமூக நல நிறுவனங்களின் பாராட்டத்தக்க ஒத்துழைப்பும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

சமுதாய நல நிறுவனங்களே முழுவதும் மக்கள் மத்தியில் மக்களாலேயே நடத்தப்பட்டு அவர்களின் தேவைகளுக்கு ஏற்றபடி பாடுபடமுடியும், இதில் அரசின் பங்கு நல்லுதவியும், ஆலோசனையும், தகுந்த குறிக்கோள்களையும் காட்டி ஊக்குவித்தல் இந்த அடிப்படையின் கீழ் சமூக நல வாரியமானது இதற்காகவே இயங்குகின்ற ஒரு தனிப்பட்ட அங்கம் என்ற முறையிலே சமுதாய வளர்ச்சியில் இன்றியமையாத பங்கு வகித்து வருகிறது.

# சமூகநலத் துறைப் பணிகள்

என். சண்முகம், ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
சமூகநலத் துறை.

உலக நாடுகளில் குறிப்பாக மக்கள் நல அரசுகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் திட்டங்களுக்கு சிறப்பிடமுண்டு. அவ்வாறே தமிழக அரசிலும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காக சமூக நலத் துறையின் மூலம் பல சீரிய நலத்திட்டங்கள் தமிழகத்தின் பல்வேறு நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வாழும் ஏழை எளிய மக்களின் துயர்துடைக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டான இவ் வாண்டில் குழந்தைகள் நலத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நல்ல பல திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

1962ஆம் ஆண்டு 21 ஊராட்சி ஒன்றியங்களில் மட்டுமே ஆரம்பிக்கப்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் திட்டம், இன்று தமிழகத்தில் வேரூன்றித் தழைத்துச் செழித்து நிற்கின்றது. இன்று சுமார் 4500 குழந்தைகள் காப்பகங்கள் தமிழகமெங்கும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் 50 குழந்தைகள் காப்பகங்கள் அரிசனங்களுக்கும், 30 மலைவாழ்மக்களுக்கும், மற்றும் இதர மக்களுக்காக 200 குழந்தைகள் காப்பகங்களும் ஆரம்பிக்கப்படுகின்றன. இவை தவிர, குழந்தைகள் காப்பகங்களுக்கான நிரந்தர கட்டிடங்கள் கட்டுதல், முன் பள்ளி வயதுடைய குழந்தைகள் மற்றும் பாலூட்டும் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் கேர் (CARE) நிறுவன உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, மதுரை, தருமபுரி மாவட்டங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டமும், சென்னை மாநகரில் உலக வங்கி உதவியுடன் தாய் சேய் நலத் திட்டமும் செவ்வனே செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேற்கண்ட குழந்தைகள் நலத்திட்டத்திற்காக அரசு ஆண்டொன்றுக்கு சுமார் இரண்டு கோடி ரூபாய் செலவு செய்கிறது. இது தவிர உலக வங்கி உதவியுடன் சத்துணவுத் திட்டம் தமிழகத்தில் 6 மாவட்டங்களில் விரைவில் நிறைவேற்றப்பட உள்ளது. குழந்தைகள் நலத்திட்டங்களை நிறைவேற்ற முதலமைச்சரின் குழந்தைகள் நலச் சிறப்பு நிதி என்ற ஒரு நிதி ஆரம்பிக்கப்பட்டு ரூபாய் ஒரு கோடி அளவில் அதற்கு நிதி திரட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**மகளிர் நலம் :**

சமூக நலத்துறையின் நலப் பணித் திட்டங்களில் முக்கிய





பங்கு வகிப்பது மகளிர் நலத்திட்டங்களாகும். கல்வி கற்ற பெண்கள் திரும்ப மற்றவர்க்கு அக் கல்வியைப் பற்றிச் சொல்லும் போது மற்றவர்களுக்கும் தங்களுடைய உரிமையைப் பற்றியும் வேலை வாய்ப்புபெறவும், ஆண் பெண் சமத்துவம் அடையவும், அடிமைத் தனத்தை ஒழிக்கவும், வழி செய்கிறார்கள். இச்சமுதாய மாற்றத்திற்காகப் பெண்கள் நலனில் அக்கறை கொண்டு தமிழக அரசும் தாம்பரம், தஞ்சாவூர், கடலூர் திருநெல்வேலி, சேலம் ஆகிய 5 இடங்களில் சேவை இல்லங்கள், அமைத்து சமுதாயத்தில் ஆதரவற்ற, புறக்கணிக்கப்பட்ட அபலைப் பெண்களின் மறு வாழ்விற்காகச் சேவை செய்து வருகின்றது.

சேவை இல்லங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் எஸ். எஸ்.எல்.சி. குறுகிய காலப் பயிற்சியில் தேறிய பெண்களுக்காக ஒரு இடைநிலை ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி, பல்லாவரத்தில் இத்துறையின் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் உடைய மகளிர் தங்கக்கூடிய பணிபுரியும் பெண்கள் இல்லம் ஒன்றும் சென்னை நகரில் நடத்தப்பட்டு வருகிறது.

கிராமப் புற மகளிர்க்கு தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ளும் வகையில் தையல், கம்பளி நெசவு, ஜமக்காளம் நெய்தல், பனை ஓலைப் பாய் முடைதல் போன்ற எளிய குடிசைத் தொழில்களில் தகுந்த பயிற்சி அளிக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் இத் துறையின் கீழ் மகளிர் மன்றங்கள், விதவைகளின் குழந்தைகளுக்கு இலவச பாட புத்தகங்கள் வழங்குதல், ஆதரவற்ற குழந்தைகளுக்கு அனாதை இல்லங்கள் போன்ற திட்டங்களும். செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

**விதவைகள் பயனடைய அரசு அளிக்கும் திட்டங்கள் :**

கணவனை இழந்த, சுற்றத்தாரால் கைவிடப்பட்டு அவதியுறும் பெண்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, விதவையை மறு மணம் செய்து கொண்ட தம்பதியினருக்கு ரூ. 5000—க்கான தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கல் மற்றும் 20 முதல் 40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற இளம் விதவைகளுக்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்குதல் ஆகிய திட்டங்களை அரசு செவ்வனே நிறைவேற்றி வருகிறது. மேலும், இளம் விதவைகள் தொழில் செய்ய வங்கிகள் மூலம் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டு ஆயிரக்கணக்கான பெண்கள் பயனடைந்துள்ளனர்.

**ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுத் திட்டங்கள் :**

உடல் ஊனமுற்றோர் மறு வாழ்வுத் திட்டங்களின் கீழ் இத் துறையின் மூலம் கால் ஊனமடைந்த ஏழைகள் சரியாக நடப்பதற்குச் செயற்கைக் கால் உறுப்புகளும், காது கேளாத பள்ளிக் குழந்தைகட்குக் காது கேட்கும் கருவிகளும் மற்றும் முச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. உடல் ஊனமுற்றோர் நலன் காக்க ஊனமுற்றோர் மாநில வாரியம் அமைக்கப்பட்டு அதன் மூலம்



உடல் ஊனமுற்றவர்களுக்குச் செயற்கை உறுப்புகள் வழங்குதல், ஊனமுற்ற இளைஞர்களை பல பயிற்சிகளில் சேர்த்தல், தொண்டு நிறுவனங்களுக்கு மத்திய அரசின் மானியம் பெறுவதற்கான பரிந்துரைகள் செய்தல் ஆகிய பணிகள் சீரிய முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஊனமுற்ற நபர்கள் சொந்தமாகத் தொழில் செய்து வாழ்க்கை நடத்த பெட்டிக்கடைகள் திறக்க வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கப்பட்டு பல நூற்றுக்கணக்கான 'உடல் ஊனமுற்றோர்' பயனடைந்துள்ளனர்.



**ஊரகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கான சிறப்பு திட்டங்கள் :**

ஊரகப் பெண்களின் வேலை வாய்ப்பிற்கான பெரிய அளவிலான திட்டங்கள் ரூ. 25 இலட்சம் செலவில் சமூகநலத் துறையின் மூலம் மிக விரைவில் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நோட்டுப் புத்தகம் தயாரித்தல், சாக்கட்டி தயாரித்தல், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் அமைத்தல் ஆகிய திட்டங்கள் செயல்படுகின்றன.

**சிறப்புச் சத்துணவுத் திட்டம் :**

இத்திட்டத்தின் கீழ் தமிழகத்திலுள்ள அனைத்து பெரிய நகரங்களிலும் குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் பயன்பெறும் வண்ணம் துணைச் சத்துணவு வழங்கப்பட்டு வருகின்றது.

முடிவாக அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டான இவ்வாண்டில் கீழ்க்கண்ட குழந்தைகள் நலத் திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன.

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் 1979ஆம் ஆண்டிற்குள் கூடுமான வரை செயற்கை அங்க அவய உறுப்புகள் வழங்கல்.

(ஆ) ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஒன்பதாயிரம் பாலர் பள்ளிகள் திறந்து தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குறைந்தபட்சம் ஒரு பாலர் பள்ளி ஏற்படுத்துதல்.

(இ) ஆயிரம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நான்கு பராமரிப்பு இல்லங்கள் அமைத்தல்

(ஈ) ரூபாய் ஆறு இலட்சம் செலவில் குழந்தைகள் அருங் காட்சியகம் அமைத்தல்.

(உ) ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் வழங்குதல்.



மேலும் நல்ல பல திட்டங்கள் தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்களின் துயர்துடைக்க தீட்டப்பட்டு சமூக நலத்துறையின் மூலம் செயல்படுத்தப்பட உள்ளன,


இன்றே ஒரு பரிசுச் சீட்டை வாங்கி
பரிசுத் தொகையில் நல்லதொரு பரிசை
உங்கள் குழந்தைக்கு வழங்குங்கள்!!
தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டு
சிறப்புக் குலுக்கல்
குலுக்கல்
தேதி
24-11-1979
2 சிறப்பு முதல் பரிசுகள்
ரூ. 5 லட்சம் வீதம்
3 சிறப்பு இரண்டாவது பரிசுகள்
ரூ. 1 லட்சம் வீதம்.
மேலும் அதிக குடும்பங்கள்
இன்பமுற, ஒவ்வொரு
வரிசைக்கும் மற்ற பரிசுகள்
1307லிருந்து 2709 ஆகவும்
பரிசுத் தொகை
ரூ. 2.80லட்சத்திலிருந்து
ரூ. 4.50 லட்சம் ஆகவும்
அதிகரிக்கப்பட்டுள்ளது.
பரிசுச் சீட்டின் விலை ரூ. 2
EP/DIPR/



# குழந்தைகள் நலம்

'தமிழரசு இதழ் சமூகநலக் குழந்தைகள் நலச் சிறப்பிதழாக வெளிவருவது சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில் ஒரு சிறப்பு அம்சமாகும். சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு நாளைய குழந்தைகளின் எதிர்காலத்திற்கு நம்பிக்கை ஊட்டுவதற்கு வழி வகுத்துள்ளது. மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஊட்டி குழந்தைகள் தான் நமது தேசத்தின் பொக்கிஷம் என்று நினைவூட்டுகின்றது.

இன்றைய இந்தியக் குழந்தைகளின் நிலையை எண்ணிப் பார்த்தால் உண்மை தெரியவரும். நமது இந்திய சமுதாயத்தில் மிகப் பின்தங்கிய வகுப்பு நம் குழந்தைகள்தான். அடிப்படைத் தேவைகளான சத்துணவு, சுகாதாரம், கல்வி இவைகள்கூட பெறாத இலட்சக்கணக்கான குழந்தைகள் நம் நாட்டில் இருப்பது நாம் வருந்தத்தக்கது.

இந்தியக் குழந்தைகள் ஏழையென்றும், பணக்காரன் என்றும் தன் பிறப்பினால் பாதிக்கப்படுகின்றார்கள். 44 சதவிகிதம் பாதிக்கப்பட்டவர்களாக உள்ளனர். 145 மில்லியன் குழந்தைகளை நாம் எப்படி அணுகுவது? கல்வி, உணவு, நாளைய இந்தியாவை உருவாக்கும் இன்

**சரோஜினி வரதப்பன்**
**தலைவர்**
**இந்திய செஞ்சிலுவைச் சங்கம்,**
**(தமிழ்நாடு கிளை)**

றைய குழந்தைகள் அவர்களின் முழு வளர்ச்சிக்கு நாம் எவ்வாறு தீர்வு காண்பது? இது ஒரு பெரிய பிரச்சினை அல்லவா?

குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எல்லாக் குழந்தைகளும் ஒரே மட்டத்தில் வாழ நாம் எவ்வாறு திட்டமிடுவது?



சர்வதேசக் குழந்தைகள் ஆண்டு பல கோணங்களில் தேவைகளைப் பூர்த்திசெய்ய வழிவகுத்துள்ளது. இன்று குழந்தைகளின் வளர்ச்சி முழுமை பெற நாம் பாடுபட வேண்டும்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் அடிப்படைத் தேவைகள் குழந்தைகளுக்கு அரசு மூலம் அளிக்கப்படுகின்றன. அரசாங்கம் கல்வி, சுகாதாரம், சத்துணவு போன்ற பொறுப்பினை அரசினர் ஏற்றுள்ளார்கள்.

சுதந்திரம் பெற்றபின் நம் நாட்டிலும் நாம் பல்வேறு திட்டங்களின் மூலம் நமது குழந்தைகள் நலத்திட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சீரிய முறையில் செயலாற்றி வருகிறோம். மக்கள் பெருக்கம் அதிகமாயுள்ள நமது நாட்டில் நமது அரசு மிகப் பொருத்தமாக நமது சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிற்கு 'Reaching the deprived child' 'ஒதுக்கப்பட்ட குழந்தைகளை அணுகுவது' என்பதை சுலோகமாக வைத்துள்ளார்கள். அதே போல 'சந்தோஷமான குழந்தை தேசத்தின் பெருமை' என்றும் முழக்கம் எழுப்பியுள்ளார்கள். 100 மில்லியன் குழந்தைகளை அணுகுவது சாத்தியமல்ல என்றாலும் அரசு, துறைகளுடன் சமூக நல நிலையங்களும் பங்குகொள்ள வேண்டும். இதற்குத் தன்னலமற்ற சேவை, நம்பிக்கை, அன்பு பொறுமை, கிடைக்கும்வசதிகளை நன்கு பயன் பெறச் செய்வது, பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்ற திட சங்கல்பம் ஆகியவை வேண்டும்.

சட்டங்கள் மூலமாகவும், திட்டங்கள் மூலமாகவும், பிரச்சாரம் செய்தும் இன்று பின்தங்கிய குழந்தைகளை மேலே உயர்த்த எல்லோருடைய ஒத்துழைப்பும் தேவை. எந்தத் திட்டத்திற்கும் பொருள், மனித சக்தி, வசதிகள் நிறைய இருந்தால்தான் வெற்றிகாண முடியும். இவைகளுக்கு மேலோக உணர்ச்சிகளை எழுப்பி, மக்களுக்கு விழிப்பை ஏற்படுத்தித் தங்கள் கடமைகளைச் செய்ய வைப்பது மிகவும் முக்கியம். இந்த அம்சம் முழுவதாகக் கிடைக்காததால் தான் நாம் செலவிடும் பணம், மனித சக்தி, திட்டங்கள் வெற்றி பெறாது போகின்றன.

குழந்தைகளிடம் திறமை இல்லாது போகவில்லை. சந்தர்ப்பம் அளிக்கப்பட்டால் அது முழுமையாக வெளிப்படும். சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகள் ஆன பின்

னும் நாம் இந்த அடிப்படைத் தேவையைப் பூர்த்திசெய்யாவிட்டால் நாம் கடமையில் தவறினவர்களாகின்றோம். எனவே, இன்று அரசும், சமூக நல நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்கள், வசதிகளை முழுவதும் குழந்தைகளின் நலனிற்குப் பரிபூரணமாகப் பயன்பெற முயற்சி செய்ய வேண்டும். ஐக்கிய நாட்டுப் பொதுச் சபை சர்வதேசக் குழந்தைகள் ஆண்டிற்குத் திட்டமிட்டபடி நமது அரசினரும் ஒரு தேசியத் திட்டம் ( National plan of action ] அமைத்துள்ளார்கள். நாம் இதற்கிணங்க குழந்தைகள் தினம் ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாகக் கொண்டாடி குழந்தைகளின் உயர்வில் அக்கறை கொண்டு வருகின்றோம்.



மத்திய அரசும், மாநில அரசும் வகுத்துள்ள பல திட்டங்களை நாம் அமலாக்க முழுமூச்சுடன் பாடுபடவேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடாது நாம் பயன்பெற முயற்சிப்போம்.

மத்திய சமூகநல வாரியம் 1954-ஆம் ஆண்டிலேயே குழந்தைகள் திட்டங்களை உருவாக்கியுள்ளது. கிராமப் புறங்களில்கூட ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடந்து வந்துள்ளன. இன்று அது வெகுவாக விரிவடைந்து குறிப்பாக நமது தமிழகத்தில் ஏராளமான 'பால்வாடிகள்' சத்துள்ள உணவுத் திட்டம் மூலம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன. மேலும் வருவாய் குறைவான குடும்பக் குழந்தைகளுக்கு விடுமுறை முகாம்கள் மூலம் நல்ல பலனைத் தந்துள்ளது.

வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் குழந்தைகளுக்கென 'Creche' ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அனாதைக் குழந்தைகள் சிறப்பாகப் பாதுகாக்க 'Destitute Home' ஒரு பெரும் சாதனை. இந்தியக் குழந்தைகள் நலச் சங்கம் மிகச் சிறப்பாக இந்தத் துறையில் பணியாற்றி வருவது வரவேற்கத்தக்கது.

இத்துடன் பெற்றோர்களுக்கும் பொறுப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டும். அதுதான் குழந்தைகளின் சக்திகளை வெளிப்படுத்த நல்ல பலனைத் தரும். இந்த ஆண்டு கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, கைவேலை மற்றும் பல்வேறு கலைகளில் ஆர்வம் உண்டாக்க பல நிலையங்கள் முன் வந்துள்ளது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் நமது குழந்தைகள் நல்ல பலனைப் பெறுவார்கள் என்று நம்புகின்றோம். சிறந்த எதிர்காலத்தை எதிர்பார்க்க குழந்தைகள்தான் நமது நம்பிக்கை. இதை ஒட்டி தமிழக அரசு எடுத்துள்ள அத்தனைத் திட்டங்களும் வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.



# சத்துணவுக் கல்வி




இராசம்மாள் பா. தேவதாஸ்

இயக்குநர்—முதல்வர்
அவிநாசிலிங்கம் மனையியல்
கல்லூரி, கோவை.


ஈடு, இணையிட்டுக் கூறவியலாத, நாட்டின் மிகப் பெரிய மனிதச் செல்வமாகிய குழந்தைகள் போற்றிப் பாதுகாப்பட வேண்டியவர்களென்பதை அகில உலகும் உணர்ந்து இவ்வாண்டைக் குழந்தைகள் ஆண்டென நிர்ணயித்துச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

'இன்றைய குழந்தைகள் நாளைய குடிமக்கள்' அவர்களுடைய ஆரோக்கியத்தை நிரந்தரமாக நிர்ணயிப்பதில் உணவுக்கு முக்கிய பங்கு உண்டு. எதிர்கால இந்தியா வளமுடன் திகழ நல்ல பண்புள்ள அறிவு நிறைந்த, ஆரோக்கியமான குடிமக்கள் தேவை. 'உடலில் உறுதி வேண்டும், வாக்கினிலே இனிமை வேண்டும்'' என்ற பாரதியின் பாட்டிற்கேற்ப உடலுறுதி பெற நல்லுணவு வேண்டும்.

நம் நாட்டில் மக்கள் குறிப்பாகக் குழந்தைகள் உணவுப் பற்றாக்குறையாலும், உணவுச் சத்துக்களின் குறைவாலும், பல வித நோய்களுக்கு ஆளாகிப் பரிபூரண வளர்ச்சியடைவதில்லை. தவறான உணவுப் பழக்க வழக்கங்கள், சரியான உணவுகளைத் தேர்ந்தெடுத்து உண்ணாமை, குறைநோய்கள் பற்றி அறிவின்மை ஆகியவை குழந்தைகளின் உடல் நலனைப் பெரிதும் பாதிக்கின்றன.

இன்றைய உலகில், கல்வி பல்வேறு கிளைகளாகப் பரவிச் செழிப்பாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அந்தப் பல்வேறு கிளைகளில் மிக முக்கியமானதும், வாழ்க்கையில் பிணைந்ததும், செயலாற்றப்பட வேண்டியதுமானது உணவியலாகும். நமது அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவைப் பற்றி விளக்கும் கல்வி உணவியல் கல்வி, சத்துணவியல் கல்வியை அனைவருக்கும் தீவிரமாகப் பரப்ப வேண்டும்.

மனிதனின் வளர்ச்சிக்கும், வாழ்க்கை நலத்திற்கும் வேண்டிய சத்துப் பொருட்களைத் தரத்திலும் அளவிலும் போதுமானபடி கொண்டுள்ள உணவு சீருணவு அல்லது நலந்தரும் நல்லுணவு எனப்படும். உடலின் வெவ்வேறு பகுதிகள் தத்தம் தொழில்களைச் சீரான முறையில் செயல்படுத்தவும் உடல் நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும், உடலில் அவ்வப்பொழுது தேய்ந்து, நலிந்து போகும் பகுதிகளைப் புதுப்பிக்கவும், உடலின் பல்வேறு வேலைகள் செவ்வனே நடப்பதற்குத் தேவையான சக்தியை அளிப்பதற்கும் நல்ல உணவு, சீருணவு மிகவும் அவசியமாகும்.

உயிரானது பல்வேறு செயல்களின் மூலமாகத் தன்வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும், தேய்ந்து போன உறுப்புக்களைப் புதுப்பித்தலுக்கும், தேவையான சக்தியையும், சத்துக்களையும் பெற்றுப் பயன்படுத்துவதை விளக்கும் பிரிவு உணவியல் ஆகும். மேலும், என்னென்ன சத்துப் பொருட்கள் நமக்குத் தேவை என்பதையும், நமக்கு அவை எப்படிக் கிடைக்கின்றன என்பதையும் விளக்கும் அறிவியல்பிரிவு சத்துணவியல் ஆகும். சத்துணவியல் கல்வி மக்களின் உணவுப் பழக்க வழக்கங்களிலுள்ள தவறான கருத்துக்கள், மூட நம்பிக்கைகள் ஆகியவற்றை அறிவியலின் அடிப்படையில் மாற்றி அமைத்துத் தம் சூழ்நிலையில் கிடைக்கும் அனைத்து உணவுப் பொருட்களையும் பயன்படுத்தி நல்ல உணவுப் பழக்கங்களை மேற்கொள்ளுதற்குப் பெரிதும் உதவுகிறது. வாழ்க்கை முழுவதற்குமேற்ற வளமான சிந்தனைக்கும், செயல்பாட்டுக்கும், முன்னேற்றத்திற்கும், உணர்வுக்கும், நிறைவுக்கும் வழி வகை செய்வதில் மிக முக்கிய இடம் பெறுவது சத்துணவே.

சுவரை வைத்துக் கொண்டு தான் சித்திரம் வரைய முடியும். நல்ல உடல் வளம், நல்ல உள்ள வளத்திற்கும், தூய்மையான ஆன்மீக வளத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிகோலும், உடல், உள்ளம் ஆன்மா இம்மூன்றையும் ஒருமித்து வளர்ப்பதுதான் உண்மைக் கல்வியாகும் என்று அண்ணல் காந்தி அடிகள் விளக்கியுள்ளார். எனவே, எவற்றிற்கும் அடிப்படையாக அமைந்துள்ள உடல் நலங் காத்தல் பயிற்சியினைக் குழந்தைகளுக்கும், அவர்களின்மூலம் குடும்பத்திற்கும் செவ்வனே அளித்து உணவியல் கருத்துக்களை உரிய முறையில் பரப்பி நாட்டையும், வீட்டையும் நலமுற வளர்த்திட, உணவியல் கல்வியை எல்லாப் பள்ளிகளிலும் கற்பிக்க வேண்டும். இக்கருத்துக்களைப் பிஞ்சு நெஞ்சங்களில் பதிய வைப்பது குழந்தைகள் பள்ளி, ஆரம்பப் பள்ளிக் கல்வியின் இன்றியமையாத கடமையாகும்.



ஐந்து முதல் ஆறு மாதக் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலே மிக முக்கிய உணவாகும். அதற்குப் பிறகு சத்து மிகுந்த தாய்ப்பாலுடன்கூட, ஊட்டம் மிகுந்த பிற உணவுகளும் தேவையாக அமைகிறது. வளருகின்ற குழந்தைகளுக்குத் துணை உணவு போதுமான அளவில் கொடுக்கப்பட வேண்டும். ஊட்ட உணவு பற்றியும், குறைந்த செலவில் உள்ளூரிலேயே கிடைக்கும் உணவுப் பொருட்களை வைத்துக்கொண்டு குழந்தைகளுக்குத் தர வேண்டிய துணை உணவு குறித்துத் திட்டமிடுவது பற்றியும், தாய்மார்களுக்குத் தகுந்த கல்வி புகட்டப்பட வேண்டும். ஊட்ட உணவுத்துறை ஆய்வின் அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்ட குறைந்த, விலைகளில் கிடைக்கும் 'குழந்தையமுது' 'இலைப்புரத லட்டு' போன்ற உணவுகள் புரதச்சத்து, கலோரிகள் அதிகம் உடையதாக உள்ளன.

நமது மக்கள் தொகுதியில் முக்கால் பகுதிக்குமேல் சுத்தம் செய்யப்படாத தண்ணீரைக் குடிக்கிறார்கள். குடிநீர் அசுத்தம் காரணமாகவே பலநோய்கள் குழந்தைகளையும், பெரியவர்களையும் தொற்றிக் கொள்கின்றன. ஊட்ட உணவுக்குறைபாட்டினால் ஏற்கெனவே தொல்லைப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய குழந்தைக்கு, அசுத்த நீரும் சேர்ந்து நோய் தீவிரமடைவதற்கு வசதியாகிறது.

குழந்தை பிறந்த ஆறு ஆண்டுகளுக்குள் மூளை வளர்ச்சி நிறைவடைகின்றது. புலன்களே அறிவாகிய கோட்டையின் வாயில்கள். ஐம்புலன்களும் கற்பதில் முழுமையாக ஈடுபட்டால்தான் கற்றல் நிறைவு பெறும். இதற்கு இவ் ஐம்புலன்களும் குறைபாடற்ற நிலையில் இருக்க வேண்டும். அவை நிறைவுடன் செயல்படவும், குறைகளைக் களைந்துவிடவும், கல்வி நல்கிடவும், சத்துணவியல் கல்வி வழிகோலுகின்றது.

நம் நாட்டில் சத்துணவு இன்மையால், ஆயிரமாயிரம் குழந்தைகள் நாளும் அல்லலுறுகின்றனா. நாள் ஒன்றுக்கு மருத்துவமனையில் சேர்க்கப்படும் 25 மில்லியன் குழந்தைகளில் 5 மில்லியன் குழந்தைகள் சத்துணவுக் குறைவால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களில் 3,500 பேர் ஒவ்வொரு நாளும், மரணத்தைத் தழுவுகின்றனர். இந்தப் புள்ளி விவரம் ஒன்றே சத்துணவியல் கல்வி பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் கொடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகின்றது. சத்துணவுக் குறைவால் மக்களுக்குக் குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஏற்படும் கொடிய நோய்களின் நீண்ட பட்டியல் சத்துணவுக் கல்வியின் இன்றியமையாமையை இன்னும் அதிகப்படுத்துகின்றது. கருச்சிதைவு, இறந்து பிறத்தல், பிறந்த சில நாட்களில் இறத்தல், குழந்தைகளிடத்தில் வளர்ச்சியின்மை, வைட்டமின் ஏ-சத்துக் குறைவால் ஏற்படும் கொடிய கண் நோய்-பார்வையிழப்பு போன்ற பயங்கரங்கள் தவிர்க்கப்படல் வேண்டுமெனில் பெற்றோர்க்கும், மற்றும் அனைவர்க்கும் சத்துணவியல் கல்வியை அவசியம் வழங்க வேண்டும்.

'நோய்நாடி நோய் முதல்நாடி
அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச்செயல்'

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, நோய் நம்மை நாடும் காரணங்களையும், அதைத் தணிக்க நாம் நாடிச் சேர்க்க வேண்டிய சத்துக்களின் வகைகளையும் தெள்ளத் தெளிவாகத் தெரிந்து, 'வருமுன் காக்கும் பண்பினை' வளர்க்கச் சத்துணவுக் கல்வித் திட்டம் தீட்டித் தருகின்றது.

குழந்தைப்பள்ளி, ஆரம்பப் பள்ளி சமுதாயத்தின் முன்னோடி. சத்துணவுக் கல்வியின் சாரங்கள் பள்ளியின் மூலமாக தனிமனிதனுக்கும், சமூகத்திற்கும் நன்றாக எட்ட முடியும். வளர்ந்த நாடுகளில், 15 சதவீத உழைக்கும் சக்தியற்ற இளம் குழந்தைகளை 40 சதவீத உழைக்கும் சக்தியுள்ள மக்கள் காக்கின்றனர். ஆகவே, அங்கு உற்பத்தி பெருகிப் பொருளாதாரம், ஸ்திர நிலையில் உள்ளது. ஆனால், வளரும் நம் நாட்டிலோ, 40 சதவீத உழைக்கும் சக்தியற்ற குழந்தைகளை 15 சதவீத உழைக்கும் திறனுடையோர்தான் காக்கின்றனர். இந்தப் புள்ளி விவரம் நமது நாட்டின் பொருளாதார அவல நிலையினைக் காட்டுகிறது. இந்த இழிநிலை மாறி உழைக்கும் சக்தியுள்ள மக்கள் கூட்டம் பெரிதாகி 'இல்லையே உணவில்லையே எனும் நிலை இனிமேலிலை' என்னும் நிலை ஏற்பட வேண்டும். 'உணவியல் கல்வி நம் நாட்டு



உணவுத் திட்டத்தின் இணைந்த பகுதியாக அமையவேண்டும். காரணம், இக்கல்வியின் மூலம், கிடைக்கின்ற பொருட்களைக் கொண்டு, அதிகப்படியான சத்துணவைக் குடிமக்கள் அடையலாம்.

நாட்டுக் குடிமக்களுக்குத் தேவையான சத்துணவு கிடைக்காவிட்டால் உடல் நலக்குறைவு உண்டாகும். அப்போது நம் திட்டங்களும், செயல் முறைகளும் பயனளிக்காமல் தோல்வியை எதிர்நோக்க வேண்டிவரும் என்று திட்டக் கமிஷன் கூறியுள்ளது. எனவே, வளமான 'பிற்கால சமூக வாழ்க்கைக்கு எல்லா நிலையிலும், எல்லா வகை மக்களுக்கும் நல்ல, சத்துள்ள உணவு வகைகள் கிடைக்கச் செய்வதுதான் நாடு. நமது இளம் செல்வங்களை—குறு குறுவென நடந்து, சிறுகை நீட்டி இட்டும்தொட்டும், கவ்வியும் துளந்தும், மழலை மொழி பேசும் மாண்புறு செல்வங்களைப் பாரதியார் கண்டபடி,

ஒளிபடைத்த கண்களையுடைய
வர்களாகவும்
உறுதி கொண்ட நெஞ்சினை
யுடையவர்களாகவும்

கடுமை கொண்ட தோளினை
உடையவர்களாகவும்

தெளிவு பெற்ற மதியினையுடைய
வர்களாகவும்
ஏறுபோல் நடையினையுடைய
வர்களாகவும்

நோய்மையற்ற சிந்தனையுடைய
வர்களாகவும்

நோயற்ற உடலினையுடையவர்
களாகவும்

மாற்றுவது அனைவரது கடமையாகும். அனைவரும் உடல் நலத்தின் மேன்மையினை உடலோம்பல் பயிற்சி முறையினை அறிய ஆவல் கொள்ள வேண்டும். அப்போதுதான், வளமார்ந்த நம் தாய்நாடு நலமார்ந்த குழந்தைகளையும், அதன் மூலம் வளமார்ந்த நாட்டினையும் கண்டு வாழ்ந்து மேதினியில் உயர முடியும்!

# மகளிர் நலம்

—தாராபாய்
துணை இயக்குநர்,
(மகளிர் நலம்)
சமூக நலத்துறை.

உலக நாடுகளில் குறிப்பாக மக்கள் நல அரசுகளில் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்குச் சிறப்பிடமுண்டு. பாரதப் பெண்கள் முன்னேற்றத்திற்கு நம் சமுதாயத்தில் என்றும் ஒரு தனி அக்கறை உண்டு. அவ்வாறே தமிழக அரசிலும் மகளிர் மற்றும் குழந்தைகள் நலனுக்காகச் சமூக நலத்துறையில் பல சீரிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள், மகளிர் துயர் துடைக்கவும், அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலையினை உயர்த்தவும் அரும்பாடு படுவதாக உள்ளன.

### சேவை இல்லங்கள் :

தமிழ்நாட்டில் தாம்பரம், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி, சேலம் ஆகிய 5 இடங்களில் அரசினரின் சேவை இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் திருநெல்வேலி, சேலம் சேவை இல்லங்கள் 1978-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டவை. இச்சேவை இல்லங்களில் 18 முதல் 40 வயது வரையிலான சமூகத்தில் ஆதரவற்ற நிலையிலுள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் மற்றும் ஆதரவற்ற பெண்கள், தங்களுடன் இரண்டு குழந்தைகளும் 3 ஆண்டுகள் தங்குவதற்கு அனுமதிக்கப்பட்டு இ.எஸ்.எல்.சி, எஸ்.எஸ்.எல்.சி. தேர்விற்கும், தையற்கலை அரசுத் தொழில் நுட்பத் தேர்விற்கும் பயிற்சி பெறுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியிருக்கும் காலங்களில் மகளிர் ஒவ்வொருவருக்கும் ரூ. 50-ம், குழந்தைக்கு ரூ. 36-ம் உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இச்சேவை இல்லங்கள் சமுதாயத்தில் ஆதரவற்ற நிலையிலுள்ள சமூகத்தால் புறக்கணிக்கப்படும் அபலைப் பெண்களுக்கு ஆதரவளித்து, அவர்கள் மீண்டும் அதே சமுதாயத்தில் சிறப்புடன் வாழ வழிவகை செய்கின்றன.

### இடைநிலை ஆசிரியைப் பயிற்சிப் பள்ளி:

சேவை இல்லங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களில் எஸ்.எஸ்.எல்.சி. குறுகிய காலப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றபெண்களுக்காக ஒரு இடைநிலை ஆசிரியைப்பயிற்சிப்பள்ளி, பல்லாவரத்தில் நடத்தப்படுகிறது. இப்பள்ளியில் இளநிலைப் பிரிவில் 40ம், முதுநிலைப் பிரிவில் 40ம் ஆக 80 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 50 உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும், அரசினர் இப்பள்ளியில், பயிற்சி பெற்ற முன்னாள் சேவை இல்ல மாணவிகளைக் கல்வித் துறை, சமூக நலத்துறைகளில் ஆசிரியை வேலைக்கு, வேலை வாய்ப்பகத்துடன் தொடர்பு கொள்ளாமல் நேரடியாக வேலையில் அமர்த்தவும், இவர்கள் 40 வயதுவரை அரசுப் பணிகளில் சேர வயது வரம்பினைத் தளர்த்தியும் உத்தரவுகள் பிறப்பித்துள்ளனர். இவ்வாறாக இப்பயிற்சி, முன்னாள் சேவை இல்ல மாணவிகளின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிவகுக்கிறது.



### பணிபுரியும் பெண்கள் இல்லம்:

குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் உடைய மகளிருக்காக, சென்னை நகரில் 25 மகளிர் தங்கக்கூடிய பணிபுரியும் பெண்கள் இல்லம் ஒன்று நடத்தப்படுகிறது. இதில் தங்கும் பெண்களிடமிருந்து குறைந்த அளவில் உணவுக் கட்டணமும், வாடகை மற்றும் மின்சாரக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது. இவ்வில்லம் வெளியூர்களிலிருந்து சென்னைக்கு வேலை பார்க்கவரும் ஏழைப் பெண்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த வசதிகள் பெறும் ஒரு சிறந்த இல்லமாகத் திகழ்கிறது.

### பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும் :

கிராமப்புற மகளிர்க்குத் தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ளும் வகையில் தையல், கம்பளி நெசவு, ஜமுக்காளம் நெய்தல், பனை ஓலைப் பாய் முடைதல் போன்ற எளிய குடிசைத் தொழில்களில் தீவிர பயிற்சியளிக்கும் பொருட்டுப் பயிற்சி நிலையங்கள் தொடங்கப் பட்டன. இந்நிலையங்களில் பெறும் பயிற்சியின் காலம் ஓராண்டு. பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ. 30 உதவித்தொகை வழங்கப்படுகிறது. சமூக நலத்துறையின் நிதியின் மூலம் 25 பயிற்சி நிலையங்களும், 4 உற்பத்தி நிலையங்களும், அரிசன நலத்துறையின் 16 பயிற்சி நிலையங்களும், பிற்பட்டோர் நலத்துறை நிதியின் மூலம் 7 பயிற்சி நிலையங்களும், மறுவாழ்வுத்துறை மூலம் 2 பயிற்சி நிலையங்களும் இம்மாநிலம் முழுவதிலும் நடைபெற்று வருகின்றன.

இப் பயிற்சி நிலையங்களில் பெறும் பயிற்சியின் மூலம் தமிழகத்தின் கிராமப்புறப் பெண்கள் சொந்தமாகத் தொழில் நடத்தியும், அதிக அளவில் வேலைவாய்ப்புப் பெற்றும் பொருளாதார மேம்பாடு அடைகின்றனர்.

### மகளிர் மன்றங்கள்:

கிராமப்புற மகளிர் தங்களின் பற்பல சமூக, பொருளாதார வேற்றுமைகளைக் களைந்து

ஒன்றுகூடுவதற்காகக் கிராமங்கள் தோறும் மகளிர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுகின்றன; தமிழ்நாடு முழுவதிலும் 11,220 மகளிர் மன்றங்கள் நடைபெறுகின்றன. மகளிர் மன்றங்கள் செயல்படுவதற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ரூ. 4000 செலவிடப்படுகிறது.



மகளிர் மன்றங்களின் உயர்வு மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டத்தின்படி 1978-79ல் 5 வட்டாரங்களில் 46 மகளிர் மன்றங்களில் ரூ. 47,950- செலவிடப்பட்டுள்ளது.

**சிறப்புத் திட்டங்கள்:**

1978-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் ரூ. 3000-க்கும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு குறைவான ஆண்டு வருமானமுள்ள குடும்பங்களிலுள்ள 16 முதல் 30 வயதுள்ள 1000 ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற்சிபெற 10மாதங்களுக்கு உதவித்தொகை ரூ. 150 வழங்கப்படும். புதிய திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 1.50 இலட்சம். இத்திட்டத்தினால் படித்து முடித்து தட்டச்சுப் பயிற்சி பெற வசதியற்ற பல ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற்சி பெற்று விரைவில் வேலை வாய்ப்புப் பெறுகின்றனர்.

**இலவச பாட புத்தகம் வழங்குதல் :**

ஆண்டு வருமானம் ரூ. 3000-க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகம், நோட்டுப்புத்தகம் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்படி 1978-79-ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் பலனடைந்தனர். இத்திட்டத்தில் மொத்த செலவு ரூ.1 இலட்சம். இத்திட்டம் ஆதரவற்ற ஏழை விதவைகள் தங்கள் குழந்தைகளைச் செலவின்றிக் கல்வி கற்பிக்க உதவுகிறது.

**அநாதை இல்லங்கள்:**

தமிழகத்திலுள்ள அநாதை மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை நன்கு பேணி வளர்க்கவும் இதர வசதிகளுடைய குழந்தைகளைப் போன்று அவர்களையும் சமுதாயத்தில் பொறுப்புள்ள குடிமகனாக மாற்றும் வகையில் தமிழ்நாடு அரசு 1000 அநாதைக் குழந்தைகளுக்கென்று 4 அனாதை இல்லங்களை அமைக்க உத்தரவிட்டுள்ளது. இவ்வில்லங்களை விரைவில் துவங்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

# கோவை மாவட்டத்தில் சமூக நலப்பணிகள்



**பங்கஜாட்சி சுப்பையன்**
**சமூகநல வாரிய உறுப்பினர்,**
**கோவை.**

**கோ**வை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்தியமாநில சமூகநல வாரியங்களின் பொருளுதவியுடன் வசதியற்ற பெண்களுக்கான தையல் பயிற்சிநிலையங்கள், சமூகசேவை நிலையங்கள் நடத்தி வருகின்றன. அதிலும் முக்கியமாக வசதியற்ற மலைப்பிரதேசமான வால்பாறை பகுதியில் ஓர் நிலையம் செயல்பட்டு வருகின்றது. இந்த 4 நிலையங்களிலும் 95 பேர் தையல் பயிற்சிபெற்று வருகின்றனர். கடந்த ஆண்டு 70 பேர் பயிற்சி பெற்று தத்தம் வாழ்வில் ஓர் நிலையான வருவாய் பெறும் வண்ணம் தொழில் கற்றுள்ளனர். இதேபோல் கிராமப் பெண்களைப் பள்ளி இறுதி வகுப்பிற்கு பயிற்றுவிக்கும் குறுகிய காலப் பயிற்சிக்காக (Condensed Course for S.S.L.C. failed Students) மத்திய சமூக நல வாரியம் அவிநாசிலிங்கம் மனை இயல் கல்லூரிக்கு நிதி உதவியுள்ளது.

இந்தியக் குழந்தைகள் நலக் கழகம் கோவை மாவட்டத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளில் சமூக நல வாரிய நிதி உதவியுடன் 11 குழந்தைகள் காப்பகங்கள் (Creches) நிறுவியுள்ளது. இது தவிர அகில இந்திய மாதர் சம்

மௌனம் (A.I.W.C.) பெண்கள் சேவா நிலையம் (W.V.S.) ஆசிரமம், கோவை சேவா நிலையம், கஸ்தூரிபா காந்தி நினைவு அறக்கட்டளை, எல்.ஆர்.இ. நாயுடு கல்வி அறக்கட்டளை போன்ற நிலையங்கள், சமூக நல வாரியத்தின் நிதி உதவியுடன் குழந்தைகள் காப்பகங்கள் ஆரம்பித்து நடத்திவருகின்றன.

மலைவாழ் மக்களுக்காக வால்பாறையைச் சுற்றியுள்ள ஒரு மருந்துகள் வழங்கும் நிலையமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 90 பெண்களுக்குக் கறவைமாடுகள் வாங்க நிதியுதவி வழங்க மாநில சமூக நல வாரியம் பரிந்துரை செய்துள்ளது. இந்த ஆண்டு மத்திய வாரியத்தின் பரிசீலனையுடன் 25 வசதியற்ற பெண்களுக்குக் கறவை மாடுகள் வாரியத்தின் வட்டியில்லாக் கடன் மூலமாக வழங்கப்பட்டுள்ளன. சிறு குழந்தைகள் பள்ளி, ஆசிரியர் பயிற்சி நிலையம் ஒன்றும் இந்த ஆண்டு மத்திய சமூக நல வாரிய நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 20 பெண்கள் பயிற்சி பெறுகின்றனர்.

கோவை அவிநாசிலிங்கம் மனை இயல் கல்லூரியில் ஓர் அச்சுக்கூடத்திற்கு ரூபாய் 48,000 மத்திய சமூக நல வாரியம் வழங்கியுள்ளது. பொது வாழ்வில் கிராமப்புறப் பெண்கள் எப்படி இணைந்து வாழ்வது என்பதற்கான பயிற்சி முகாம் ஒன்றும் நடத்தப்பட்டது.

கோவை உடல் ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையம் ஊனமுற்ற குழந்தைகளுக்குக் கடந்த ஆண்டு ஓர் விடுமுறை முகாம் சமூக நல வாரிய நிதி உதவியுடன் நடத்தப்பட்டது. இந்த நிலையத்திலேயே இரண்டாண்டுகளாக வாரிய நிதி உதவியால் வளமான குழந்தைகளுக்கான மருத்துவப் பயிற்சி நிலையமும் செயல்பட்டு வருகிறது. செவிட்டு ஊமைப் பள்ளிக் குழந்தைகளுக்காகவும், வசதியற்ற குழந்தைகளுக்காகவும், ஐந்து கோடைகால விடுமுறை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.





அரசின் சமூக நலத்துறையின் மூலமாக 'கேர்' (CARE) நிறுவன உதவியுடன் ஊராட்சி ஒன்றியங்களில் கடந்த இரண்டாண்டுகளில் 36 குழந்தைகள் காப்பகங்கள் கட்டப்பட்டுள்ளன. 35காப்பகங்கள் கட்டப்பட்டுவருகின்றன.

மகளிர் மன்றங்கள், குடும்ப நலம், சிறு சேமிப்பு, வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல், சிறு கைத்தொழில்கள் கற்றுத்தரல், தையல் கற்பித்தல், போன்றவற்றில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் 12 மகளிர் மன்றங்கள் பரிசு பெற்றுள்ளன. சிறப்புச்சத்துணவுத் திட்டத்தின் மூலம், கோவை சிங்கா நல்லூர், திருப்பூர், நகராட்சிகள் மூலம் குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள், பாலூட்டும் தாய்மார், ஆகியோர் 23,000 பேர் மருத்துவ வசதி, பாலர் உணவு, பெற்று வருகின்றனர். இங்கு தமிழக அரசு சமூக நலத்துறை மூலமாக சமூக நலக்கிளைகள் நிறுவப்பட்டு, அரிசன நலத்துறை சீருடைகள் தைத்தல் மூலம் 1977-78, 1978-79ல் ரூபாய் 13,000 வருவாயாகப் பெற்றுள்ளனர். இதேபோல்உடல் ஊனமுற்றோர் 125 பேருக்கு மூன்று சக்கர வண்டிகளும், காதுகேளாத 42 பள்ளிக் குழந்தைகளுக்குக் காது கேட்க உதவும் கருவிகளும் தரப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பெண்களுக்கு உதவும் வகையில் 20 முதல் 40 வயது வரையில் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையிலுள்ள பெண்கள், உடல் ஊனமுற்ற- தையல் தெரிந்த பெண்களுக்கு 1977-78ல் 30 பேருக்கும் 78-79ல் 100 பேருக்கும் தையல் இயந்திரங்களை அரசின் சமூக நலத் துறை வழங்கியுள்ளது. இளம் விதவைகள் மறுமணத்திட்டத்தின் கீழ் 13 தம்பதியர் பயனடைந்துள்ளனர். விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்கள் அளிக்கும் வகையில் 77-78ல் 298 பேருக்கும் 78-79ல் 257 பேருக்கும் புத்தகங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பள்ளி இறுதி ஆண்டில் சிறப்பாகத் தேறிய ஏழைப்பெண்கள் 62 பேருக்குத் தட்டச்சுப் பயிற்சி இலவசமாகத் தரப்பட்டு அவர்களுக்கு மாதம் ரூ. 15- உதவித் தொகையும் அளிக்கப்பட்டு வருகின்றது.

மத்திய மாநில சமூக நலத் துறையின் மானியம் மூலமாக 2 பணிபுரியும் பெண்கள் விடுதிகள், ஒன்று 5 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இளம் கிறிஸ்தவப் பெண்கள் கழகத்தினராலும், மற்றொன்று சேவா நிலையத்தாரால் ரூ. 1 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளன. இந்த விடுதிகளில் வெளியூர்களிலிருந்து இந்த நகரில் பணிபுரியும் பெண்கள் தங்கியுள்ளனர்.

கோவை மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்ட கோவை ஊனமுற்றோர் மறுவாழ்வு நிலையத்தின் காது சரிவரக் கேளாத குழந்தைகளுக்கும் திக்கிப் பேசும் குழந்தைகளுக்குமான மருத்துவப்பிரிவின் (Sound - Proof Room) ஒலி அடக்கிய அறையின் அமைப்பிற்காக வாரியம் ரூபாய் பத்தாயிரம் அளித்துள்ளது. இந்த நிலையத்தின் படுக்கைப்பிரிவு 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் மாண்புமிகு. சமூக நலத்துறை அமைச்சர் செல்வி. பி.டி.சரசுவதி அவர்களால் துவக்கப்பெற்றது. இந்த நிலையத்தின் பள்ளிக்குத் தற்போது அன்றாடம் வந்து போகும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் தங்கிப் படிக்கும் வகையில் விடுதி வசதிக்காகத் தமிழக அரசு சமூக நலத்துறையை நாடியுள்ளது. இந்த நிலையத்தில் இயன் மருத்துவம், (Physiotherapy) மொழிப் பயிற்சி (Speech Therapy) மன நோய் மருத்துவம் (Pshychiatry) மந்த செவியுடையோருக்குப் பயிற்சி போன்ற பிரிவுகளில் உடல் ஊனமுற்ற ,மனவளர்ச்சி குன்றிய எல்லா வயதினருக்கும் மருத்துவ உதவியும், உடல் ஊனமுற்ற மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான தனிப்பள்ளிகளும் தகுந்த நிபுணர்களைக் கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன.


கோ-ஆப்டெக்ஸ்
அழகோவியம்!
அழகு மகளிர்
ஆவலோடு வாங்கி அணிவதெல்லாம்
கோ-ஆப்டெக்ஸ் சேலைகளையே !
அதில் உள்ள விந்தையெல்லாம்
அழகும் நயமும் இழைய...
அகம் கவரும் வண்ணங்கள் மிளிர.
கோடுகளும்-புள்ளிகளும் குலவ...
எண்ணற்ற வகைகளை
கோ-ஆப்டெக்ஸ் வழங்குகிறது !
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ELEGANT



# கிராமப்புறப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு

நமது கிராம மக்கள், குறிப்பாக பெண்களில் பெரும்பாலோர் நிரந்தர வேலையில்லாமலோ வேலையே இல்லாமலோ இருக்கிறார்கள்.

ஊரகப் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காகப் பெரிய அளவில் திட்டங்களை அரசு தீட்டி அதற்காக ஆரம்பத்தில் ரூ. 25 இலட்சம் ஒதுக்கியுள்ளது. 1979-80-க்கான வரவு செலவுத் திட்டம் ரூ. 20 இலட்சம்.

அதிக அளவில் வேலைவாய்ப்பு இருக்க வேண்டும். எளிமையாக, தொழில் நுட்பங்கள் இல்லாமல், குறைந்த முதலீட்டில், அந்தந்த கிராமங்களில் உள்ள கச்சாப் பொருட்களைக் கொண்டு நடத்தப்படக் கூடியதாக வேலைகள் அமைய வேண்டும் என்று அரசு வரையறுத்துள்ளது. இந்த சிறப்புத் திட்டங்களுக்காக ஓர் ஆளுகைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆட்சி அதிகாரங்களும், நிதி அதிகாரங்களும் உள்ளன. சமூக நலத் துறைச் செயலாளர் இந்த ஆளுகைக் குழுவின் தலைவர் ; சமூக நலத் துறை இயக்குனர் செயலாளர் உறுப்பினர்.

நோட்டுப்புத்தகம் தயாரித்தல், தீப்பெட்டி செய்தல் சாக்கட்டி செய்தல் ஆகியவை இத்திட்டத்திற்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட தொழில்கள், இத்திட்டத்தின் கீழ், அங்கீகரிக்கப்பட்டு அமல்படுத்தப்படுகின்றன:

**1) 500 பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 20 பெண்கள் தீப்பெட்டி தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் திருமங்கலத்தில் (மதுரை மாவட்டம்) ரூபாய் 4.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.** மத்திய சேவை கூட்டுறவுச் சங்கம் 28-6-79-லிருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சங்கங்கள் அனைத்தும் செயல்பட்டு வருகின்றன. இதற்கான 20 கட்டடங்கள் தேர்ந்து எடுக்கப்பட்டு, தீப்பெட்டித் தொழிற்சாலையின் தேவைக்கேற்ப திருத்தி அமைக்கப்படுகின்றன. பத்துத் தொழிற்சாலையில் உற்பத்தி துவங்கி உள்ளது. மற்ற தொழிற்சாலைக்கான கருவிகள், கச்சாப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளுக்கான உரிமம் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. எல்லாத் தொழிற்சாலைகளிலும் விரைவில் உற்பத்தி துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



(2) சென்னை வியாசர்பாடியில் நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பதற்காக ரூ. 1.63 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் ஒரு கூட்டுறவுச் சங்கமாக அமைக்கப்பட்டு 6-9-79 அன்று பதிவு செய்யப்பட்டது. 10-9-79ல் இருந்து அலுவல் முறைப்படி இயங்கத் தொடங்கிவிட்டது. இந்தத் தொழிற்கூடத்தில் 24-9-1979 முதல், பயிற்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

(3) மதுரை, தஞ்சாவூர், இராமநாதபுரத்தில் மூன்று சாக்கட்டி, செய்யும் தொழில் கூடங்கள் ரூ. 1,76,100 செலவில் செயல்பட்டு வருகிறது.

(4) ரூபாய் 42 இலட்சம் செலவில் 5,000 பெண்களுக்குத் தீப்பெட்டித் தொழிற் பயிற்சி அளித்து, வேலை வாய்ப்பு அளிக்க ஒரு திட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 5 தீப்பெட்டித் தொழில் மையங்கள் அமைக்கப்படும்.

| மாவட்டம் | தீப்பெட்டித் தொழில் மையம் | பகுதி |
|---|---|---|
| தருமபுரி | 1 | 50 |
| மதுரை | 1 | 45 |
| இராமநாதபுரம் | 1 | 50 |
| புதுக்கோட்டை | 1 | 50 |

மீதம் உள்ள ஒரு தொழில் மையம் கீழ்க்கண்டவாறு விரிவாக்கப்பட்டுள்ளது .

| | | |
|---|---|---|
| சேலம் | ... | 10 |
| கோயம்புத்தூர் | ... | 10 |
| திருநெல்வேலி | ... | 10 |
| கன்னியாகுமரி | ... | 10 |

மேற்கண்டவற்றில் 48 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மீதம் உள்ள சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 10 சாக்கட்டி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க ரூ. 1.42 இலட்சம் செலவில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**சி. அப்துல் அஜீஸ்,**

**துணை இயக்குநர்,**
**(சிறப்புத் திட்டங்கள்)**
**சமூகநலத் துறை.**



மழலையின் நல்வாழ்வையெண்ணி
மகிழ்ந்திடும் தாய்.

வளமான வருங்காலத்தை
எதிர்நோக்கும் சேய்

இவர்களின் எண்ணங்கள் நனவாகிட
ஏற்றதொரு சேமிப்புத் திட்டம்

"புதையல் டெபாசிட்"

உங்களின் வருவாய்க்கேற்ப பல்வகை திட்டங்கள் !....

* தினசரி சேமிப்புக்கு "தேன்கூடு"
* மாதாந்திர சேமிப்புக்கு "ரெகரிங்"
* வாராந்திர சேமிப்புக்கு "வீக்லி"
* முதுமையில் பயன் பெற "பென்ஷன்"

வங்கி திரட்டியுள்ள டெபாசிட் ரூ. 22 கோடி

* வங்கி வழங்கிய விவசாயக் கடன் ரூ. 17 கோடி
* நெசவாளர்களின் இன்னல் களைய ரூ. 4 கோடி
* கால்நடைகள் வாங்க மத்திய கால கடன் ரூ. 2½ கோடி
* மலைவாழ் மக்கள் நலம் பேண ரூ. 63 லட்சம்
* நகை ஈட்டின் பேரில் நலிவுற்றோர்க்கு ரூ. 7 கோடி

உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டும் வங்கி

கூடுதல் வட்டி அளிக்கின்ற கூட்டுறவு வங்கி

"சேலம் மத்திய கூட்டுறவு வங்கி"

# மகளிர் முன்னேற்றம்

பா. வளர்மதி
உறுப்பினர், தேசிய மகளிர் நலக் குழு

இந்தியத் துணைக்கண்டத்தில் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்கும் பொருட்டு, இந்தியப் பிரதமர் அவர்களைத் தலைவராகவும், மத்திய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை துணைத் தலைவராகவும் கொண்ட திட்டக் குழு ஒன்றும், மத்திய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட வழிகாட்டிக் குழு(Steering Committee) ஒன்றும் மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

இதைப்போன்றே மாநில அளவில் மகளிர் முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுக்க மாண்புமிகு சமூக நல அமைச்சர் செல்வி பி.டி. சரஸ்வதி அவர்களின் தலைமையில் மாநிலக்குழு ஒன்று அமைக்கப்பட்டது.

மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் தமிழக முதல்வராகப் பதவி ஏற்ற பின்னர் மகளிர் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருகிறார். மகளிர் முன்னேற்றத்திற்குத் திட்டங்கள் வகுக்க முதன்முறையாக சமூக நலத்துறைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 25 இலட்சம் ரூபாய் வழங்கியுள்ளார். முதல்வர் அளித்த ஊக்கத்தினால் இதற்கு முன் இல்லாத வகையில் சமூக நலத்துறை உற்சாகமாகச் செயல்பட்டு வருகிறது.

மாநில திட்டக்குழு இதுவரை மூன்று முறை கூடியிருக்கிறது. தமிழகத்தில் மகளிர் முன்னேற்றத்திற்காகத் திட்டப்பட வேண்டிய பல திட்டங்களைப் பற்றி இந்தக் குழு ஆராய்ந்தது.

தமிழகத்தில் மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சியில் மதுவிலக்கு, மிகத்தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. மதுரை போன்ற பல இடங்களில் முதலமைச்சர் முன்பு கள்ளுப்பானைகளைப் பலர் உடைத்த நிகழ்ச்சிகள் இந்த ஆட்சியில் இடம்பெற்றிருக்கின்றன. ஒரு நாட்டில் பெண்கள் முன்னேற்றமடைய மதுவிலக்கு மிகவும் அவசியம் என்று மாநிலத் திட்டக்குழு உணர்கிறது.

தமிழக மகளிர் வேலைவாய்ப்பைப்பற்றி இந்தக்குழு பெருமளவில் அக்கறை கொண்டு திட்டங்கள் பலவற்றைத் தீட்டியுள்ளது. வேளாண்மைத்துறையில் வேலை செய்யும் பெண்களுக்கு ஆண்களுக்குச் சமமாக ஊதியம் அளிக்க வேண்டுமென்றும், தட்டச்சு, சுருக்கெழுத்து ஆகியவற்றிற்குச் சான்றிதழ்கள் வழங்குவதுபோல தையல் வேலை, எம்பிராய்டரி வேலை ஆகியவற்றிற்கும் தேர்வுகள் வைத்துச் சான்றிதழ்கள் வழங்க வேண்டும் என்றும், குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளும் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும் இக்குழு தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. வேலை செய்யும் பெண்களுக்கு விடுதி வசதி அளிக்க சேவை நிறுவனங்கள் முன்வர வேண்டுமென மாண்புமிகு சமூக நல அமைச்சர் வேண்டுகோள் ஒன்று விடுத்துள்ளார். அதன்படி சேவை ஸ்தாபனங்களை விடுதிகள் கட்ட முன்வரும்படி இந்தக்குழு கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. கிராமப்புறப் பெண்கள் செய்யும் பொருட்களை விற்க பொதுவான ஒரு முத்திரை வழங்கவும் தனியாக ஒரு விற்பனை நிலையம் அமைக்கவும் இந்தக் குழு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. இந்தக் குழு சிறார்களை வேலை வாங்குவதைக் கடுமையாகக் கண்டித்ததோடு இதனை ஒழிக்க வீட்டிலுள்ள மகளிருக்குச் சுயவேலை வாய்ப்புத்தருவதே சிறந்த வழி என்றும் கருதுகிறது.




இவை தவிர, இந்தக்குழுவில் தீண்டாமை ஒழிப்பு, வரதட்சணை ஒழிப்பு, இரயில்வே நிலையங்களில் பெண்களுக்கான பயணச்சீட்டுப்பெற தனியாக நுழைவுச்சீட்டு வழங்கும் இடங்கள் அமைத்தல் ஆகிய பொருள்கள் விவாதிக்கப்பட்டன. ஆபாசமான சுவரொட்டிகள், புத்தகங்கள் ஆகியவற்றை ஒழிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றி அதனை மத்திய அரசுக்கு அனுப்ப இக்குழு முடிவெடுத்துள்ளது. சட்டமன்றம் மற்றும் பாராளுமன்றங்களில் பெண்களுக்கு அதிக அளவில் இடங்கள் ஒதுக்க வேண்டுமென இக்குழு தீர்மானித்தது. இந்தத் தீர்மானம் மாநில சமூக நல அமைச்சர் அவர்களால் தலைநகரில் நடைபெற்ற வழிகாட்டிக்குழுக் கூட்டத்தில் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர்களை ஒழிப்பதற்கான நடைமுறைகள் இந்தக்குழுவில் ஆராயப்பட்டன. தற்போது பிச்சைக்காரர்கள் ஒழிப்புக்காகச் சமூக நலத்துறை தனியாக வண்டிகளை ஒதுக்கி அவர்களைப் பிடித்து அந்தத் துறையினரால் நடத்தப்பட்டு வரும் விடுதிகளில் சேர்ப்பித்து வருகிறது. விபச்சாரத் தடைச் சட்டத்தின் கீழ் ஆண்களும் தண்டிக்கப்பட வேண்டும் என இக்குழு கருதியது. இதற்கான செயற்குறிப்புகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தமிழக மகளிர் முன்னேற்றத்திற்கு இக்குழு தீவிரமாகப் பாடுபட்டு வருகிறது.

எளிய வாழ்க்கையைக் கொண்டோர்களிடையே உள்ள குழந்தைகள், கர்ப்பிணிகள், தாய்மார்கள், தங்கள் உடல் நலம் காக்கும் அளவுக்குத் தேவையான உணவு உட்கொள்ளுவதில்லை. மேலும் உண்ணும் உணவும் நோய் தடுக்க கூடியதும் உடல் வளர்ச்சிக்குரியதுமான முக்கிய ஊட்டச் சத்தான புரதமும், கலோரிகளும் மிகக் குறைந்த அளவில் இருப்பது நலக்குறைவுக்குக் காரணமாகும். இதுவன்றி இரத்தக்குறைவு, மாலைக்கண், கக்குவான் இருமல், தொண்டையடைப்பான் காச நோய், அம்மை முதலியவை ஏற்படுவதற்குக் காரணம் உயிர்ச்சத்து 'ஏ' குறைவும் இரும்புச் சத்து, சுண்ணாம்புச் சத்துக் குறைவும் ஆகும். சத்துக் குறைவினால் அதிக அளவில் சிசு மரணம், தாய்மார் அகால மரணம் முதலியவை ஏற்படுகின்றன.

மக்களுக்கு ஊட்டச்சத்தினையளித்து ஊட்டக்குறைவினைப் போக்குவதற்கு, வளர்ச்சிப்பணிகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

**தடுப்பு:** ஏழை மக்களிடையே முக்கியமாக கர்ப்பிணி, பாலூட்டும் தாய்மார்கள் மேலும் 6 மாதம் முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளின் ஆதாரக் குறைவை நிறைவு படுத்தவும் முக்கியமாகப் புரத கலோரிகள் தேவையைப் பூர்த்தி செய்யவும் சிறப்புச் சத்துணவுத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**செயலாக்கம்:** இத்திட்டத்தைத் தமிழக அரசு சமூக நலத்துறை மூலம் மான்யம் அளித்து, உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக 'கேர்' நிறுவனம் இலவசமாக வழங்கும் உணவுப் பொருள்களான பாலாஹார், சால்டு எண்ணெய் முதலியவை கொண்டு சத்துணவு தயார் செய்து உண்ணும் உணவில் உள்ள சத்துக் குறைவை நிறைவு படுத்தும் வகையில் பயனடைவோர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஒரு பயனடைவோருக்குத் தினமும் 6 காசு வீதம் ஓர் ஆண்டிற்கு 300 நாட்களுக்கு அரசு மான்யம் வழங்கப்படுகிறது.

மளிகைச் சாமான்கள், காய் கறிகள், அக போக்குவரத்துச் செலவுகள், அமைப்பாளர், உதவியாளர், சமையல்காரர்கள் முதலியோருக்குச் சிறப்பூதியம் இந்தத் தொகையிலிருந்து செலவிடப்படுகிறது. அடுத்து பயனடைவோருக்குத் தலா ரூ. 5 வீதம் மீளாத் தொகையாகச் செலவுசெய்ய அதாவது சமையல் கூடம் அமைத்தல், எளிய போக்குவரத்து வாகனம் வாங்குதல் முதலியவை மீளாச் செலவினங்களுக்குத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது வழங்கப்படுகின்றன.

1977-78ஆம் ஆண்டில் 60 உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக 2,76,530 பயனாளிகள் பயனடைந்தனர். அந்த நிதியாண்டில் தமிழக அரசால் இத்திட்டத்திற்காக 41 இலட்சம் நிதி செலவிடப்பட்டது. 1978-79ஆம் ஆண்டில் 60 உள்ளாட்சி மன்றங்களின் வாயிலாக 2,76,530 பயனாளிகள் பயனடைந்தனர். அந்த நிதியாண்டில் தமிழக அரசால் ரூ. 46 இலட்சம் நிதி செலவழிக்கப்பட்டது. நகராட்சிகளிலுள்ள மருத்துவர்களால் சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயனடைவோருக்கு முதன்மையான நோய்த் தடுப்பு ஊசிகள் போடப்பட்டும் இதர மருத்துவ வசதியும் செய்யப்பட்டு வருகிறது. இப்படி மருத்துவ வசதிகள் இணைந்த திருத்திய சத்துணவுத் திட்டம் சென்னை மாநகரம், மதுரை மாநகரம், கோயம்புத்தூர், புதுக்கோட்டை சிங்காநல்லூர் நகராட்சிகளில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சிகள் வாயிலாகச்செயல் படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் பயனடைவோருக்கு வாரம் ஒரு முறை தலா 700 கிராம் சமைக்காத பாலாஹார் வழங்கப்படுகிறது. இத்திட்டத்திற்காகத் தனியாக மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு ஒவ்வொரு பயனடைவோருக்கும் தடுப்பு ஊசிகளும் போடப்படுகின்றன. இத்திட்டத்தை மேலும் 2,75,000 நபர்கள் பயனடையும் வண்ணம் ஆண்டு வாரியாக விரிவுபடுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

# சிறப்புச் சத்துணவுத் திட்டம்



**இரா. பட்டம்மாள்**
சிறப்புச் சத்துணவுத் திட்ட தனி
அலுவலர், சமுகநல இயக்கம்

# குழந்தைகள் ஆண்டு




கா. தங்கவேலு
இணை இயக்குநர்
(சமூக நலம்)
சமூக நலத்துறை.


1979 ஆம் ஆண்டை "அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு'' என ஐக்கிய நாடுகள் பேரவை பிரகடனப்படுத்தியுள்ளது. அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு எனச் சிறப்பாக அழைப்பதின் முக்கிய நோக்கம், ஒவ்வொரு நாடும் சிறப்பாகக் குழந்தையின் அனைத்து வளர்ச்சிப் பருவத்திலும் அவர்களின் தேவைகளைக் கொள்கை அளவில் ''நலப் பணி'' எனக் கருதாமல், நாளைய சமுதாய வளர்ச்சிக்கு வளமான வழி செய்து, இளமையிலேயே சிறப்பான வித்திட்டு முனைப்புடன் செயல்படுவது நாளைய உலக முன்னேற்றத்திற்கு அடிகோலுவது ஆகும்.

**இவ்வாண்டு நிறைவேற்றப்பட உள்ள திட்டங்கள்:**

* தமிழகத்திலுள்ள அனைத்து உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் 1979 ஆம் ஆண்டிற்குள் கூடுமானவரை செயற்கை அங்க அவயவ உறுப்புகள் வழங்கல்.

* ஐந்தாண்டுக் காலத்திற்குள் ஒன்பதாயிரம் பாலர்பள்ளிகள் திறந்து தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளிலும் குறைந்த பட்சம் ஒரு பாலர் பள்ளி ஏற்படுத்துதல்.

* ஆயிரம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு நான்கு பராமரிப்பு இல்லங்கள் அமைத்தல்.

* ரூபாய் ஆறு இலட்சம் செலவில் குழந்தைகள் அருங்காட்சியகம் ( Children's Museum ) அமைத்தல்.

* ஒன்று முதல் எட்டாம் வகுப்புவரை பயிலும் உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குப் படிப்பு உதவித்தொகை அளித்தல் ஆகியன.

அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைத் தமிழகத்தில் சிறப்பாகக் கொண்டாடும் பொருட்டு திட்டங்களை அரசுக்குப் பரிந்துரை செய்ய மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் ஓர் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக் குழு நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. இது தவிர மூன்று செயற்குழுக்கள் (1) குழந்தை நலம் மற்றும் சத்துணவு (2) கல்வி (3) சமூக நலம் ஆகிய பிரிவின் கீழ் திட்டங்களைப் பரிந்துரை செய்ய அரசு நியமித்துள்ளது.

**குழந்தைகள் ஆண்டினை ஒட்டி இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்:**

(அ) 1.1.79 அன்று அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டைக் குறிக்கும் வகையில் பாலர் பள்ளி மற்றும் பள்ளிக் குழந்தைகளின் அணிவகுப்புகள் நடத்தப்பட்டன.

(ஆ) 1.1.79 அன்று தமிழகத்திலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகள் மற்றும் மகப்பேறு இல்லங்களில் பிறந்த குழந்தைகள் அனைவருக்கும் அனைத்து நாட்டு மற்றும் இந்திய சின்னங்கள் பொறிக்கப்பட்ட போர்வைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

(இ) தமிழகத்தில் அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டின் துவக்கவிழா 11.1.79 அன்று சென்னை கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் விழாவினைத் துவக்கி வைத்து உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கை அவயவங்கள் வழங்கினார்.

(ஈ) சென்னையில் நடைபெற்ற அகில இந்திய வர்த்தகப் பொருட்காட்சியில் 9.3.79 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தலைமையில் அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

(உ) தமிழ்ப்புத்தாண்டு தினத்தையொட்டி 1979 ஏப்ரல் திங்களில் சிறப்புப் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தப்பட்டு, அதன் வருவாய் முதலமைச்சரின் குழந்தைகள் நிதியில் சேர்க்கப்பட்டது. வரும் டிசம்பர் திங்களில் முற்றிலும் குழந்தைகளுக்கான ஒரு சிறப்புப் பரிசுச்சீட்டுக் குலுக்கல் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஊ) தமிழகத்தில் குழந்தைகள் நலத்திட்டங்களைச் சிறப்புறச் செயல்படுத்த ''முதலமைச்சரின் குழந்தைகள் நல நிதி'' என்ற சிறப்பு நிதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு ஒரு கோடி ரூபாய் நிதி திரட்ட பல்வேறு வகை திட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகின்றன.

(எ) தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலும் மற்றும் மாவட்ட அளவிலும், குழந்தைகள் கண்காட்சியும், கருத்தரங்குகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக அரசு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஆறு ஆயிரம் ரூபாயும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் ஆயிரம் ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும், இதுபோன்ற பல சிறப்புத் திட்டங்கள் மாநில அரசின் பல துறையினரால் தீட்டப்பட்டு 1.1.79 முதல் துவங்கி தமிழகத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் உள்ள குழந்தைகளின் நலனுக்காகச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. பண்டித நேரு அவர்கள் பிறந்த தினமான 14.11.79 தேதியன்று குழந்தைகள் தினம் சென்னையிலும், மற்றும் மாவட்டங்களிலும் வட்டாரங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

சேவையில் சிறந்த வங்கி
சென்னை
மத்திய கூட்டுறவு
வங்கி

சுய தொழில் புரி வோர்க்குக் கடன் ரூ.4.37 இலட்சம்

உடல் ஊனமுற்றோர் தொழில் புரிய 4% வட்டியில் கடன்

ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்கி ஓட்டுநர்களுக்குக் கொடுக்க ரூ. 19.56 இலட்சம் கடன்கள் வழங்கியது.

வலை வாங்க, மற்றும் பழுது பார்க்க, கட்டு மரம் பழுது பார்க்க, இயந்திரப் படகுகள் வாங்க ரூ. 22.06 இலட்சம் மீனவர்களுக்கு கடன்கள் வழங்கியது.

நகர வங்கிகள் மூலம் சிறு தொழில் வளர்ச்சிக்கு ரூ. 6.96 இலட்சம் கடன்கள் வழங்கியுள்ளது.

விலைவாசியைக் கட்டுப்படுத்த டி.யு.சி.எஸ். முதலிய நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 113.16 இலட்சம் கடன் வசதி அளித்தது.

நலிவுற்றோர்க்கு வங்கி வழங்கிய நகைக்கடன்கள்

| | | |
|---|---|---|
| 1977—78ல் | ... .... | ரூ. 272 இலட்சம் |
| 1978—79ல் | ... .... | ரூ. 517 இலட்சம் |
| 1979—80ல் (6 மாதங்களில்) | ... .... | ரூ. 668 இலட்சம் |

இந்தப் படிகள்...
எங்களின்
சேவைப்படிகள்
மட்டுமல்ல
உங்கள் வாழ்வின்
உயர்வுப்படிகளும் கூட...

சுமார் 5 இலட்சம் பணியாளர் குடும்பங்களின் வாழ்க்கை வசதியைப் பெருக்க, வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ. 1800.56 இலட்சங்கள் கடன் வழங்கியது.

| உறுப்பினர்களுக்கு சிறப்புச் சேவை | |
|---|---|
| பங்குத் தொகைக்கு 12% டிவிடெண்ட் | இலாப விகிதம் வைக்காது சலுகை வட்டியில் கடன்கள் |

**வைப்புகள் :**

வங்கி எல்லாவித வைப்புகளையும் பெற்று ½ சதவிகிதம் அதிக வட்டி அளிக்கின்றது.

| | |
|---|---|
| சேமிப்புக் கணக்கு .. ... | 5½% |
| நிரந்தர வைப்பு ... ... | 4½% முதல் 10½% வரை |
| குழந்தைகள் வைப்பு ... .... | 9% |
| ரொக்கச் சான்றிதழ் ... .... | 7½% முதல் 10½% வரை |
| செல்வக் களஞ்சியம் .... .... | 10½% |
| இரட்டை ஓய்வூதிய வைப்பு .... | 10½% |
| கற்பகம் நிரந்தர (ஓய்வூதிய வைப்பு) | 10½% |
| தொடர் வைப்பு .. .. | 10½% |

*அனைத்து வாடிக்கையாளர் சேவைகளையும் அளிக்கின்றது. டிராப்ட்டுகள், பே-ஆர்டர்களை கழிவு, கட்டணமின்றி வழங்குகின்றது.*

| | |
|---|---|
| வங்கியின் பங்கு மூலதனம் | ரூ. 2 கோடிக்கு மேல் |
| நடைமுறை மூலதனம் | ரூ. 26 கோடிக்கு மேல் |
| வைப்புகள் .... | ரூ. 18 கோடி |
| இலாபம் (1977-78) | ரூ. 74.18 இலட்சங்கள் |

**சேமிப்புகளை முதலீடு செய்வீர்!**

**சிறப்பான சேவையையும்**

**அதிக வருமானத்தையும் அடைவீர்!...**

# சென்னை மத்திய கூட்டுறவு வங்கி

தொலைபேசி எண்கள் 21784, 27888, 29687

MCCB



# ஸ்திரீ சேவா மந்திர்

"ஸ்திரீ சேவா மந்திர்'', பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், குழந்தைகளின் நலனுக்காகவும் கடந்த முப்பது ஆண்டுகளாகப் பயனுள்ளவகையில் பணிபுரிந்து வந்துள்ளது. துன்பத்தில் உழலும் பெண்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகப் பாடுபடுவதே இந் நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொருவருக்கும் தங்க இடம், உணவு, கல்வி, வேலைப் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் அவரவர் திறமைக்கு ஏற்றவாறு அளிக்கப்படுகின்றன.

இந் நிறுவனத்தின் முக்கியமான ஐந்து இலட்சியங்கள், இதன் பல்வேறு கிளைகளால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. வசதியுள்ளவருக்கும் ஏற்றவகையில் இந்நிறுவனம் அமைந்து, அவர்களிடமிருந்து பெறுகின்ற நிதியைக் கொண்டு ஆதரவற்றவருக்குச் சேவை செய்கின்றது. இது மட்டுமின்றி, மத்திய மாநில அரசுகளின் நிதி உதவி, அயல் நாட்டு நிதியுதவு, பொதுமக்களின் நிதியுதவியையும் பெற்று, ஆதரவற்றவருக்கு உதவுகின்றது.

ஸ்திரீ சேவா மந்திரின் விடுதிகள் பசுல்லா வீதி, சாலிக்கிராமம், விருகம்பாக்கம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. இதில் 40 வயதுக்குட்பட்ட 350 பெண்களும், குழந்தைகளும் தங்கியுள்ளனர். விருகம்பாக்கம் விடுதியிலுள்ள 100குழந்தைகட்கு மத்திய அரசு உதவி புரிந்து வருகின்றது.

சாலிக்கிராமத்தில் வேலை செய்யும் பெண்களுக்கென அமைந்துள்ள விடுதியில் 35 குறைந்த வருவாய் பெறும் பெண்டிரும் மற்றும் ''அப்ரண்டீஸ்'' பயிற்சி பெறுபவர்களும் தங்கியுள்ளனர்.

பசுல்லா வீதியிலும், சாலிக்கிராமத்திலும் அமைந்துள்ள விடுதிகளில் வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் குழந்தைகளுடனும், மற்றும் பள்ளி செல்லும், ஆதரவற்ற குழந்தைகளும் தங்கியுள்ளனர்.

## தொழிற் பயிற்சி:

ஸ்திரீ சேவா மந்திரின் மேற்பார்வையில் ஆரம்பப்பள்ளி ஒன்றும், நடுநிலைப் பள்ளி ஒன்றும், உயர்நிலைப்பள்ளியொன்றும் அமைந்துள்ளன. இவற்றில் முறையே 150, 1000, 1800 என்ற கணக்கில் மாணவர்கள் உள்ளனர். இம் மாணவர்கள் மூன்றிலிருந்து பதினாறு வயதுக் குட்பட்டவர்கள். இவ் விடுதியில் தங்கியுள்ள குழந்தைகள் இப் பள்ளிகளிலும் மற்றும் தனியார்ப் பள்ளிகளிலும் கல்வி பயிலுகின்றனர்.

## பள்ளிகள்:

ஆரம்பக் கால முதலே ஸ்திரீ சேவா மந்திர், தொழிற் பயிற்சியில் மிகுந்த அக்கறை கொண்டு இயங்கி வருகிறது. செய்யும் தொழிலின் உயர்வை அறிவதற்காகவும், அவரவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்வதற்காகவும், தன்னம்பிக்கை உண்டாக்கவும், இந்நிறுவனம் இடைவிடாது பாடுபட்டு வருகின்றது.

ஸ்திரீ சேவா மந்திரின் மேற்பார்வையின் கீழ் அமைந்துள்ள அரசினர் மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏறக்குறைய 260 பயிற்சியாளர்கள் தையல், பூவேலை, நெசவு, தட்டெழுத்து, சுருக்கெழுத்து, புத்தகம் கட்டுதல், வானொலி, தொலைக்காட்சி கருவிகள் பழுது பார்த்தல், கருவிகள் செய்தல் ஆகிய துறைகளில் பயிற்சி பெறுகின்றனர். 32 பயிற்சியாளர்களுக்கு 'டிராப்ட்ஸ்மேன்' பயிற்சி கொடுக்க எண்ணியுள்ளனர்.

ஸ்திரீ சேவா மந்திரின் நேரடி மேற்பார்வையில் நடைபெறும் 'லோட்டே லெம்கே' கலைத் தொழில் நிறுவனத்தில் இவ்வகைப் பயிற்சிகள் 450-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெறுவோரின் வசதிக்கு ஏற்பப் பகுதி நேர, முழுநேரப் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இவ்வகைப் பயிற்சிகள் பட்டம்பெற அல்லது சுயவேலை பெறக் கற்போருக்கு அளிக்கப்படுகின்றன. இங்குப் பயிற்சி பெறும் மாணவியரில் 50 பேருக்கு மத்திய சமூக நலப் பாதுகாப்பு வாரியத்தின் உதவியும், மற்றும் 50 மாணவியருக்கு மாநில சமூக நலப் பாதுகாப்புத் துறையின் உதவியும் கிடைக்கின்றன. இவர்களுள் 16 பேர் உடல் ஊனமுடையோர், மற்றும் 16 பேர் காதுகேளாத ஊமைகள். உடல் ஊனமுடையோர், தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆகியவற்றில் பயிற்சியும், காதுகேளா ஊமைகள் தையற் கலைப் பயிற்சியும் பெறுகின்றனர்.

மத்திய அரசின் உதவியோடு துன்பத்தில் உழன்ற நாற்பது பெண்களுக்கு1979-ஆம் ஆண்டில் புத்தகம் கட்டுதல், அச்சுக கோத்தல், உடை தைத்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கப் பட்டது.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் வேலைக்காகப் பயிற்சி அளித்தலும், பயிற்சி பெற்றபின் வேலை அளித்தலுமே ஆகும். இது வரையில் 6,500 பெண்கள் பயிற்சியும், சுய-வேலைவாய்ப்பும் பெற்றுள்ளனர்.

# வழிகாட்டும் நிலையங்கள்

**என். சி. கோதமணி**
**சிறப்பு அலுவலர்**
**(வழிகாட்டி நிலையம்)**
**சமூக நலத்துறை.**

**ச**முதாயத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள விதவை மற்றும் அனாதை, ஆதரவற்ற பெண்களின் நலனிற்கும் அவர்களது சீரான மறுவாழ்விற்கும் உதவி புரிவது மிகவும் உணர்ச்சிகரமான மற்றும், தீவிர கவனத்துடன் கையாள வேண்டிய அரசின் மிக முக்கிய பொறுப்புக்களில் ஒன்றாகும்.

சமூக நிலையிலும் பொருளாதார நிலையிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் பொறுப்பாகவும் தனிப்பட்ட கவனத்துடனும் செயல்படுத்துதல் மிக அவசியம். அவர்களை அன்புடனும், ஆதரவுட்னும் அணுகி மிக விரைவாக மறு வாழ்வு அளித்து அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும், தக்க தருணத்தில் உணர்ந்து தமிழக அரசு 1978-ஆம் ஆண்டு இதற்கென தனியே சமூக நலத்துறையின் கீழ் நான்கு மாவட்டங்களில் வழிகாட்டி நிலையங்கள் அமைத்துள்ளது. இந்நிலையங்கள் சென்னை, தஞ்சை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

நிலையங்களை நாடிவரும் பெண்களை அன்புடனும், ஆதரவுடனும் அணுகி அவர்களின் தரத்தை அறிந்திடவும், காலத்தில் தக்க உதவிகளைச் செய்திடவும் அவர்களைத் தீர விசாரித்தல் மிகஅவசியம்என இந்நிலையங்கள் கருதுகின்றன. ஆகையால், அவர்களுடைய சமுதாய நிலை, குழந்தைகளின் விவரங்கள், வருவாய் விவரங்கள், கல்வி மற்ற தகுதிகள் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இந்நிலையங்களின் நோக்கங்கள் முதலில், ஏழை விதவைத் தாய்மார்களின்குழந்தைகளுக்குத் தக்க பாதுகாப்பு, உணவு, கல்வி ஆகியவற்றைச் சமூக நிலையங்கள் மற்றும் அரசு நடத்தும் நிலையங்கள் மூலம் அளிக்க உதவி செய்தல், விதவைப் பெண்மணிக்குக் கல்வியும், வாழ்க்கைக்குத் தேவையான தொழிற்பயிற்சியும் நல நிறுவனங்களின் மூலம் அளித்தல், அவர்களின் இறந்து போன கணவன்மார்களுக்குச் சேர வேண்டிய வைப்பு நிதி, ஆயுள் கால வைப்பு நிதி, ஆகியவற்றைப் பெற்றுத்தர ஏற்பாடு செய்தல், வேலை கோரிவரும் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வசதி குறைவாக இருப்பதால், தங்கள் முயற்சியிலேயே கவுரவமான வாழ்க்கை நடத்துவதற்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஏதேனும் தொழில் புரிந்திட தேவையான பண உதவியை அரசுடைமையாக்கப்பட்ட அல்லது தனியார் வங்கிகள் மூலம் கடனாகப் பெற்றுத் தருதல் ஆகியவை.

மேற்கூறிய பணிகளை நிறைவேற்றிட சென்னை சமூக நலத்துறையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டி நிலையத்தில் சமூக இயலில் தேர்ச்சிப் பெற்ற சிறப்பு அலுவலர் பிரத்தியேகப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சென்னை வழிகாட்டி நிலையத்தில் தனது சொந்தப் பொறுப்புகளுடன், மற்றுமுள்ள மூன்று மாவட்ட வழிகாட்டி நிலையங்களின் பணிகள் செவ்வனே நடைபெற அந்தந்த வழிகாட்டி நிலைய அலுவலர்களுக்கு அவ்வப்போது நேரில் சென்று தக்க அறிவுரையும், ஆலோசனையும் அளித்து வருகிறார்.

இந்நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து சுமார் 2,500 குடும்பங்களில் உள்ள விதவை, அனாதை மற்றும் ஆதரவற்ற பெண்கள் பயனடைந்துள்ளார்கள். இந்நிலையங்களின் மூலம் உதவி நாடி வரும் பெண்களில் பெரும்பாலோர் கல்வி அறிவு அற்றவர்களே. ஆயினும் பிழைப்பதற்கு வழி வேண்டி ஏதேனும் வேலை ஒன்றையே நாடி வருகின்றனர். தக்க வேலை வாய்ப்பு வசதி இல்லாததால் இவர்களுக்குச் சுயவேலை அமைத்துக்கொள்ள வழியும், ஆலோசனையும் வழங்குவதோடு அல்லாமல் வங்கிகளுடன் நேரிடை தொடர்பு கொண்டு, அவர்கள் மூலமாகக் கடன் பெற்றுத் தரப்படுகிறது. இதுபோல், சுயதொழில் தொடங்குவதற்கு இவ்வழிகாட்டி நிலையம் தீட்டிய திட்டம் தற்போது மிகவும் முன்னேற்ற நிலையை அடைந்து, நலிவுற்ற பெண்களால் நல்ல முறையில் வரவேற்கப்பட்டும் வருகிறது. குறைந்த அளவில் கடனுதவி அளித்தாலும் அதன் மூலம் தங்களின் வாழ்க்கைத் தரத்தினைச் சீரமைத்துக் கொள்ள அவர்களுக்கு உதவுகிறது.

சிற்றுண்டி, காய்கறி, பழம், பூ, கட் பீஸ் துணி, அலுமினியம் மற்றும் எவர்சில்வர் சாமான்கள், பங்க் கடை போன்ற தொழில்களுக்கு வழிகாட்டி நிலையங்கள் பரிந்துரை செய்யப் பட்டு, நேர்முகத் தொடர்பு செய்து அனுப்பும் நலிவுற்ற பெண் களுக்கு மிகவும் திருப்திகரமான முறையில் வங்கிகள் உதவி புரிகிறது என்பதை எடுத்துச் சொல்ல வழிகாட்டி நிலையம் கடமைப்பட்டுள்ளது.

ஆனால், வங்கிகள் மிகக் குறைந்த வட்டியுடன், அதாவது ரூபாய் 100-க்கு ஆண்டிற்கு ரூபாய் 4. Differential rate of interest Scheme என்ற திட்டத்தின் மூலம் உதவி புரிகிறது. இதன் மூலம் மட்டுமே வழிகாட்டி நிலையங்கள் ஆரம்பித்ததிலிருந்து ஏறத்தாழ 2,000 நலிவுற்ற பெண்கள் பயனடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.



# தரமான பொருட்களைத் தயாரித்தளிக்கும் பணியில் தனிப்புகழ் பெற்ற நிறுவனம்

# டான்சி



மக்கள் நலனையே மனதில் கொண்டு அக்கறையுடன் செயலாற்றும் நிறுவனம் டான்சி!

டான்சி தொழிற்கூடங்களில் தயராகும் ஒவ்வொரு பொருளும் தீவிர தரக்கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டவை. டான்சி என்றாலே தரமான பொருட்கள். ஆம்! வாடிக்கையாளர்கள் இதனை நன்கு அறிவர்.

உங்கள் இல்லத்துக்கும் அலுவலகத் துக்கும் ஏற்ற பொருட்கள் மட்டுமல்ல— தொழிற்துறைக்கும் டான்சி தயாரித் தளிக்கும் பல்வேறு பொருட்களின் பட்டியல் இதோ!

கட்டுமானங்கள் மற்றும் கோபுரங்கள், இயந்திரக் கருவிகள், எஃகு மற்றும் மர மேசை நாற்காலிகள், இணைப்பு வண்டிகள், விவசாய உபகரணங்கள், செம்புக் கம்பிகள், உறுப்புகள் (Forged, Pressed, and Diecast) பாதுகாப்பு காலணிகள் மற்றும் கை உறைகள், பிரஞ்ச் பாலிஷ் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்.

எடுத்துச் சொல்ல இத்தனைதான்... ஆனால் இன்னும் எத்துணை பொருட்கள்?

*தரத்துக்கோர் சின்னம் டான்சி!*

## டான்சி

## தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம்

(தமிழ்நாடு அரசின் ஒரு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014

தொலைபேசி: 82161 தந்தி: TANSI டெலக்ஸ்: 41-7496 TNSI



# குழந்தைகள் காப்பகங்களின் வெற்றி!

நா. வசந்தகுமாரி சிறப்பு அலுவலர் (குழந்தைகள் நலம்)
சமூக நலத்துறை.

சமூக நலத்துறையின் குழந்தைகள் நலத் திட்டங்கள் ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கென உருவாக்கி செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆறு வயதிற்குட்பட்ட இந்த முன் பள்ளிப் பருவமானது, குழந்தைகளின் வளர்ச்சிப் பருவங்களில் மிகவும் முக்கியமானது எனவும், உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு அடிகோலும் பருவம் எனவும் குழந்தைகள் நல வல்லுநர்கள் கோடிட்டுக் காட்டுகிறார்கள். இந்தப் பருவத்தில் அவர்களுடைய உடல் மற்றும் மன வளர்ச்சிக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்படாவிட்டால் அது பின்னர் நிவர்த்தி செய்ய இயலாத சேதத்தை விளைவிக்கும் என்றும் கூறுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டே தமிழக அரசு தமிழமெங்கும் குழந்தைகள் காப்பகங்கள் திட்டத்தை மேற்கொண்டு உள்ளது.

இக் குழந்தைகள் காப்பகங்கள் என்பவை என்ன?

நகர்ப்புறங்களில் நர்சரி பள்ளிகள் அமைக்கப்பட்டு நடைபெற்று வருவதைக் காண்கிறோம். பெற்றோர்கள் தங்களின் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை இப்பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். ஐந்து வயது வந்த பின்னர் அவர்கள் பள்ளிகளுக்குச் செல்ல ஏதுவாகிறது. ஆனால் கிராமப்புறங்களில் சென்று இவ்வாறு நர்சரி வகுப்புகள் நடத்துபவர்களும் இல்லை. கல்வியின் அவசியமும் இன்னும் கிராமப் புறங்களில் உணரப்பட வேண்டியுள்ளது. இந்நிலையைச் சீர்படுத்த குழந்தைகள் காப்பகங்கள் கிராமப்புறங்களில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.



ஆதாரப் பள்ளிக்கே ஆதாரமான முன்னாதாரப் பள்ளி, நாடெங்கும் தகுந்த கவனிப்பைப் பெறவில்லை. ஆதாரக் கல்வியை அனைவருக்கும் வழங்குவதில் கவனம் எடுத்துக் கொண்டவர்கள், முன்னாதாரக் கல்வியின் அவசியத்தையும், அக் கல்விதான் வீட்டிற்கும், ஆதாரப்பள்ளிக்கும் ஒரு பாலமாக உள்ளது என்பதையும் உணரவில்லை. இந்த வகையில் தமிழகம் அதிர்ஷ்டமானது எனவே சொல்லலாம்.

ஆதாரக் கல்வி கற்க குழந்தைகளைத் தயார் செய்யும் முன்னாதாரப் பள்ளிகளை அமைப்பது மிகவும் அவசியம் என அரசு உணர்ந்துள்ளது. முன்னாதரவுக் கல்வி பெற்ற குழந்தைகள், கல்வி கற்பதில் ஆர்வமும், அக்கறையும், கவனமும் காட்டுகிறார்கள்; அவர்கள் கல்வித்திறம் சிறப்பாக உள்ளது. பள்ளிப் படிப்பினை பாதியில் விட்டுச் செல்வது மிகுந்த அளவு குறைகிறது. நாட்டிற்கும் நல்ல குடிமகன் கிடைக்கிறான்.

நம் மாநிலத்தில் உள்ள இலவசக் கல்வி வெற்றியடைய பெருமளவு உதவி செய்வதுடன், இது பெண் குழந்தைகளின் படிப்பிற்கும் ஊக்கமளிக்கிறது. குழந்தைகள் காப்பகங்களில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பும் கல்வியும் அளிப்பதனால் இச்சிறு குழந்தைகளைக் கவனிப்பதற்கென்றே வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பெண் குழந்தைகள் கல்வி கற்க ஏதுவாகிறது.

குழந்தைகள் காப்பகங்களில் 2½ வயது முதல் 5 வயதுவரை உள்ள குழந்தைகள் சுமார் 40 பேர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். வேலை செய்யும் பெண்களுக்கு உதவும் வகையில் இக் காப்பகங்கள் காலை முதல் மாலை வரை நடைபெறுகின்றன. இங்கு குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் மூலம் கல்வி போதிக்கப்படுகிறது. விளையாட்டுக்களுடன், பாட்டு, நடனம் முதலியவையும், நல்ல பழக்க வழக்கங்கள், சுகாதாரம் முதலியவைகளும் கற்றுத் தரப்படுகின்றன. இவை மட்டுமின்றி, காப்பகங்களுக்கு வரும் குழந்தைகளுக்குப் பகல் வேளையில் 'கேர்' நிறுவன உதவியுடன் சத்துணவு வழங்கப்படுகிறது. இக் காப்பகங்கள் மூலம் சுமார் 3 இலட்சம் குழந்தைகளும், தாய்மார்களும், சத்துணவு பெறுகிறார்கள்.

காப்பகத்திற்கு வரும் குழந்தைகளின் உடல் நலம் பேண, ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவர்களும் இங்கு வந்து, நோய்த் தடுப்பு ஊசி அளிக்கிறார்கள். இக் குழந்தைகளின் மூலம், அவர்களின் பெற்றோர்களையும் அணுகி அவர்களுக்கும், சுகாதாரம் மற்றும்சத்துணவு கல்வி வழங்க ஏதுவாகிறது. ஐந்து ஆண்டுகள் பூர்த்தி செய்த குழந்தைகளை, குழந்தைகள் காப்பகம் நடத்தும் குழந்தைகள் நலப் பணியாளர், அவ்வூரில் உள்ள பள்ளிகளில் சேர்க்கிறார்கள். இவ்வாறு குழந்தைகள் காப்பகங்களிலிருந்து பள்ளி வரும் குழந்தைகள், மற்ற குழந்தைகளைவிடத் திறமையாக இருப்பதாகவும், அவர்கள் பள்ளிப் படிப்பை இடையில் விடாமல் இருப்பதாகவும் ஆங்காங்கே ஆரம்பப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் கூறுகிறார்கள். இதையே இக் குழந்தைகள் காப்பகங்களுக்குக் கிடைத்த வெற்றியாகக் கொள்ளலாம்.



# தமிழ்நாடு
# நுகர்வோர் கூட்டுறவு இணையம்

## பதிவு எண்: எக்ஸ். எண். சி. 663

(தமிழ்நாட்டில் இயங்கும் நுகர்வோர் கூட்டுறவுகளுக்கான மாநில நிறுவனம்)


தலைமை அலுவலகம்: சென்னை-17 | கிளை: மதுரை
தொலை பேசி எண்: 444725
444763 | 25015

தந்தி: "STATEFED"


*தமிழ்நாட்டில் இயங்கி வரும் நுகர்வோர் கூட்டுறவுகளின் மூலம் ஏழைகளுக்காகக் கட்டுப்பாடு விலையில் துணிகள், மற்றும் மில்களில் நேரடியாகக் கொள்முதல் செய்த துணி வகைகள், அரசு வெளியீடு பாடப் புத்தகங்கள், மலிவு விலையில் மாணவர்களுக்கான நோட்டுப் புத்தகங்கள் கட்டுப்பாடு காகிதங்கள், குழந்தை உணவுகள், மின்கலம் செல்கள், மளிகைச் சாமான்கள், சலவைச் சோடா மற்றும் அத்தியாவசிய பண்டங்களை மக்களுக்கு இவ்விணையம் விநியோகம் செய்து வருகிறது.*

*சென்னை, செங்கை மற்றும் வட ஆற்காடு மாவட்டங்களில் உள்ள மக்களுக்குத் தேவையான அனைத்து நுகர் பொருட்களையும் உற்பத்தியாளர்களிடமிருந்து அதிக அளவில் நேரடியாகக் கொள்முதல் செய்து, அம்மாவட்டத்தில் இயங்கும் கூட்டுறவுகளின் மூலம் தரமான சாமான்களாகவும், நியாயமான விலையிலும் விநியோகம் செய்ய இவ்விணையம் மண்டல விநியோக மையம் ஒன்று நிறுவி வருகிறது.*

உங்களின் அன்றாட தேவைகளுக்கு நாடிடுவீர் கூட்டுறவு பண்டக சாலைகளை! தரம், விலை, எடை ஆகியவற்றில் தவறேதும் அங்கில்லை!! நீங்களே அப்பண்டக சாலைகளின் சொந்தக்காரர்!!!

"பொறியின்மை யார்க்கும் பழியன்று
அறிவறிந்து ஆள்வினையின்மை பழி''

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. உறுப்புக் குறைவு ஓர் பழியல்ல; உண்மையான முயற்சியின்மைதான் பெரும் பழி என்கிறார் தெய்வப் புலவர் திருவள்ளுவர்.

''மனிதனின் எண்ணத்தில் ஊனம்; சிந்தனையில் குறைவு; செயலில் குற்றம்''. ஆகியவை மனிதனின் வாழ்வுக்கும், சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் தடைக்கற்கள். ஆனால் உடல் ஊனம், மனிதனின் செயல்திறனின் வேகத்தை ஓரளவு கட்டுப்படுத்தலாமே தவிர, செயல்திறனை முழுக்க அழிக்க முடியாது. அவரது செயல் திறத்தால் அவருக்கும் வாழ்வுண்டு; சமுதாயத்திற்கும் வளமுண்டு. இதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்திருப்பதால் உடல் ஊனம் ஒரு பெரும் குறையல்ல என்பதை அறிந்து, அவர்களின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**பெரும்புகழ் பெற்ற பெரியோர் :**

'அந்தகக் கவி' கண்பார்வையற்றவரே! ஆனால் அந்தக் கவியின் செந்தமிழ்ப் பாடல்கள் தமிழ்ப் பெருமக்களின் சிந்தனையை என்றும் மயக்கும் தன்மை வாய்ந்தனவாகும். இரட்டைப் புலவர்களின் ஒருவர் கண்பார்வையற்றவர்; மற்றவர் இருகால்களும் ஊனமுற்றவர். ஒருவர் பாடலை எடுத்தால், இன்னொருவர் முடிப்பார். அந்த இரட்டையரின் இனிய தமிழ்ப் பாடல்கள் தமிழ் இலக்கியத்திற்கு என்றும் அழியாச் செல்வங்களாகும்.

கால் ஊனமடைந்த ரூஸ்வெல்ட் அமெரிக்காவின் பெரும் புகழ் பெற்ற ஜனாதிபதிகளில் ஒருவர். கண்பார்வையும், காது கேட்கும் தன்மையும் இழந்த 'ஹெலன் கெல்லர்' அவர்கள் சிறந்த அறிவுலக மேதையாக வாழ்ந்திருக்கிறார்கள்.

மனிதனின் உயர்வுக்கு ஊனம் தடைக்கல் அல்ல என்பதற்கு எடுத்துக் காட்டுக்களே மேற்கூறியவை. தகுந்த வாய்ப்பும், சூழ்நிலையும் வழங்கப்படுமானால், ஊனமுற்றவர்கள் மற்றவர்களைவிடச் சிறந்து விளங்க முடியும். இதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்திருப்பதால் ஊனமுற்றோரின் உள்ளாற்றலை முழுமையாகப் பயன்படுத்தி, அதனால் அவர்களுக்கும் வாழ்வு அளித்து, சமுதாயத்திற்கும் வளம் சேர்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது.

**ஊனமுற்றோர் மாநில வாரியம் :**

ஊனமுற்றோரின் நலன் கருதி தமிழக அரசு, ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்காகவென்றே ''ஊனமுற்றோர் மாநில வாரியம்'' என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் ஊனமுற்றோருக்கு பல வகையிலும் உதவி செய்ய முயன்று வருகிறது. இவ்வாரியம் 1979 ஜனவரி முதல் சமூக நலத்துறை இயக்ககத்தின் கீழ் இயங்கி வருகிறது.

(1) ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காக இயங்கும் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக, இவ்வாரியம் நிதி உதவி வழங்குகிறது. இத்திட்டத்தின் கீழ் நிதி உதவியை மானியமாகப் பெற்ற நிறுவனங்களின் எண்ணிக்கை 5.

(2) ஊனமுற்றோர் சுயமாகத் தொழில் செய்வதற்கென்று, இவ்வாரியத்தின் மூலம் மானியம் ( Grant ) வழங்கப்படுகிறது. இவ்வாரியத்தின் மூலம் சுய தொழில் செய்ய மானியம் பெற்றவர்களின் எண்ணிக்கை: 54. இந்த மானியம் பெற்றவர்கள் சுய தொழில் செய்து, வளமாக வாழ்க்கை நடத்தி வருகிறார்கள்.

(3) கால் ஊனமடைந்த ஏழைகள் சரியாக நடப்பதற்குச் செயற்கைக் கால் உறுப்புகள் வாரியத்தின் நிதி உதவியுடன் வழங்கப்படுகின்றன. வாரியத்தின் மூலம் இவ் உதவி பெற்றவர்கள்: 170 பேர்.

(4) ஊனமுற்ற இளைஞர்கள் பலர் பல பயிற்சிகளில் சேர்க்கப்படுகிறார்கள். அப்படிப் பயிற்சியில் சேர்க்கப்பட்டவர்கள்: 42 பேர்.

(5) மத்திய அரசிடமிருந்து மானியம் பெறுவதற்காகப் பரிந்துரை செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை : 8.

இவை தவிர, ஊனமுற்றோரைப் புத்தகம் கட்டும் பயிற்சியில் சேர்த்தல், தொழில் செய்வதற்கு வங்கியின் மூலம் கடன் ஏற்பாடு செய்தல், பிற தொழில் பயிற்சிகளில் சேர்த்தல், பொருத்தமான வேலைகளில் அமர்த்துதல் போன்ற பணிகளையும் ஊனமுற்றோர் மாநில வாரியம் சிறப்பாக ஆற்றிவருகிறது.

**அ. பிச்சை,**
**செயலாளர்,**
**ஊனமுற்றோர் மாநில வாரியம்.**



## 1979-80ஆம் ஆண்டில் ஊன முற்றோர் மறுவாழ்வுக்கான சிறப்புப் பணிகள் :

### பெட்டிக்கடை வைத்துத் தொழில் செய்ய உதவி செய்தல் :

*1979-80* ஆம் ஆண்டில் ஊன முற்றோர் *1000* பேருக்கு வங்கியின் மூலம் கடன் உதவிக்கு ஏற்பாடு செய்து, அதன் மூலம் அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வங்கி சுமார் ரூ.*4000*-கடனாக *4* சதவீத வட்டியில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெட்டிக்கடை வைக்கத் தகுந்த இட ஒதுக்கீடும், பெட்டிகள் செய்து கொடுப்பதும் ஆகிய பணிகளைச் சமூக நலத்துறையின் சார்பாக ஊனமுற்றோர் மாநில வாரியம் ஆற்றுகிறது.

பெட்டிக்கடை வைக்கும் ஒவ்வொரு ஊனமுற்றோருக்கும் அரசு ரூ. *500* மானியமாக வழங்குகிறது. இத்திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூ. *5,00,000*ஐ *1979-80*ல் ஒதுக்கீடுசெய்துள்ளது. இத்திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இது வரை இத்திட்டத்தால் சுமார் *137* பேர் பெட்டிக்கடை வைக்க நிதி உதவி பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. *1,980* மார்ச் இறுதிக்குள் *1,000* ஊன முற்றோர் இத்திட்டத்தால் மறு வாழ்வு அளிக்கப்படுவார்கள்.



### 1,500 பேருக்கு வேலைவாய்ப்பு :

ஊனமுற்றோர் தகுந்த பயிற்சிகள் பெற்றபின், வேலைக்காக வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். இவ்வாறு பயிற்சி பெற்ற ஊனமுற்றவர்கள் *1500* பேர் வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் பல நிறுவனங்களில் ஒரு ஆண்டிற்குப் பயிற்சியாளராக வைத்து, மேலும் பயிற்சி பெற்றபின், வேலையில் அமர்த்திக் கொள்ளும் திட்டம் செயல்படுத்தப் பட்டு வருகிறது. பயிற்சிக்காலத்தில் ஒவ்வொரு ஊனமுற்றவரும் மாதம் ரூ. *150* தமிழக அரசிடமிருந்து உதவித் தொகையாகப் பெறுவார்கள். ஓராண்டுப் பயிற்சி முடிந்தபின் வேலையில் அமர்த்திக் கொள்ளப்படுவார்கள். இத்திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு *1979-80*ஆம் ஆண்டில் ரூ. *25,88,400* ஒதுக்கீடு செய்துள்ளது.

### ஊனமுற்ற குழந்தைகளுக்குச் செயற்கைக் கால் உறுப்புகள் :

*1979*ஆம் ஆண்டு உலகெங்கும் குழந்தைகள் ஆண்டாகக் கொண்டாடப் படுகிறது. இந்த ஆண்டில் ஊனமுற்ற குழந்தைகளின் மறுவாழ்வு கருதி ஓர் சிறப்புத் திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி இவ்வாண்டில் ,கால் ஊனமுற்ற *1000* குழந்தைகளுக்குச் செயற்கைகால் உறுப்புகள் வழங்கப்பட இருக்கிறது. இதற்காகத் தமிழக அரசு *1979-80*ஆம் ஆண்டில் ரூ. *2,50,000* ஒதுக்கீடு செய்துள்ளது.

### தமிழக அரசின் தனிக்கவனம் :

சேமநல அரசு என்றால், அங்கு எல்லாருடைய முன்னேற்றமும் முறையாக அமைய வேண்டும். நலிந்தவர்களும், தாழ்ந்தவர்களும் முன்னேறுவதற்குச் சிறப்பு வாய்ப்புகளும், வசதிகளும் செய்து தரப்படவேண்டும். இதைத் தமிழக அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆகவேதான் சமுதாயத்தில் கவனிப்பாரற்றுக் கிடக்கும் ஊனமுற்றோர் மறு வாழ்வுக்காகத் தமிழக அரசு தனிக் கவனம் செலுத்தி வருகிறது.





ஊனமுற்றோரும் பிறரைப்போல் முன்னேறினால்தான் முழுமையான சமுதாய வளர்ச்சி ஏற்படும் என்பதைத் தமிழக அரசு உணர்ந்து, ஊனமுற்றோர் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

ஊனமுற்றோர் மறுவாழ்வு மூன்று வகைப்பட்டது. அவை, ஊனத்தின் தன்மையை அல்லது கடுமையைக் குறைக்கும் மருத்துவ வசதி வழங்குதல், கல்வி-பயிற்சிக்குரிய வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருதல், வேலைவாய்ப்பினை ஏற்படுத்தித் தருதல் ஆகியவை ஆகும். இத்தகைய மூன்று வழிகளிலும் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு வழங்க தமிழக அரசு முயன்று வருகிறது. இத்தகைய முயற்சிகளாலும், திட்டங்களாலும் ஊனமுற்றோர் அனைவரும் முறையாகத் தொழில் செய்யும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அதனால் அவர்களின் வாழ்வு வளமடைய வேண்டும். இதுவே தமிழக அரசின் தலையாய இலட்சியமாகும்!

# சீர்திருத்தப் பணித் துறை

எம்.கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
இயக்குநர்,
சீர்திருத்தப்பணித்துறை

தமிழ்நாடு அரசு சீர்திருத்தப் பணித்துறையின் கீழ், சிறார்கள் மற்றும் சிறுமிகளுக்கான, சீர் திருத்தப்பள்ளிகளும், வாழ் நெறியில் தம் நிலையில் தவறியபெண்களுக்கு, அவர்கள் மீண்டும் வாழ வகை செய்ய, அவர்களுக்குப் போதுமான கல்வியும், கைத் தொழிலும் கொடுத்து, பழைய படி சமுதாயத்தில் கௌரவமாக வாழ வழிவகுக்கும் அருட்கூடங்களாகத் திகழும் மகளிர் காப்பு இல்லங்களும் மற்றும் பல நிறுவனங்களும் இயங்கி வருகின்றன.

**''மகளிர் காப்பகம், சென்னை''**

அல்லவை நீங்க, நல்லவை நிலைத்திட சமூக நலத்தில் நாட்டங்கொண்ட பெரியவர்களின் அமைப்பென அன்றையச் சென்னையில் இயங்கி வந்த விழிப்புக் கழகத்தின் அமைப்பாக, 1930-ஆம் ஆண்டு முதல், பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடத்தப் பெறும் இல்லமாக, விழிப்புப் பணி இல்லமும் மகளிர் காப்பகமும் (ஸ்திரி சதனா) இயங்கி வந்தன.

இவ்வில்லம் 1948-ல் தமிழக அரசின் பொறுப்பிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1930-ஆம் ஆண்டில் ஏற்பட்ட சென்னை, பரத்தமைத் தடுப்புச்சட்டம், 1956-ஆம் ஆண்டில் மத்திய அரசினர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

இவ்வில்லத் தோற்றத்தின் முக்கியக் குறிக்கோள், பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ், அதன் பிடியில் அகப்பட்ட அபலைகள், மீண்டும் சமூகத்தாரால் கேவலப்படுத்தப்படாமல், அவர்கள் தவறிய நிலைக்கு மீண்டும் ஆட்படாது, திட்டமாகவும், உறுதியாகவும், புதிய வாழ்க்கையை மேற்கொள்ள, நல்ல சமூக அங்கத்தினராய் திகழ வழி செய்வதேயாகும். நல் வாழ்விற்கான விழிப்புணர்ச்சிகளை அவர்களுக்குள் ஏற்படச் செய்ய, கல்வியறிவும், தம் திறனில் மேம்பாடடைய தொழிற்கல்வியும் பெறச் செய்து, உடல் நலம் பெற்று, ஆரோக்கிய வாழ்வு பெற மன நல, உடல்நல சிகிச்சைகள் அளித்தும், சமய போதனைகளையும், அறிவுரைகளையும் அவர்களுக்கு அவ்வப்போது தந்தும், பெரும் பணியாற்றி வருதலும் இந்நோக்கத்தின்கீழ் அமைந்த சீரமைப்பு முறைகளாகும். அப்படி சீர் பெறச் செய்து, அவர்களை வாழ்வில் ஈடுபடுத்த ஆவன செய்வதும், அவர்களுக்கு புனர்வாழ் வளித்தலும் இத்துறையின் முக்கியக் குறிக்கோளாக மேற்கொள்ளப்படுகிறது.

**காரணம் என்ன?**

ஏன் இப்பெண்கள் இக்கதிக்கு ஆளானார்கள்? இவ்வினாவிற்கு பொதுவான காரணங்களாக இவர்கள் வாழ்க்கைக் குறிப்புகளை நோக்கும் போது கிடைக்கக் கூடிய பதில்கள் வறுமை, காதலில் தோல்வி, திருமண வாழ்வு முறிவு, குடும்பத் தலைவர் அல்லது பெற்றோர்கள் வளர்ப்பு முறையில் ஏற்படும் சிக்கல்கள், பெரியோர்களின் கவனமற்ற போக்கு, ஒருவரையொரு



வர் புரிந்து செயல்படாமை, சினிமா மோகம், ஆடம்பர வாழ்க்கை வாழ ஆசை, சுலப மான முறையில் பணம் சம்பா திக்கும் ஆர்வம் ஆகிய இவை போன்றவைகளேயாகும்.

சமூகத்தில் மதிப்பிழந்தவர்களாய், சிக்கல்களில் சிக்கித் தவித்து, தம் வசத்தை இழந்த நிலையில் தவறுக்கு ஆளாகி, பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கொணரப்படும் இப்பெண்களை, சமூக இகழ்ச்சியினின்றும் காப்பாற்ற அவர்கள் மீண்டும் புனர்வாழ்வு பெறச் செய்ய, இத்தகைய இல்லங்களின் சேவை சமூகத்திற்கு மிகவும் முக்கியத் தேவையாகிறது.

இவர்களும் ஊனமுற்றோரே. இவர்கள் உள ஊனமுற்றோர். இவர்களுக்கும் ஆதரவு தேவை. இதைக் கருதியே நமது அரசு உதவி வருகிறது. உடல் ஊனமுற்றோருக்கு உதவுவதுபோல, உளம் ஊனமுற்றோருக்கும் தமிழக அரசு தளராது உதவி செய்கிறது.

## உடல் ஊனமுற்றோர் கூட்டுறவுச் சங்கம்

பார்வை யற்றோருக்காகச் சென்னையில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்கும் வகையில் வேலை அளிப்பது இச்சங்கத்தின் நோக்கம். 18 பார்வையற்றோர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். ஒப்பந்தப் புள்ளி கேட்காமல், சென்னையிலுள்ள எல்லா அரசு அலுவலகங்களும் நாற்காலிகளுக்குப் பிரம்பு பின்னிப் பழுதுபார்க்கும் வேலையை இச்சங்கத்திற்குத் தரவேண்டும் என்ற சலுகையை அரசு அளித்துள்ளது.

**சென்னை, மயிலாப்பூரில் இயங்கும் மகளிர் பாதுகாப்பு இல்லத்தின் உட்பிரிவுகள்:—**

1. விசாரணைக்கால குற்றவாளிகள் தங்குமிடம்.
2. மகளிர் காப்பக இல்லம் (ஸ்திரி சதனா).
3. விழிப்புப்பணி இல்லம்.
4. கன்னித்தாய்மார்களின் இல்லம்
5. பிற்காப்பு விடுதி.

**விசாரணைக்கால குற்றவாளிகள் தங்குமிடம்: (பெண்கள்)**

இவர்கள், காவல்துறையினரால், பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டு நியாய மன்றங்களின் மூலமாய், இவ்வில்லத்தின் பாதுகாப்பிலும், பராமரிப்பின் கீழும் விசாரணை முடியும் வரை இருக்க வேண்டுமெனப் பணிக்கப்பட்டு, சேர்க்கப்படுவார்கள். இவர்களில் பலருக்குப் பால்வினை நோயும், மற்றும் வேறு நலக் குறைவுகளும் உண்டு. எனவே இவர்களைத் தனிக்கூடத்திலே இருக்கச் செய்வது நலம் எனக் கண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 29.6.1979 அன்று இதற்கென ரூ. 1 இலட்ச மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய கூடத்தினை மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள் சீரிய தலைமையில் திறந்து வைத்தார்கள். முன்னர் இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை 5.4.'78 அன்று மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் தலைமையில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இவ் வில்லத்தின் நீண்ட நாள் தேவையொன்று இதன் மூலம் நிறைவு செய்யப்பட்டது.

**மகளிர் காப்பகம் (ஸ்திரி சதனா இல்லம்)**

இவ்வில்லத்தில் 21 வயதுக்குட்பட்டவர்களே உள்ளனர். இவர்கள் தங்கள் பெண்மைப்பாதுகாப்பிற்காக தாங்களே விரும்பிச் சேர்ந்தவர்கள். இத்தகையோரை இவ் வில்லத்தில் சேர்ப்பதற்கு, இத்துறை இயக்குநருக்கே அதிகாரமுள்ளது. காவல்துறையினரால் அனுப்பப்படும் கடத்தப்பட்ட (Kidnapped) இளம் பெண்களும் இங்கு சேர்க்கப்படுகின்றனர்.

**மகளிர் காப்பகம் (விழிப்புப்பணி இல்லம்):**

பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் விசாரணைக்குப் பிறகு, நீதிபதிகளால் குற்றவாளிகள் எனத் தீர்மானிக்கப்பட்டு, இவ்வில்லப் பராமரிப்பின் கீழ் இருந்துவர அனுப்பப்பட்டவர்கள் இங்குள்ளனர்.

**அருள் இல்லம் எனும் கன்னித்தாய் இல்லம்:**

இவ்வில்லத்தில் 21 வயதுக்குட்பட்டவர்கள், திருமணமாகாத பெண்கள், சமூக விரோதிகளால் ஏமாற்றப்பட்டு, கன்னித்தன்மை குலைய, தாய்மையினை எய்திய கர்ப்பிணிகள் தாமாக விரும்பிச் சேர்த்துக் கொள்ளப்படுவதும், விபச்சார விடுதியில் இருந்த போது கருவுற்றவர்கள் சேர்க்கப்படுவதும், இவ்வில்லத்தில்தான். இது 1973-ஆம் ஆண்டு துவங்கப்பெற்று, தவறிய பெண்களின் பாதுகாப்பு இடமாகவும், மறுவாழ்வடைய வகை செய்யும் நல்லில்லமாகவும் இயங்கி வருகிறது. கன்னித்தாய்மார்களின் குழந்தைகள், தாயின் முழு விருப்பத்தின் பேரில், குழந்தைகள் இல்லாத பெற்றோர்களுக்கு, வளர்ப்புக் குழந்தைகளாகவும், அல்லது சிசுபோஷக சாலைகள் அல்லது பாலமந்திரம் போன்ற நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**பிற்காப்பு இல்லங்கள்:**

இவ்வில்லத்திலேயே நன்கு பயின்று தேறியவர்களும், அவர்களுள் உத்தியோகம் பெற்றிருந்தும், வெளியில், சமூகத்தில் அவர்களை ஏற்றுக் கொள்ளக்கூடியவர்கள் யாரும் இல்லாத நிலையில், அனாதைகளாக விடப்பட்ட பெண்களின் புகலிடமாகவும், குறைந்த வருவாய் உடையோர் உறைவிடமாகவும், பிற்காப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

**கல்வியும், தொழிற் பயிற்சியும்:**

சேர்க்கப்பட்ட பெண்களின் கல்வித் தகுதியும், தொழில் ஆர்

வமும், கண்காணிப்பாளராலும், பெண்கள் நல அலுவலராலும், அவர்களை நேர்காணல் செய்தல் மூலம் தெரிந்து கொள்ளப்பட்டு அவரவர்களுக்குத் தகுந்த நிலையில் கல்வியும், தொழிற் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. பெண்கள் காப்பகத் தனிப்பள்ளி 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை கல்வித் தேர்ச்சியளித்து வருகிறது. அம்பர்சர்க்கா கூடமும் நெசவுக் கூடமும் உள்ளன. மேலும் மாணவியருக்கு நூல் நூற்றலும், நெசவுத்தொழில் பயிற்சி, பாய்முடைதல் பயிற்சி, தையற்கலைத் தேர்ச்சி, சித்திரத் தையல்கலைப் பயிற்சி ஆகியவைகளைப் பெறுவதற்குப்போதுமான வாய்ப்புகள் அளிக்கின்றன.

பகுதிநேரப் பயிற்சிகளாகச் சங்கீதப் பயிற்சியும், ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு நாட்டியப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. கல்வியில் ஆர்வமும், ஊக்கமும் கொண்ட மாணவர்கள் உயர் நிலைப் பள்ளிப் படிப்பைத் தொடர உயர் நிலைப்பள்ளிக்கும் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். மற்றும் அச்சுக் கோக்கும் பயிற்சி, செவிலிப் பணியாளர் பயிற்சி இவைகளுக்கும் பயிற்சி பெற விரும்புவோரைத் தெரிந்தெடுத்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அரசு செலவில் அனுப்பப்படுகிறார்கள்.

அரசு நடத்தும் தொழில்நுட்பத் தேர்வுகளுக்கும் தெரிந்தெடுக்கப்பட்ட மாணவியர் அனுப்பப்பட்டு, அவர்களும் அத்தகைய தேர்வுகளில் வெற்றி பெற்று வருங்கால வாழ்விற்குத் தங்களைத் தயார் செய்து கொள்ள வகைகள் செய்யப்படுகின்றன.

**நீதிபோதனை:**

கல்வியுடன் இணைந்த அறநெறி முறைகளும், இறை உணர்வூட்டும் நீதிபோதனைகளும் இல்லத்தின் பணியாளர்கள் மூலமாகவும், தக்க சான்றோர் மூலமாகவும் அளிக்கப்படுகின்றன.

பண்டிகை தினங்களில் அவரவர் மதங்களைச் சார்ந்த ஆலயங்கள், தொழுகை ஸ்தலங்கள், இவற்றிற்குத் தகுந்த பாதுகாவலுடன் மாணவியர் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதனால் இல்லவாசிகள் அவரவர் மத நோக்கத்தினை நல்லுணர்வுடன் வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. பெரும் பண்டிகைகளைக் கொண்டாடுவதில் இல்லமே பங்கு கொள்ளுவதால், மதங்களினால் ஏற்படும் வேற்றுமைகளைக் களைந்து நல்லுணர்வுடன் செயல்படவும் உதவுகிறது.

**உணவும் உடையும்:**

அரசு வகுத்துள்ள உணவுத் திட்டத்தின்படி, இல்லவாசிகளுக்கு நல்ல சத்துள்ள உணவு அளிக்கப்படுகிறது. வாரமொருமுறை ஒவ்வொருவருக்கும் ஒரு முட்டை உணவின் பாகமாக தரப்படுகின்றது.

கதர், கைத்தறி ஆடைகள், படுக்கைகள் முதலியனவும் அரசு வகுத்துள்ள திட்டப்படி இல்லவாசிகள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றன.

**“உடல் ஆரோக்கியமே உள ஆரோக்கியம்”:**

இவையிரண்டும் செம்மையாக கவனிக்கப் பெறுகின்றன. உடல் ஆரோக்கியம், மருத்துவ அலுவலர், மருந்து கலக்குநர், செவிலி ஏவலர் இவர்களைக் கொண்ட அமைப்பால் நன்கு கவனித்துக் கொள்ளப்படுகிறது. சேர்க்கப்படும்போது, மருத்துவப் பரிசோதனையும், சேர்க்கப்பட்டபின், இல்லவாசிகளாகிய போது அவர்களுக்கேற்படும் உடல் நலக் கோளாறுகளைப் போக்கி, அவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தலும், இவ்வில்ல மருத்துவப் பகுதியினரால், நன்கு கவனிக்கப்பட்டு வருகிறது. பலவீனமானவர்களுக்குத் தேவையான அதிக சத்துள்ள உணவுகள் வழங்க, ஏற்பாடுகளும் மருத்துவ அலுவலரின் ஆலோசனையின் பேரில் செய்யப்படுகின்றன.

**புனர் வாழ்வு:**

சமூகத்தினரால், புறக்கணிக்கப்பட்ட பெண்களை, மேற்படி சமூகமே திரும்ப ஏற்றுக் கொள்ளும் வகையில் அவர்களைத் தயார்செய்து, நல்லவர்களாக வாழும் வகை அமைய, பயிற்சிக்குப் பின்னர், புனர்வாழ்வு அமையும் ஆரம்பமாகிறது.

சேர்க்கப்பட்ட பெண்கள் இல்லத்தில் இருக்கவேண்டிய நாட்கள் முடியும தருவாயில், மூன்று மாத காலத்திற்கு முன்னதாக, வெளியில் அனுப்பப்பட வேண்டிய பெண்களின் பெற்றோர் அல்லது உறவினர், அவர் வாழ்நிலை, இவைகளைப் பற்றிய அறிக்கையானது நன்னடத்தை அலுவலரின் வாயிலாகப் பெறப்படுகிறது. அதன் அடிப்படையில், பெற்றோரோ அல்லது உறவினரோ உள்ளவர்களை அவரவர்களின் பெற்றோர் அல்லது உறவினர்களின் பொறுப்பில் ஒப்படைக்கப்படுகிறது. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர்களைப் பற்றிய பிற்காப்பு அறிக்கைகளும், அவ்வப்போது 3 ஆண்டுகள் வரை பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

உறவினர் மற்றும் பெற்றோர் ஆகிய ஆதரவு ஏதும் இல்லாதவர்கள் விரும்பினால் திருமணம் செய்வித்தல் மூலம் ஆதரவு தேடப்பட்டு, புனர்வாழ்வும் அளிக்கப்படுகிறது. அவ்விதம் வாழ்நிலை எய்திய பல பெண்கள் இவ்வில்லத்திலிருந்து சென்று கொண்டிருக்கின்றனர். இவர்கள் ஏற்றுக் கொண்ட பொறுப்பை நன்குணர்ந்து, இல்வாழ்வைச் செவ்வனே நடத்தி வருவதுகண்டு இவ்வில்லம் பெருமிதமடைகிறது.

சமூகத்தின் ஒரு சாராரால், பெண்ணினத்திற்கு இழைக்கப்படும் தீங்கிற்கு பரிகாரம் காண நமது அரசு இச்சீரிய பணியினை இத்தகைய இல்லங்கள் மூலமாகச் செய்து, மகளிர் வாழ்வில் ஒளியேற்ற, எல்லா முயற்சிகளும் மேற்கொண்டு வருகிறது.

ஜனசமுதாயத்தின் எந்த ஓர் உறுப்பினரும் சமூகத்திற்குப் பயன்படாத வாழ்க்கையை நடத்துவது எனக்கு எப்போதுமே பிடிப்பதில்லை

— அண்ணல் காந்தியடிகள்



நீங்களே கண்டுகொள்ளுங்கள்

# மின்னலடிக்கும், ஸூப்பர் ரின் வெண்மை.. இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை







வேலை தவறாமல் உபயோகியுங்கள் ஸூப்பர் ரின், எத்தகைய வெள்ளைவெளேர் சலவை கிடைக்கிறது பாருங்கள்—இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை அது. காரணம், மேம்பட்ட வெளுப்பூட்டும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின். நீங்களே கண்டுகொள்ளுங்கள்.




## இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் விட அதிக வெளுப்பூட்டும் சக்தி.

லின்டாஸ்-RIN 34-2317 TM (RR)

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு



# ஊனமுற்றோர் நலன்

ரா. கோவிந்தராஜுலு,
உதவி இயக்குநர்,
உடல் ஊனமுற்றோர் நலம்
சமூக நலத் துறை.

தமிழ்நாட்டில் மட்டும் 1974ல் நடத்திய கணக்கெடுப்பின்படி, 2,35,000 ஊனமுற்றோர் இருப்பதாகத் தெரியவருகிறது. இதில் 89 விழுக்காட்டைச் சார்ந்தவர்கள் ரூ. 200க்கும் கீழ் மாத வருவாயுள்ள குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஆவர். இம்மாதிரி ஆயிரக்கணக்கான ஊனமுற்றவர்கள் சமூதாயத்தின் சுமைகளாக இல்லாமல் பயனுள்ள குடிமக்களாக ஆக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல பயனுள்ள திட்டங்களை அமலாக்கிக் கொண்டு வருகிறது.

**நவீன முறைப் பயிற்சி:**

சென்னை - மாமல்லபுரம் சாலையில் கோவளத்திற்கு அருகேயுள்ள முட்டுக்காடு என்னும் இடத்தினருகே சுமார் ரூ. 30 இலட்சம் செலவில் நவீனமுறைப் பயிற்சி உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது. இங்கு பலதரப்பட்ட உடல் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது எண்பதிற்கும் மேற்பட்ட ஊனமுற்றோர் இத்தொழிற்சாலையின் பணி புரிந்து வருகின்றனர். ஊனமுற்றோர் பயன்படுத்தும் முச்சக்கர வண்டிகள், பெட்டிக் கடைகள், கட்டுமான பணிகள் மற்றும் எஃகிலான பல தரப்பட்ட பொருட்களை இத்தொழிற்சாலையில் ஊனமுற்றோர் செய்து வருகின்றனர் இத்தொழிற்சாலையை மேற்கொண்டு விரிவுபடுத்தவும், இது போன்று மற்றும் இரண்டு தொழிற்சாலைகளை வேறு மாவட்டங்களில் நிறுவவும் அரசு திட்டமிட்டு வருகிறது.

**முச்சக்கர வண்டிகள்:**

இரண்டு கால்களை அறவே இழந்தவர் மற்றும் பிணி, விபத்து முதலியவற்றால் இரு கால்களின் சக்தியையும் இழந்த ஊனமுற்றோர் பயனுள்ள வாழ்க்கையை மேற்கொள்ளும் பொருட்டு, ரூ. 1000 மதிப்புள்ள முச்சக்கர வண்டிகளை தமிழ்நாடு அரசு இலவசமாக வழங்கி வருகிறது. இதுகாறும் சுமார் 4,000 மூன்று சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பு 79-80ஆம் ஆண்டில் மட்டும் 1000 முச்சக்கர வண்டிகளை அளிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

**கேட்பு உதவிச் சாதனம்:**

காது கேளாதோர் பள்ளிகளிலும் மற்றும் சாதாரண பள்ளிலும் கல்வி பயின்று வரும் காது கேளாத எளிய குடும்பத்தைச் சார்ந்த சிறார்கள் நன்கு கல்வி பயில அரசு இலவசக் கேட்பு உதவிச் சாதனங்கள் (Hearing Aid) வழங்கி வருகிறது. இது வரை 1600 கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டையொட்டி இந்நடப்பு ஆண்டில் மட்டும் 700 கருவிகள் இலவசமாக அளிக்க அரசு அங்கீகாரம் அளித்துள்ளது.

**படிப்பு உதவித் தொகை:**

இந்திய அரசின் இத்திட்டம் 1977ஆம் ஆண்டிலிருந்து சமூக நலத்துறை இயக்கத்தின் வழியாக அமலாக்கப்பட்டு வருகிறது. 14லிருந்து 30 வயதைச் சார்ந்த ஊனமுற்றோர் பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி பயிலவும், 14லிருந்து 40 வயதைச் சார்ந்தோர் தொழிற் பயிற்சி (Inplant Training) பயிலவும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. பயிலும்

படிப்பு அல்லது பயிற்சிக்கேற்றாற்போல் மாதம் ரூ. 40லிருந்து ரூ. 125- வரை இந்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதைத் தவிர, பார்வையற்றோருக்கு, தங்கள் பாடப் புத்தகங்களையும் வகுப்புக் குறிப்புக்களையும் படித்து உதவி செய்வோரை அமர்த்திக்கொள்ள தனி ஊதியம் (Readers Allowance) வழங்கப்பட்டு வருகிறது.



**மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு.....**

மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகளை நவீன முறைகளில் பயிற்றுவிக்க மற்றும் இளநிலை ஆசிரியர் பயிற்சி தேர்வு பெற்ற ஆசிரியர்களுக்குச் சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள ''பாலவிஹார் நிறுவனத்தின் வாயிலாக இப்பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சி அளிக்கும் பொருட்டு இந்நிறுவனத்திற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 45,600 மான்யமாக அரசு அளிக்கிறது.

**தனியார் சேவை நிறுவனங்களுக்கு மானிய உதவி:**

உடல் ஊனமுற்றோர் நலனுக்காகத் தன்னிச்சையாக இயங்கும் சமூக சேவை நிறுவனங்களுக்கு அவர்கள் பணியின் தரத்தை உயர்த்தவும், நிறுவனங்களை விரிவுபடுத்தவும் அரசு நிதியுதவி அளித்து வருகிறது. இதுவரை 17 நிறுவனங்களுக்குக் கட்டடங்கள் கட்டவும், பலவித உபகரணங்கள் வாங்கவும் ரூ. 3,07,000 அரசு நிதியுதவி அளித்துள்ளது.

8 முதல் 16 வயதுக்கு உட்பட்ட இளம்பிள்ளைவாதம், முடக்குவாதம், காதுகேளாமை, வாய்பேச இயலாமை, பார்வை இன்மை போன்ற பலதரப்பட்ட உடல்ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிப்பதற்காக சமூக சேவை நிறுவனங்களுக்கு ஓர் குழந்தைக்கு ரூபாய் 30 வீதம், ஆண்டுதோறும் ரூ. 40,000 மானியத் தொகையாக வழங்கப்பட்டு வருகின்றது. இதுபோன்று தொழுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ரூ. 40,000 மானியத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

**பார்வையற்ற பெண்டிர்க்கான மறுவாழ்வு இல்லம்:**

எளிய மற்றும் ஆதரவற்ற பார்வையிழந்த பெண்டிர்க்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் இந்நிலையம் சென்னையிலுள்ள சாந்தோம் நெடுஞ்சாலையில் ஏப்ரல் 1978 முதல் செயல்பட்டு வருகின்றது.

துணி நெய்தல், சாக்குக்கட்டி செய்தல் போன்ற தொழில்களில் ஆறுமாதக் காலத்திற்கு இப்பெண்டிருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் மாதம் ரூ. 50 உதவித்தொகையாகவும் இலவசமாகத் தங்க விடுதி வசதியும் செய்து தரப்பட்டுள்ளது. இந்த உதவித்தொகை கொண்டு இவர்களுக்கு உணவு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பயிற்சி முடிந்த பின்னர் இவ்வில்லத்திலேயே பணியளிக்கப்பட்டு, பணிக்கேற்றார் போல் ஊதியம் அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின்னரும் விடுதியில் தங்க விரும்புவோரிடமிருந்து அவர்களின் உணவுச் செலவிற்காக மாதம் ரூ. 25- மட்டும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**ஓய்வு ஊதியம்:**

45 வயதிற்கும் மேற்பட்ட ஆதரவற்ற உடல் ஊனமுற்றோருக்கு மாதம் ரூ. 20 ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் மாவட்ட ஆட்சியரின் வாயிலாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

**மூளை வளர்ச்சி குன்றியவருக்கு...**

பொதுவாக உடல் ஊனமுற்றோர், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையினர் என்றாலும், மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டோர் அதைவிட பின்தங்கிய நிலையினர் ஆவர். தற்போது, இத்தரப்பட்ட மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்டவர்க்குக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளிக்கும் நிலையங்கள் யாவும் தனியார் நிறுவனங்களே. இந்நிறுவனங்கள் நபர் ஒன்றுக்கு ரூ. 200-ம் அதற்கு மேலும் கட்டணங்கள் வசூலித்து வருகின்றன. ஆதலின் இந்நிறுவனங்களில்பயிற்சிபெறும் வாய்ப்பு சமுதாயத்தின் உயர் மட்டத்தில் உள்ளோருக்கு மட்டுமே கிட்டியுள்ளது. ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் கவனிப்பாரின்றி பரிதாபமான நிலையில் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு விசேடக் கவனிப்பு, கல்வி, பயிற்சி மற்றும் பராமரிப்பு அளிக்கும் நோக்குடன், மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட 100 ஏழைக் குழந்தைகளுக்கென ஒரு தனி நிலையம் இவ்வாண்டு நிறுவப்படவிருக்கிறது.

**பரிசீலனையில் உள்ள திட்டங்கள்:**

எல்லா உடல் ஊனமுற்ற மாணவர் மாணவியர் பயிற்சியாளர்களும் அவரவர் இருப்பிடத்திலிருந்து பள்ளி பயிற்சி நிலையத்திற்கு சென்று திரும்ப இலவசப் பேருந்துப் பயண வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது.

உடல் ஊனமுற்றவரை மணம் செய்து கொள்ள ஊக்குவிக்கும் பொருட்டு, ஊனமுற்றவரை மணம் புரிபவர்க்கு மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படுகின்ற வகையில் ரூ. 5,000 ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வழங்கலாமென ஒரு திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

நம் நாட்டிலேயே ஊனமுற்றோருக்கான இது போன்ற பல்வேறு திட்டங்களை வேறு எந்த மாநிலமும் செயல்படுத்துவதில்லை என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிடலாம்.

மொத்த மக்கட்தொகையில் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் பல்வகைப்பட்ட நோய்களினாலும், இறப்பின் பிடிப்பினாலும் எளிதில் பாதிக்கப்படுவதால் இவர்களை 'Vulnerable Group' என்று கூறுகிறோம். இவர்கள் துயர் துடைக்கும் பணி நம்நாட்டின் மூலை முடுக்குகளில் உள்ள எல்லாக்குழந்தைகளுக்கும் பரவலாக்கப்பட வேண்டும் என்னும் நல்லெண்ணத்தில் இந்திய அரசு 1974-ஆம் ஆண்டு பிரதமரைத் தலைவராகக் கொண்டு தேசியக் குழந்தைகள் வாரியம் ( National Children's Board ) என்னும் அமைப்பினை உருவாக்கியது.

இந்த வாரியம் குழந்தைகளுக்கான தேசியக் கொள்கை (National policy for children ) ஒன்றினை உருவாக்கியது. பதினைந்து அம்சத் திட்டமான இக் கொள்கை குழந்தைகளுக்கான அடிப்படை நல்வாழ்வையும், ஊட்டச் சத்தையும் வலியுறுத்துகின்றது. இந்த வாரியத்தின் அரும்பெரும் முயற்சியின் விளைவாகக் குழந்தையின் மொத்த வளர்ச்சிக்குத் தேவையான ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அதுவே ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமாகும். தமிழ்நாட்டில் சென்னை நகர்ப்புறத்திலும், நிலக்கோட்டை, தல்லி முதலிய கிராமப்புறங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

டாக்டர் கே. ஏ. கிருஷ்ணமூர்த்தி,
இயக்குநரும், கண்காணிப்பாளரும்

டாக்டர் இரா. துரைராசன்,
மருத்துவ அதிகாரி.
சென்னை நகர்ப்புற ஒருங்கிணைந்த
குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
குழந்தை நல ஆராய்ச்சி நிலையம்,
சென்னை



சென்னையில் இத்திட்டம் 27 குடிசை மாற்றுவாரியப் பகுதிகளில் சுமார் நூறாயிரம் மக்களுக்குப் பயன்படுகின்றது. இவர்களில் சுமார் 12,000 ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளும், 2,000 கர்ப்பிணிகளும் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் இத்திட்டத்தின் கீழ் நேரடியாகப் பயனடைவோராவர். சுமார் பதினைந்து வயது முதல் நாற்பத்திநான்கு வயதுக்குட்பட்ட பெண்டிர்களும் இத்திட்டத்தின் மூலம் மறைமுகமாகப் பயன்பெறுகின்றனர்.

**பணியாற்றுவோர்:**

ஒவ்வொரு ஆயிரம் மக்கட்தொகைக்கும் ஒரு அலுவலர் என்று 100 அங்கன்வாடி அலுவலர்கள் இத்திட்டத்தின் கீழ் பணிபுரிகின்றனர். இவர்களே இத்திட்டத்தின் உயிர்நாடிகளாவர். நூறு 'அங்கன்வாடி நிலையங்கள்' மூலமாக எல்லாப் பணிகளும் செயலாக்கம் பெறுகின்றன.

'அங்கன்வாடி நிலையங்கள்' (Anganwadi Centres) என்பவை ஒருவகையில் குழந்தைகள் காப்பகங்களேயாகும். இத்திட்டத்தின மூலம் எல்லா நல்வாழ்வுப் பணிகளும் அவரவர் வீட்டு முற்றத்திற்கு அருகிலேயே கிடைப்பதால் இக்காப்பகங்களை 'அங்கன் வாடி நிலையங்கள்' என்னும் புதுப்பெயரிட்டு அழைக்கிறோம்.

இத்திட்டம் மத்திய சமூகநலத் துறையின் சார்பாக மாநில சமூக நலத்துறையினரால் நடத்தப்பட்டாலும், இதில் நல்வாழ்வுப் பணிகள்தான் பெரும்பான்மையானவை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நல்வாழ்வுப் பணிகளை நிறைவேற்றும் பொறுப்பு அருகிலுள்ள ஆரம்பசுகாதார நிலையத்திற்கு அளிக்கப்பட்டு, அங்குள்ள பணியாளர்களின் திறமையும் குறியளவும் மேலும் சில பணியாளர்களை அமர்த்துவதன் மூலம் புலப்படுத்தப்படுகின்றன.

சென்னை நகர்ப்புறத் திட்டம், மாநக ராட்சியுடன் இணைக்கப்படாமல், எழும்பூர் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையம் மற்றும் குழந்தைகள் மருத்துவ மனையுடன் இணைக் கப்பட்டுள்ளது.

சென்னை நகர்ப்புறத் திட்டம் கோட்டூர் புரம், தாண்டவராயன் பிள்ளைச்சத்திரம், வியாசர்பாடி, கடற்கரைப் பகுதி என்ற நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பகுதிக் கும் ஒரு பகுதி மருத்துவ அதிகாரியும், முழுத் திட்டத்தையும் நிர்வகிக்க ஒரு பொறுப்பு மருத்துவ அதிகாரியும் இங்கு உள்ளனர்.

**பணிகள்**

இத்திட்டத்தின் மூலம் ஏழுவகைப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. சமூக நலத் துறையைச் சார்ந்த இத்திட்டத்தில் பெரும்பான்மையான பணிகள் நல்வாழ்வுப் பணிகளாகும் ( Health inputs )

**மருத்துவப் பரிசோதனை: (Health check-up)**

ஆறு மாதத்திற்கொரு முறை அங்கன் வாடிப் பகுதியில் உள்ள ஆறு வயதுக்குட் பட்ட அனைத்துக் குழந்தைகட்கும் மருத்துவப் பரிசோதனை செய்யப்படல் வேண்டும்.

இம்மருத்துவப் பரிசோதனை மூலம் குழந்தைகளுக்கு ஏற்படும் சிறு சிறு வியாதி களும் ஒரு பகுதியில் பரவலாகக் காணப்படும் வியாதிகளின் தன்மை, தீவிர கவனத்துக்குரிய குழந்தைகளின் நிலை, ஊட்டச்சத்து முதலி யன தெரியவருகின்றன.

இதுபோலவே கர்ப்பிணித் தாய்மார் களும், பாலூட்டும் தாய்மார்களும் அடிக்கடி நமது மருத்துவர்களாலும், எழும்பூர் மகப் பேறு மருத்துவ நிலையத்தைச் சார்ந்த மேல் பட்டப்படிப்பு பயிலும் மருத்துவர்களாலும் மருத்துவப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படு கின்றார்கள்.

**நோய்த்தடுப்புச் சிகிச்சை: (Immunisation)**

இத்திட்டத்தின் மூலம் குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசியும், பி.சி.ஜி,. அம்மைப்பால் முதலிய தடுப்பு ஊசிகளும், இளம்பிள்ளை வாத நோய்த்தடுப்புச் சொட்டு மருந்தும் அளிக்கப்படுகின்றன. போலியோசொட்டு மருந்து நமது திட்டத்தில்தான் அளிக்கப்படு கிறது என்பது பெருமைக்குரிய செய்தியாகும். இதுவரை நமது திட்டத்தில் 54,416 முறை முத்தடுப்பு ஊசியும், 53,279 முறை போலியோ சொட்டு மருந்தும் கொடுக்கப்பட்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு டெடனஸ் தடுப்பு ஊசியும் நமது திட்டத்தில் போடப்படு கிறது.

வைட்டமின் 'ஏ' குறையால் ஏற்படும் நோய்களைத் தடுக்க எல்லாக் குழந்தைகளுக் கும், ஆறு மாதத்திற்கு ஒரு முறை வைட்டமின் 'ஏ' சொட்டு மருந்து (2 இலட்சம் யூனிட்டுகள்) அளிக்கப்படுகின்றது.

**துணை உணவு அளித்தல் (Supplementary Feeding)**

இத்திட்டத்தின் தலையாய பணிகளுள் ஒன்று ஊட்டச்சத்துக் குறைவான குழந்தை களுக்கு துணைஉணவு அளித்தலாகும். மாதா மாதம் அங்கன்வாடிப் பகுதியிலுள்ள எல்லாக்



குழந்தைகளுக்கும் எடை எடுக்கப்பட்டு, எடைக் குறிப்பேட்டில் குறிக்கப்பட்டு, அந்த எடைக் குறிப்பேடுகள் தாய்மார்களிடம் கொடுக்கப்படுகின்றன. இருக்க வேண்டிய எடையில் இரண்டாம், மூன்றாம், நான்காம், நிலையிலுள்ள குழந்தைகளுக்கும், கர்ப் பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக் கும், பள்ளி முன்னிலைப் பருவக் கல்விபயிலும் குழந்தைகளுக்குமாகச் சேர்த்து, ஒவ்வொரு அங்கன்வாடியிலும் சுமார் ஒரு நூறு பேர் களுக்கு, அதாவது நமது திட்டத்தில் தினந் தோறும் சுமார் 10,000 பேர்களுக்குத் துணை உணவு அளிக்கப்படுகின்றது.

**மருத்துவச் சிகிச்சை: (Referral and curative services)**

மருத்துவச் சிகிச்சையின் முதற்படி நமது அங்கன்வாடிகளேயாகும். சாதாரண மாக அடிக்கடி ஏற்படும் வாந்திபேதி, காய்ச்சல், சளி, வெட்டுக்காயம், சொறி, சிரங்கு முதலிய நோய்களைக் குணப்படுத்த அங்கன்வாடி அலுவலர்களுக்குப் போதிய பயிற்சியும், மருந்துகள் அடங்கிய பெட்டியும் அளிக்கப்பட் டுள்ளன. தீவிர சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள் மருத்துவத்துணை நிலையங்களுக் கும் அனுப்பப்படுகின்றனர். நமது திட்டத்தில் எட்டு இடங்களில் துணை நிலையங்கள் (Sub-Centres) உள்ளன. இங்கு வாரம் இரு முறை பகுதி மருத்துவரும், துணை மருத்துவச் செவிலித் தாதியரும் குழந்தைகளுக்கு மருத் துவச் சிகிச்சையும், நல்வாழ்வுக் கல்வியும் அளிக்கின்றனர்.

துணை நிலையத்திலிருந்து அடுத்தபடி யாக நான்கு குழந்தை நல நிலையங்கள் (Peripheral paediatric centres) உள்ளன. சைதை, சூளை நிலையங்களுக்கு நமது குழந் தைகள் அவ்வப்போது சிகிச்சைக்காகச் சென்று வருகின்றன. மேல்நிலைச் சிகிச்சை நிலையமாகச் செயல்படுவது எழும்பூர் குழந்தைநல ஆராய்ச்சி நிலையமாகும். இங்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை காலையும் 7 மணி முதல் 9 மணி வரை ஐ. சி. டி. எஸ். கிளினிக் என்ற சிறப்புக் கவனிப்புப் பகுதி செயல்பட்டு வருகின்றது.

**நல்வாழ்வு மற்றும் சத்துணவுக் கல்வி (Health and Nutrition Education) ·**

இது மிக மிக முக்கியமானதொரு பணி யாகும். திங்கள், புதன், வியாழன், சனி

ஆகிய நாட்களிலும் பிற்பகலில் நமது துணை மருத்துவச் செவிலித் தாதியர் அங்கன்வாடி நிலையங்களில் நல்வாழ்வு போதனையோ அல்லது சத்துணவு பற்றிய செயல்முறை விளக்கமோ அளிக்கிறார்கள். ஒவ்வொரு செவ்வாய் பிற்பகலிலும் சிறப்பான நிகழ்ச்சி மூலம் நல்வாழ்வு போதனை நமது மருத்துவர்களாலும், பயிற்சி மருத்துவர்களாலும் அளிக்கப்படுகின்றது. இதைப் போலவே வாரம் ஒருமுறை நமது மேற்பார்வையாளர்களும் சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் நல்வாழ்வு மற்றும் சத்துணவுக் கல்வியளிக்கிறார்கள்.

**பள்ளி முன்னிலைப் பருவக்கல்வி (Non Formal Pre-School Education)**

ஒவ்வொரு அங்கன்வாடியிலும் மூன்று முதல் ஆறு வயதுக்குட்பட்ட சுமார் 40 குழந்தைகளுக்கு, அதாவது நமது திட்டத்தில் சுமார் 4000 குழந்தைகளுக்குப் பள்ளி முயன்னிலைப் பருவக் கல்வி அளிக்கப்படுகின்றது. இது முறைசாராக் கல்வியாகையால் குழந்தைகளுக்குப் பாடல்கள், கதைகள், விளையாட்டு மூலம் நல்ல பழக்க வழக்கங்களும், மன வளர்ச்சியும் அளிக்கப்படுகின்றன.

**செயல் திட்டம் :**

சென்னை நகர்ப்புறத் திட்டத்தில் தினந்தோறும் நான்கு பகுதிகளிலும் வெவ்வேறு வகையான நல்வாழ்வுப் பணிகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமை தவிர மற்றைய வேலை நாட்களில் இரண்டு பகுதிகளில் நான்கு குழந்தை நல துணை நிலையங்களும் (Sub-centres) ஒரு பகுதியில் உள்ள சுமார் ஆறு அங்கன்வாடி நிலையங்களில் மருத்துவப் பரிசோதனை நிலையம் மற்றும் நோய்த் தடுப்புச் சிகிச்சையும் (immunisation and Health check-up) மற்றொரு பகுதியில் உள்ள சுமார் ஐந்து அல்லது ஆறு அங்கன்வாடி நிலையங்களில் மருத்துவம் மற்றும் துணை மருத்துவச் செவிலித் தாதியரால் விரிவான அங்கன்வாடிப் பார்வையிடலும் (Angan wadi visits) தினந்தோறும் நடைபெறுகின்றன. ஒரேநேரத்தில் வெவ்வேறு இடங்களில் பல்வகைப்பட்ட நல்வாழ்வுப் பணிகள் நடைபெறுவது இத்திட்டத்தில்தான் என்று உறுதியாகக் கூறலாம்.



கிராமப்புறத் திட்டங்களைவிட இத்திட்டத்தில் மருத்துவர்களது அங்கன்வாடிப் பார்வையிடல் அதிக எண்ணிக்கையில் உள்ளது.

**திட்ட ஆய்வு:**

இத்திட்டம் ஒரு முன்னோடித் திட்டமாதலால் இந்திய அரசு திட்டக்குழு பத்து அங்கன்வாடிகளைத்தேர்ந்தெடுத்து, அடிக்கடி ஆய்வு செய்து வருகின்றது. மத்திய சமூக நலத்துறையில் உள்ள ஆய்வுக்குழுவும் இத்திட்டத்தை ஆய்வு செய்து வருகின்றது.

**செய்தது என்ன ?**

கடந்த ஓராண்டுக் காலத்தில் மட்டும் (1978) நம் திட்டத்தில் நடைபெற்ற பல்வேறு பணிகள் :

| | | முறைகள் |
|---|---|---|
| 1. | மருத்துவர்களால் நடத்தப்பட்ட அங்கன்வாடிகள் பார்வையிடல் ... | 619 |
| 2. | குழந்தைகளுக்குச் செய்யப்பட்ட மருத்துவப் பரிசோதனை ... | 15,680 |
| 3. | கர்ப்பிணிகளுக்குச் செய்யப்பட்ட மருத்துவப் பரிசோதனை ... | 4595 |
| 4. | துணை நிலையங்களில் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட மருத்துவச் சிகிச்சை | 41,562 |
| 5. | குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட நாக்குப்பூச்சி மருந்து சிகிச்சை ... | 4337 |
| 6. | ஐ. சி. டி. எஸ். சிறப்பு சிகிச்சைப் பிரிவில் கவனிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை ... | 1184 |
| 7. | துணை மருத்துவ செவிலித் தாதியரால் நடத்தப்பட்ட அங்கன்வாடிகள் பார்வையிடல் ... | 507 |
| 8. | மேற்பார்வையாளருடன் சேர்ந்து அங்கன்வாடிகள் பார்வையிடல் ... | 122 |
| 9. | முன்னறிவிப்பின்றி அங்கன்வாடிகளைப் பார்வையிடல் ... | 221 |
| 10. | மேற்பார்வையாளருடன் சேர்ந்த அங்கன்வாடிகளை முன்னறிவிப்பின்றிப் பார்வையிடல் ... | 25 |
| 11. | பார்வையிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை ... | 2029 |

12. மேற்பார்வையாளருடன் சேர்ந்து, பார்வையிடப் பட்ட வீடுகள். ... 47

13. அம்மைப்பால் குத்தப்பட்ட குழந்தைகளின் விகிதம். 96%

14. பி.சி.ஜி. ஊசி போடப்பட்ட குழந்தைகளின் விகிதம் 85%

15. முத்தடுப்பு ஊசி ஊக்குவிப்பு போடப்பட்ட குழந்தை களின் விகிதம் ... 74%

16. முத்தடுப்பு ஊசி 2 முறை போடப்பட்ட குழந்தை களின் விகிதம் ... 7.8%

17. முத்தடுப்பு ஊசி ஒரு முறை போடப்பட்ட குழந்தை களின் விகிதம் ... 7.9%

18. போலியோ தடுப்பு ஊக்குவிப்புச் சொட்டு மருந்துபெற்ற குழந்தைகளின் விகிதம் 74%

19. டெடனஸ் தடுப்பூசி மூன்று போடப்பட்ட கர்ப்பிணிகள் விகிதம் ... 30%

20. டெடனஸ் தடுப்பூசி இரண்டு போடப்பட்ட கர்ப்பிணிகள் விகிதம் ... 28%

21. டெடனஸ் தடுப்பூசி ஒன்று போடப்பட்ட கர்ப்பிணிகள் விகிதம் ... 39%

22. குழந்தைகளின் ஊட்ட உணவுத் தன்மை

| | ஜனவரி 79 | செப்டம்பர் 76 |
|---|---|---|
| | சதம் | சதம் |
| நல்ல எடையுள்ள குழந்தைகள் (Normal) | 27.2% | 22.1% |
| முதல் நிலை ஊட்டக் குறைவு (Grade I) | 36.2% | 29.4% |
| இரண்டாம் நிலை ஊட்டக் குறைவு (Grade II) | 30.4% | 32.1% |
| மூன்றாம் நிலை ஊட்டக் குறைவு (Grade III) | 5.2% | 12.5% |
| கடைநிலை ஊட்டக் குறைவு (Grade IV) | 1.1% | 3.7% |





23. துணை மருத்துவச் செவிலியரால் நடத்தப்பட்ட சத்துணவு விளக்கம், மற்றும் நல்வாழ்வுக் கல்வி வகுப்புகள் 156 முறைகள்

24. மருத்துவர்களும், பயிற்சி மருத்துவர்களும் பங்கு கொண்ட நல்வாழ்வுக் கல்வி சிறப்பு நிகழ்ச்சிகள் 34 முறைகள்

25. கள விளம்பர விழா (Field Publicity Function) 1

இவை தவிர யூனிசெப் நிறுவனம் வழங்கும் மாரிஸ் பேட் விருது (Maurice Pete Award) நமது குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைத்திற்கும், குழந்தைகள் மருத்துவமனைக்கும் கிடைத்திருக்கிறது என்றால் அதற்கு நமது ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டமும் ஒரு முக்கியக் காரணம்.

ஒவ்வொருவருக்கும் சுய ஒழுங்கும், சுய ஈடுபாடும் இருந்தால் இவ்வுலகில் சாதிக்க இன்னும் எவ்வளவோ இயலும் என்பதை உணர்ந்து, அனைத்து நாட்டுக் குழந்தைகள் ஆண்டில் நமது பணியைப் புதுப்பொலிவுடன் தொடரச் சூளுரை ஏற்போமாக!

# பஞ்சாபி சங்கம்

சென்னை பீட்டர்ஸ் சாலை வழியாகச் செல்பவர்களுக்கு அமரர் ''பஞ்சாப் சிங்கம்'' லாலா லஜபதிராய் நினைவுக் கட்டடத்தில் சந்தடியின்றி மகத்தான தொண்டு புரியும் பஞ்சாபி சங்கம் நினைவுக்கு வராமல் போகாது.

42 ஆண்டுகளுக்கு முன்பு சென்னையில் குடிபுகுந்த பஞ்சாபியர்களில் ஒரு சிலரின் சேவா உணர்ச்சியே இச் சங்கம் உருவாக உதவியது. சாதி, மதம், மொழிப் பிராந்திய வேற்றுமையின்றி இலாப நோக்கம் பாராமல் ஏழை மக்களிடையே கல்வியைப் பரப்புவதுதான் சங்கத்தின் முதல் குறிக்கோளாக இருந்தது. காலப் போக்கில் சமூக, மருத்துவ, கலாசாரத் துறைகளில் அது கவனம் செலுத்தி வரலாயிற்று.

இன்று நகரிலும் அதன் அருகிலும் சுமார் 37 நிறுவனங்கள் சங்கத்தின் ஆதரவில் இயங்கி வருகின்றன. முதலில் 34 மாணவிகளுடன் துவங்கிய நர்சரிப்பள்ளி நாளடைவில் ஆதர்ச வித்தியாலயா மெட்ரிக்குலேஷன் பள்ளியாக வளர்ந்தது. இதில் தற்போது 2500 மாணவிகள் கல்வி பயில்கின்றனர்.



ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தியாகராயநகரில் சங்கம் ஆண்களுக்கான மேல் நிலைப் பள்ளியைத் துவக்கியது.

இடம் கிடைக்காமல் தவிக்கும் மாணவ மாணவிகளின் தேவையைச் சமாளிக்க அனைத்து நாட்டுக் குழந்தைகளின் ஆண்டான இவ்வாண்டில் சுமார் 2000 மாணவிகளுக்குக் கல்வி போதிக்கக் கூடிய மெட்ரிக்குலேஷன் மேல் நிலைப் பள்ளி ஒன்று இராயப்பேட்டை பாலாஜி நகரில் ரூபாய் 5 இலட்சம் செலவில் உருவாகி வருகிறது.

உயர் கல்வியைப் பரப்பும் நோக்கத்துடன் 1977ல் மகான் குருநானக் 500வது பிறந்த தினத்தின் நினைவாக வேளச்சேரியில் குருநானக் பெயரில் சங்க ஆதரவுடன் கல்லூரி செயல்பட்டு வருகிறது.

பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலையின்றித் தவிக்கும் ஏழைப் பெண்களுக்கு (வயது 18-30) உதவச் சங்கம் அவர்களுக்கென தொழில் பயிற்சி நிலையத்தைச் சங்கம் நடத்தி வருகிறது. புகைப்படம் எடுத்தல், தையற் கலை, உடைகள் தயாரிப்பு, பின்னல் வேலை, பொம்மைத் தயாரிப்பு, அச்சுக் கோத்தல் (கம்போசிங்), பைண்டிங் போன்ற தொழில்களில் 200 பெண்கள் மாதம் ரூபாய் 15 உபகாரச் சம்பளத்துடன் இதில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தட்டெழுத்து, சுருக்கெழுத்துப் பயிற்சி, வணிக இயல் பாட போதனை அளிக்கும் பல தொழில் பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது. பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூபாய் 15 உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

கணவனை இழந்த அல்லது கைவிடப்பட்ட அல்லது விவாகரத்து செய்யப்பட்ட திக்கற்ற பெண்களுக்கான மறு வாழ்வு நிலையம் ஒன்று மயிலையில் இவ்வாண்டு முதல் செயல்படுகிறது. இங்கு 40 பெண்களுக்கு இலவச உணவு, உடையுடன் அச்சுக் கோத்தல், அச்சுப்பிழை திருத்தல், புத்தக பைண்டிங், தையற் கலையில் 6 மாதக் காலப் பயிற்சி தரப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் இவர்களுக்குச் சங்கம் நடத்தும் அச்சுக் கூடம், உடை தயாரிப்பு நிலையம் ஆகியவற்றில்



மாதம் குறைந்த பட்சம் ரூபாய் 150 ஊதியத்துடன் வேலை வசதியும் அளிக்கப்படுகிறது. பயிற்சியைப் பூர்த்தி செய்த பெண்கள் சொந்தமாகத் தொழில் நடத்த மத்திய அரசு ஒவ்வொருவருக்கும் ரூபாய் 500 வரை நிதி உதவி புரிகிறது.

ஆதரவற்ற குழந்தைகளும், பெற்றோர் பாதுகாப்பின்றித் தவிக்கும் குழந்தைகளும், வேலை செய்யும் பெண்களது குழந்தைகளும் ஆக சுமார் 45 குழந்தைகள் வளர்க்கப்படுகின்றனர். இந்தக் குழந்தைகள் பராமரிப்புக்காக வளர்ப்புப் பெற்றோர்களுக்கு மாதம் ரூ. 75 உதவித்தொகை கொடுக்கப்படுகிறது.

கல்வி, தொழில் துறைப் பணியுடன் நில்லாமல் நோய் தீர்க்கும் சேவையிலும் சங்கம் ஈடுபட்டுள்ளது. பீட்டர்ஸ் சாலையில் தர்ம சிந்தனையாளர் 'திங்கராதலிப்' பெயரில் இலவச மருத்துவ மனையைச் சங்கம் நடத்தி வருகிறது.

குழந்தைகளின் உடல் நலனைப் பேணிக்காக்கும் பொருட்டு சென்னை அருகேயுள்ள சோளிங்கநல்லூரில் குழந்தைகளுக்கான மருத்துவமனையைச் சங்கம் ஏற்படுத்தியுள்ளது.

நகரில் அரசு, தனியார் அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதியொன்றைச் சங்கம் கடந்த 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இதில் 66 பெண்கள் தங்கி உள்ளனர்.

பள்ளிப் பாடப் புத்தகங்களை விலை கொடுத்து வாங்க இயலாத ஏழை மாணவ மாணவிகளுக்கு உதவ விஜயநகரம் மகாராணி வித்தியாவதி நினைவைப் போற்றும் வகையில் புத்தக வங்கியைச் சங்கம் நிறுவியுள்ளது. நகரிலுள்ள 30 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 500 ஏழை மாணவர்களுக்கு ரூபாய் 15,000 செலவில் புத்தகங்களை வழங்கி வருகிறது.

# நலிவுற்றோர் துயர் துடைக்கும்



1978-79-ஆம் ஆண்டு பள்ளி செல்லும் ஏழைக் குழந்தைகளில் காது கேளாதவருக்கு ரூ. 1.20 இலட்சம் செலவில் காது கேட்கும் கருவிகள் 300 வழங்கப்பட்டன. இந்த ஆண்டு குழந்தைகள் ஆண்டாக இருப்பதால் மேலும் 700 சேர்த்து காது கேட்கும் கருவிகள் 1,000 வழங்கப்பட இருக்கின்றன.

பெருந்தலைவர் காமராஜ் முதல்வராக இருந்தபோது 1—4—1962 முதல், வயதானவர்களுக்கு ரூ. 20/- ஓய்வு ஊதியமாக வழங்கப்பட்டது. ஏறக்குறைய 17 ஆண்டுகளுக்குப்பின் தற்பொழுது இந்தத் தொகை ரூ. 25/- ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர இந்த ஆண்டிலிருந்து பொங்கல் மற்றும் சுதந்தரத் திருநாளில் இவர்களுக்குச் சேலைகள், வேட்டிகள் ஆகியவை வழங்கப்படுகின்றன. இந்த வயது 1978-79-ஆம் ஆண்டு 45-ல் இருந்து 40 ஆகக் குறைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.





ரூ. 25,00,000 செலவில் 20,000 பெண்கள் வீட்டில் இருந்தவாறு கைத்தொழில்களில் ஈடுபட்டு வறுமையைப் போக்கும் திட்டம் தற்பொழுது செயல்பட்டு வருகின்றது. இந்தத் திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட கைத்தொழில்கள் அவர்களுக்குக் கற்றுத்தரப்படுகின்றன :

1. சாக்குத் துண்டு தயாரித்தல்.
2. காகித உறைகள் செய்தல்.
3. நூல் நூற்றல்.
4. தீப்பெட்டி செய்தல்.
5. பாய் பின்னுதல்.
6. மூங்கில் கூடை செய்தல்
7. பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல்.
8. பருப்பு வகைகளில் பொடிகள் தயாரித்தல்.
9. பாட நோட்டுப் புத்தகங்கள் தைத்தல்.
10. 'ஜெம்' கிளிப்புகள் தயாரித்தல்.



1978-79-ஆம் ஆண்டில் முதல் முறையாக ரூ. 12,500 செலவில் 50 ஊன்றுகோல்கள் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன. நடப்பு ஆண்டில் ரூ. 2.50 இலட்சம் செலவில் 1,000 ஊன்றுகோல்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.



ஆண்டு வருமானம் ரூ.3,000-க்குக் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளில் ஒருவருக்கு இலவச பாடபுத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் 1978-79-ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் பயன் அடைந்துள்ளனர். 1979-80 கல்வி ஆண்டிலும் இத்திட்டம் அமலாக்கப்பட இருக்கின்றது.



3,000/- ரூபாய்க்குக் குறைவாக ஆண்டு வருமானமுடைய குடும்பத்தைச் சேர்ந்த 16 முதல் 30 வயது வரையுள்ள பெண்கள் தட்டெழுத்து, சுருக்கெழுத்து போன்ற வேலை வாய்ப்புத் தொழில்களில் பயிற்சிபெற பயிற்சியாளர் ஒருவருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 150/- வீதம் 1,000 ஏழைப் பெண்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்திற்கு 1977-78-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 1978-79-லும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டது.



1,000 குழந்தைகள் பயனடையத் தக்க அளவில் அனாதை விடுதி நான்கு தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



1978-79-ஆம் ஆண்டில் பார்வை இழந்த 40 மகளிர் தங்கும் வசதியுடன் கூடிய பார்வையிழந்தோர் மறுவாழ்வு இல்லத்தைத் தமிழ்நாடு அரசு நிறுவியுள்ளது. இந்த இல்லம் நடப்பு ஆண்டும் தொடர்ந்து நடத்தப்படும்.



எல்லா மாவட்டங்களிலுள்ள விதவைகளுக்கு உதவுவதற்காக சென்னை, தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் 4 வழிகாட்டி நிலையங்கள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்த வழிகாட்டி நிலையங்களின் மூலம் விதவைகளின் குழந்தைகளுக்குக் கல்வி வசதி செய்தல், விடுதிகளில் சேர்த்தல் சம்பந்தமான ஆலோசனையும் அவர்களுக்குச் சேர வேண்டிய இன்சூரன்ஸ் தொகை, வருங்கால சேமநிதி போன்றவற்றினைப் பெற உதவியும் செய்யப்படுகிறது.



சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் பணிபுரியும் பெண்களுக்காக விடுதிகள் நிறுவப்படும். இதற்காகும் செலவில் 75 சதவிகிதத்தை மத்திய அரசும், 15 சதவிகிதத்தை மாநில அரசும், மீதம் 10 சதவிகிதத்தைச் சம்பந்தப்பட்ட நகராட்சியும் ஏற்கும்.

# நற்பணிகள்

# சிறுமலர் பள்ளி



சென்னையில் பேரறிஞர் அண்ணா மேம்பாலத்தருகிலுள்ள சிறுமலர் பள்ளி, கேள்வித்திறன், பார்வைத் திறன் குறை உள்ள மூன்று குழந்தைகளோடு 1926-ல் துவக்கப்பட்டது. இன்று 800 ஊன முற்றோர்க்கு வாழ்வளிக்கிறது.

செவித்திறன், பார்வைத்திறன் குறையுள்ள ஆண், பெண் இரு பாலரும், சாதி சமய, பொருளாதார வேறுபாடின்றிச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுமானமட்டும் சாதாரணக் குழந்தைகளுக்கான பள்ளிகளில் இணைந்து கல்வி கற்க வழிகாட்டல், சமுதாயத்தில் தன்னம்பிக்கையுடன் கலந்து வாழக் கற்பித்தல், ஊனமற்ற சமுதாயத்தோடு, சமுதாயத்தில் உழைத்து நாட்டின் நல்ல குடிமக்களாக வாழ வழிகாட்டல், பெற்றோருக்கு வழிகாட்டி, தங்கள் குழந்தைகளை உருவாக்கும் பணிகளில் தங்களால் ஆவன செய்ய ஊக்கமளித்தல் ஆகியவை இப்பள்ளியின் குறிக்கோள்கள்.

இங்கு நான்கு பகுதிகள் உள்ளன - அவை:

(1) பார்வைத்திறன் குறையுடையோர் பள்ளி பயிலும் மாணவ, மாணவியர் பிரிவு.

(2) பார்வைத்திறன் குறையுடைய பெண்களின் பயிற்சியில் நெசவுத் தொழில் பிரிவு.

(3) கேள்வித்திறன் குறையுடையோர் பள்ளி பயிலும் மாணவ மாணவியர் பிரிவு.

(4) கேள்வித்திறன், பேச்சுத் திறன் அற்ற பெண்களின் தையல் கலைக்கூடப் பிரிவு.

ஏழை மாணவருக்கான தனி இல்லமும் தமிழக அரசு உதவியுடன் இயங்கி வருகிறது.

உடனுக்குடன் அவசரச்சிகிச்சை அளிக்கவும், நோயுற்ற குழந்தைகளுக்குத் தக்க சிகிச்சையளிக்கவும் பயிற்சி பெற்ற இரண்டு செவிலியர் கொண்ட மருந்தகமும் இங்கு உள்ளது.

பள்ளிப்படிப்போடு, சாதாரணக் குழந்தைகளைப்போலவே, சாரணர் படை, குருளையர் கூட்டம் போன்றவற்றிலும் இவர்கள் பங்கேற்கின்றனர்.

**பார்வைத்திறன் குறையுடையோர் பள்ளி**

ஐந்தாம் வகுப்பு வரை மாணவரும், மாணவியரும் கல்வி கற்பிக்கப்படுகின்றனர். 5-ஆம்வகுப்பு முடிந்தபின் மாணவர் அடையாறிலுள்ள புனித லூயிஸ் பள்ளிக்கு அனுப்பப்படுகின்றனர். பெண்கள் மட்டுமே மேல்படிப்பைத் தொடர்கின்றனர். 1973 முதல் உயர்நிலைப் பள்ளியாக்கப்பட்டு 1975 முதல் அரசினர் தேர்வுக்கு மாணவிகள் அனுப்பப்படுகின்றனர். இதுவரை ஆண்டுதோறும் 100 விழுக்காடு வெற்றியேபெற்று வந்துள்ளது

நெசவுத்தொழில் செய்யும் பெண்களைத்தவிர, நெசவுத் தேர்வுக்குப்பயிற்சிபெறும் பெண்களும் உள்ளனர். கூடை முடைதல், தையல் இயந்திரத்தில் சாதாரணத் தையல் தைக்கவும், ஒரு சிலர் பயிற்சி பெறுகின்றனர். தட்டெழுத்து, பாட்டு இயற்றுதல், பாட்டுக் கருவிகளை இயக்குதல் போன்றவற்றிலும் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

**கேள்வித்திறன் குறையுடையோர் பள்ளி**

தமிழக சமூக நலத்துறை பரிந்துரை செய்ததால்மத்திய அரசின் வழியாகப் பெற்ற 'ஆடியோ மீட்டர்' என்ற கருவியின் மூலம் அதற்கென அமைக்கப்பட்ட அறையில் சோதனை செய்த பின்னரே குழந்தைகள் பதிவு செய்யப்பட்டு பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். இப்பள்ளியில் எல்லா ஆசிரியைகளுமே சிறப்புப் பயிற்சி பெற்றவர்கள்.

**அட்டைப்பட விளக்கம்**

சிறுமலர் பள்ளியின் (LITTLE FLOWER CONVENT) தொழில் நுட்பப் பிரிவை மாண்புமிகு முதல்வர் பார்வையிடுதல். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் உடன் உள்ளார் (21.9.77).

தமிழ்நாட்டிலே இப்போது இத்தகைய பெண்களுக்கான உயர்நிலைப்பள்ளி இது ஒன்றுதான்.

1970 முதல், தமிழக அரசின் சிறப்பு ஆணையின்படி அரசினர் தட்டெழுத்துத் தேர்வுக்கும் அனுப்பப்படுகின்றனர்.

1951-லிருந்தே அரசின் விருப்பத்திற்கிணங்க இப்பள்ளியில் அரசின் சான்றிதழ் பெறத்தக்க ஆசிரியர் பயிற்சி நடைபெறுகிறது.

**படிப்பை முடித்த பெண்களுக்கு வழிகாட்டும் இல்லம் (Guidance Home for Adult Deaf Girls):**

இப்பள்ளியை ஒட்டியுள்ள தையல் கலைக்கூடத்தில் 110 பெண்கள் தம் கைத்திறன் கொண்டு அழகிய பூத்தையல்கள் தைத்து, வருவாயைக்கொண்டு தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர்.

சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. சமூக நலத்துறைக் கட்டடம் அருகிலும், அரசுப் பணியாளர் தேர்வுக்குழுக் கட்டடத்திலும், பல்கலைக்கழகத் தேர்வுக் கூடத்திலும் மூன்று சிற்றுண்டிச் சாலைகள் உள்ளன. இவர்கள் தாங்களே நடத்தி வருவாயைத் தங்களுக்குள்ளே பகிர்ந்து கொள்கின்றனர்.

1979 மார்ச்சில் தமிழக சமூக நலத்துறை பரிந்துரை செய்ததன் பேரில் மத்திய அரசின் 90% மான்யம் பெற்று பள்ளியிலேயே ஒரு உழைப்பாலயம் உருவாகியது. இதில் பள்ளி மாணவர், மாணவியர்கள் தையல், தட்டெழுத்து, சித்திரம், இசை இவற்றில் பயிற்றுவிக்கப்படுகின்றனர். ஏப்ரல் '79 முதல் செருப்பு லேஸில் பயிற்சி பெறுபவர்களும் வருவாய் ஈட்டுபவர்களுமாக 37 பேரும் இங்கு உள்ளனர்.

தமிழ்நாட்டுப் பள்ளிகளில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு சமூகநலத்துறை, கேள்வித்திறன் துணைக்கருவியை ஆண்டுதோறும் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் இப்பள்ளி ஏழைக் குழந்தைகளும் உதவி பெற்று ஒலியைக் கேட்டு இன்புறுகின்றனர். 1978-'79ல் ஏழைக் குழந்தைகள் விடுதிக்கான உதவித் தொகையை 18 பேரும், மேல் வகுப்பு மாணவிகள் படிப்பு உதவித்தொகையை 4 பேரும் பெற்றுப் பயனடைந்துள்ளார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



# "தென்னகம் நோக்கி..."



தென் இந்தியாவில் சுற்றுலாவை மேம்படுத்தி வளர்த்திட 'தென்னகம் நோக்கி' என்ற திட்டம் உருவாக்கப் பட்டது. அதன்படி, 30 சுற்றுலா எழுத்தாளர்கள், 6-10-79 முதல் 16-10-79 வரை தமிழக அரசின் விருந்தினர்களாக தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்தார்கள்.





# சமூக நலப் பணிகள்



ஆதரவற்ற முதியோர்க்கு ஆடை வழங்குதல்



உடல் ஊனமுற்றோர் நல்வாழ்வு.



மகளிர்க்கு வேலை வாய்ப்பு



குழந்தைகள் காப்பகம்



சத்துணவுத் திட்டம்